பக்கங்கள் : முப்பது

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 05 ஞாயிற்றுக்கிழமை (19.03.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :112

## அறுவடைத் தொழிலாளர் 6 பேர் மட்டக்களப்பில் கடத்தப்பட்டனர்!

மட்டக்களப்பு,மார்ச் 19

மட்டக்களப்பு மாவட்டத்தில் நெல் அறுவடை செய்வதற்காக வயலில் தங்கியிருந்த ஆறு தொழிலாளர்கள் கடத்திச் செல்லப்பட்டிருக்கின்றனர்.

கடந்த 12ஆம் திகதி முதல் காணாமற்போன இவர்களை ராணுவத்தினரும், துணை ஆயுதக் குழுவினரும் இணைந்து கடத்திச் சென்றிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கடத்தல் குறித்து விடுதலைப் புலிகள் கடும் கண்டனம் தெரிவித்திருக்கின்றனர்.

மட்டக்களப்பு அக்குறணை வயற் பிரதேசத்தில் வைத்தே இந்த அறுவரும் கடத்தப்பட்டிருக்கின்றனர்.

- செல்லத்தம்பி கங்கேஸ்வரன் (வயது -14) மினிமினித்தவெளி.
- சிவலிங்கம் வனேஸ்வரன் (வயது -17) மினிமினித்தவெளி.
- செல்லத்துரை ரமேஸ்வரன் (வயது -21) முள்ளிவெட்டுவான்.
- சின்னையா ராமேஸ்வரன் (வயது -18) அக்குறனை.
- குமாரியன் இளையராசா (வயது-22) அக்குறனை.
- செல்லத்தம்பி - தங்கராசா (வயது-16) அக்குறனை

(18ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் மோப்ப நாய்களின் உதவியுடன் சோதனை

யாழ்ப்பாணம்,மார்ச் 19

முகமாலை ஊடாகப் பயணிகள் எடுத்து வரும் பொதிகள் மோப்பநாய்களின் உதவியுடன் சோதனை செய்யப்படுகின்றன.

ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணத்துக்கு வந்த பயணிகள் எடுத்துவந்த பொதிகள் மோப்ப நாய்களின் உதவியுடன் சோதனையிடப்பட்டன. இதனால் பயணிகள் தாமதமாகவே சோதனைச் சாவடியை கடந்துவர நேர்ந்ததாக நேற்றுமாலை யாழ். வந்தடைந்த பயணி ஒருவர் தெரிவித்தார். (18ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல் தொடர்பான முடிவு ஓரிரு தினங்களில் தெரியும்

## தெரிவத்தாட்சி அலுவலர்களோடு ஆணையாளர் நேற்று ஆராய்வு

கொழும்பு,மார்ச்19

தமிழர் தாயகமான வடக்கு - கிழக்குப் பகுதிகளில் திட்டமிட்டபடி உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுமா என்பது தொடர்பான தமது தீர்மானத்தைத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க ஓரிரு தினங்களில் அறிவிப்பார்.

வடக்கு - கிழக்கின் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் மாவட்டச் செயலர்களோடு அந்தந்த மாவட்டங்களின் கள நிலைவரம் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் நேற்று விரிவாக ஆராய்ந்து நிலைமைகளை மதிப்பிட்டிருக்கின்றார். அவரது தீர்மானம் அடுத்த ஓரிரு தினங்களுக்குள் அறிவிக்கப்படும் என்று தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

நாடு முழுவதும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவிருக்கின்றன.

வாக்களிப்புத் தினத்துக்கு இன்னமும் பத்துத் தினங்கள் மட்டுமே உள்ள நிலையில் வடக்கு - கிழக்கு பகுதிகளில் தேர்தல் தொடர்பாகக் குழப்பமான நிலைமையே நீடிக்கின்றது.

தேர்தல் நடக்குமா இல்லையா என்ற குழப்பம் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தோரிடமும் வாக்காளர்கள் மத்தியிலும் காணப்படுகின்றது.

தமிழர் தாயகப் பிரதேசத்தில் ஏற்பட்டிருக்கும்

(18ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் பகுதியில் தேர்தல் வேண்டாம் பொலிஸ்மா அதிபர் ஆலோசனை

கொழும்பு,மார்ச் 19

புலிகளின் நிர்வாகப் பிரதேசங்களில் உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்று பொலீஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்திருக்கிறார்.

இதுதொடர்பாக தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவுக்கு பொலீஸ் மா அதிபர் கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கொத்தணி வாக்குச்சாவடிகளை அமைத்தது போன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படாத நிலையில் விடுதலைப் புலிகளின் பிரதேசத்தில் தேர்தல் நடத்தப்பட்டால் தங்களால் பாதுகாப்பு வழங்கமுடியாது என்று அந்தக் கடிதத்தில் சந்திரா பெர்னாண்டோ கூறியுள்ளார்.

(ஐ-14)

## மீன்பிடித் தடையை முழுமையாக நீக்குவது நடைமுறைச் சாத்தியமற்றது!

### இராணுவப் பேச்சாளர் தகவல்

கொழும்பு,மார்ச் 19

குடாநாட்டு கடற்பிரதேசங்களில் அமுலில் இருக்கும் மீன்பிடித் தடையை முழுமையாக நீக்குவது நடைமுறைச் சாத்தியமற்றது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்திருக்கின்றார்.

குடாநாட்டில் கடற்றொழிலாளர்கள் மீது விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகளை முற்றாக நீக்குவதற்கு கடற்றொழிலாளர் அமைப்புகள் அரசுக்கு அவகாசம் வழங்கியுள்ளன. எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்கு முன்பாக தடைகள் முற்றாக அகற்றப்படாவிட்டால் யாழ். மாவட்டத்தில் சிவில் பணிகளை

(18ஆம் பக்கம் பார்க்க)


## நாட்டுப்பற்றாளர் தினம் இன்று அனுஷ்டிப்பு

கிளிநொச்சி,மார்ச்.19

தமிழர் தாயகப் பகுதிகளில் நாட்டுப்பற்றாளர் நாள் இன்று எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்திய வல்லாதிக்க அரசுக்கு எதிராக அன்னை பூபதி உண்ணா நோன்பை ஆரம்பித்த நாள் இன்றாகும். இன்று தொடக்கம் அவரது நினைவுதினமான ஏப்ரல் 19 ஆம்

(18ஆம் பக்கம் பார்க்க)





## இணைத் தலைமை பதவியில் ஆளுநர்; நீதிமன்றம் செல்கின்றது கூட்டமைப்பு!

யாழ்ப்பாணம்,மார்ச் 19

யாழ். மாவட்டத்துக்கான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களில் ஒருவராக வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் நியமிக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்து சட்ட நடவடிக்கைகளில் இறங்க தமிழ்த் தேசியக் கூட்மைப்புத் தீர்மானித்திருக்கின்றது.

ஜனாதிபதி மேற்கொண்ட இந்த நியமனம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள் தொடர்பான நடைமுறையை மீறிச் செய்யப்பட்டது என்று தெரிவித்து நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்வதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முடிவுசெய்திருக்கின்றது.

மனுத்தாக்கல் செய்வது தொடர்பாக தற்சமயம் சட்டவல்லுநர்களுடன் ஆலோசிக்கப்பட்டு வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைமைப் பதவியில் அந்த மாவட்ட மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மக்களின் பிரதிநிதிகளே நியமிக்கப்படுவதும் அவர்கள் கூட்டங்களில் பங்குபற்றி மாவட்டத்தின்

(18ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழக் காவல்துறையின் புதிய அணிக்கான பயிற்சி

யாழ்ப்பாணம்,மார்ச் 19

தமிழீழ காவல்துறைப் படையணியின் புதிய அணிக்கான பயிற்சி நேற்று சனிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

தமிழீழ காவல்துறைப் பயிற்சிக் கல்லூரியில் கல்லூரிக் கண்காணிப்பாளர் தமிழரசன் தலைமையில் காலை 7 மணிக்கு பயிற்சி நிகழ்வுகள் ஆரம்பமாகியது.

நிகழ்வில் பொதுச் சுடரினை கிளிநொச்சி காவல்துறைக் கண்காணிப்பாளர் த[illegible] செயன் ஏற்றினார். (18ஆம் பக்கம் பாாகக)

# பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் இருந்து புலிகள் அமைப்பை விலக்குவது எப்போது சாத்தியம்?

## அமெரிக்க காங்கிரஸ் கூட்டத்தில் விளக்கம்

வாஷிங்ரன்,மார்ச் 19

விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியில் இருந்து நீக்குவது எப்போது சாத்தியம் என்பது தொடர்பாக அமெரிக்கக் காங்கிரஸ் கூட்டத்தில் விளக்கமளிக்கப்பட்டிருக்கிறது.

தென்னாசிய விவகாரங்கள் தொடர்பாக கடந்த 15ஆம் திகதி நடைபெற்ற அமெரிக்க காங்கிரஸ் கூட்டத்தில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தைச் சேர்ந்த ஆசிய நாட்டு அதிகாரி டேவிட் காம்ப் இந்த விளக்கத்தை அளித்துள்ளார்.

அவர் கூறியிருப்பதாவது:-

சிறிலங்கா அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் மீண்டும் தொடங்கியுள்ள பேச்சு மூலமாக இலங்கைத் தீவில் அமைதியும் அரசியல் நிலைத்தன்மையும் உருவாகும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

தற்போதைய அமைதிப் பேச்சுக்கள் தொடர்பில் சிறிது சாதகமான நம்பிக்கை உள்ளது. கடந்த 3 ஆண்டுகளாக பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. தற்போது இருதரப்பும் மீண்டும் பேசத் தொடங்கியிருப்பதால் அந்த சாதகமான நம்பிக்கை வெளிப்படுகிறது. கடந்த 23 ஆண்டுகால போரினால் ஒவ்வொருவரும் ஒய்ந்து போயிருக்கின்றனர்.

ஜெனீவாப் பேச்சுக்களின் முடிவுகள் உற்சாகமளிக்கும் வகையில் உள்ளன. இருதரப்பினரும் வன்முறைகளை இடைநிறுத்தி யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிக்க ஒப்புக் கொண்டுள்ளன. அரச சார்பற்ற ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவர சிறிலங்கா அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது.

விடுதலைப் புலிகளும் அரச படைகளின் மீதான தாக்குதல்களை நடத்தமாட்டோம் என்று தெரிவித்துள்ளனர். இருதரப்பினரும் மீண்டும் ஏப்ரலில் அடுத்த சுற்றுப் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

சிறிலங்கா அரசாங்கத்தை அமெரிக்கா ஆதரிப்பதில் உறுதியாக உள்ளது. 2005 ஆம் ஆண்டின் இறுதியில் விடுதலைப் புலிகளின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளின் போது சிறிலங்கா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொறுமை காத்தமைக்கு அமெரிக்கா பாராட்டுகிறது.

இனப்பிரச்சினை நீடித்தாலும் ஊடக சுதந்திரம் உட்பட வலிமையான ஜனநாயக நிறுவனங்களுடனும் பாரம்பரியத்துடனும் சிறிலங்கா முழுமையாக இயங்கிவருகிறது.

2005ஆம் ஆண்டு நவம்பரில் ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் தேர்தலைப் புறக்கணித்து வாக்காளர்களைத் தங்களது பகுதிகளில் வாக்களிக்க விடாமல் தடுத்த போதும் தேர்தல் நீதியாகவும் நியாயமாகவும் நடத்தப்பட்டதாக சர்வதேச பார்வையாளர்கள் வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

இலங்கை இனப்பிரச்சினையில் தொடர்புடைய அனைவருமே மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கு உரித்துடையவர்கள்.

தற்போதைய தாக்குதல் நடவடிக்கைகளையும் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதனையும் முற்றாக நிறுத்தியுள்ளதாக அமெரிக்காவை விடுதலைப் புலிகள் ஏற்க வைக்கும்போது அவர்கள் மீதான பயங்கரவாத முத்திரையை அகற்றுவது பற்றிப் பரிசீலிக்கப்படுவது சாத்தியம். ஆனால், அவர்களது நோக்கங்களின் நியாயப்பாட்டைத் தெரிவிக்கும் எதுவித காரணத்தையும் எமக்கு அவர்கள் தெரியப்படுத்தவில்லை.

கடந்த 2004 ஆம் ஆண்டு ஆழிப்பேரலைக்குப் பின்னர் சிறிலங்காவின் பொருளாதார நிலைமை சீரடைந்திருந்தது.

தற்போதைய உள்நாட்டு யுத்தம் நீடித்தால் சிறிலங்காவின் உள்கட்டமைப்பு, மின்சார விலை, பணவீக்கம் மற்றும் அரச மானியங்கள் ஆகியவற்றில் பாரிய சீர்குலைவைச் சந்திக்க நேரிடும் என்றார் டேவிட் காம்ப். (ஐ)

# அபிவிருத்திக் குழுத் தலைமை கபட உள்நோக்கம் கொண்டது

## தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அறிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்19

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுவினதும் இணைப்புக் குழுவினதும் தலைமை கபடத்தனமான உள்நோக்கம் கொண்டது.

தமிழ்த்தேசிய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு இவ்வாறு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

16.03.2006 அன்று யாழ். மாவட்ட செயலக மண்டப மேடையில் தமிழ் பேசும் மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாத இருவர் யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைமையில் திணிக்கப்பட்டிருந்தனர். ஜனநாயக நீரோட்டத்திற்குள் வந்துவிட்டதாகக் கூறிக்கொண்டு தமிழ் பேசும் மக்களை அழிப்பதற்கான சிங்களப் பேரினவாதத்தின் ஏவலரான தேசத் துரோகக் கும்பலின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா, மற்றையவர் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரும் முன்னைய் கடற்படை அதிகாரியுமாகிய ரியர் அட்மிரல் மொஹான் விஜயவிக்கிரம ஆகியோரே கபட உள்நோக்குடன் அரங்கேறியவர்கள்.

இவர்கள் இராணுவ கவச வாகனத்தில் அதிதீவிர பாதுகாப்புடன் செயலகத்திற்கு எழுந்தருளியிருந்தனர். எங்கும் யுத்த சன்னதத்துடன் ஸ்ரீலங்காப் படையினர் அங்கிருந்த அரசாங்க அதிகாரிகளையும், ஊழியர்களையும் அச்சுறுத்தும் விதத்தில் நடமாடினர். இவர்கள் வந்த நோக்கம் யாழ். மாவட்ட மக்களது அபிவிருத்தி சம்பந்தமானது எனக் கூறப்பட்டது. மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாத இவர்களுக்கு உச்ச பாதுகாப்பு தேவைதான் என்பது புரிந்துகொள்ளக்கூடியதே.

அரசாங்க அதிகாரிகள் அவர்கள் வந்த வாகனங்கள், பொதிகள், உணவு உட்பட்ட பார்சல்கள், பொலீஸாரின் மோப்ப நாய்கள் முகர்ந்து பார்க்க உடற்சோதனைக்குட்பட்டதன் பின்னரே கூட்டத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர். அரச ஊழியர்கள் மெல்லவும் முடியாது, கக்கவும் முடியாது மனம் வெறுத்துப்போய் வேதனையுடன் காணப்பட்டனர். இந்த மண்ணின் புதல்வர்களுக்கே உரித்தான தன்மான உணர்வு அவர்களது மனத்தில் ஆவேசத்தை ஊட்டியிருந்தாலும், பயமுறுத்தப்பட்ட நிலையில் அமைதியாக இருந்தனர்.

மாவட்ட அபிவிருத்தி என்ற போர்வையில் ஒருபோதும் சுருட்டலை மேற்கொள்ளும் பெரும் கனவுடன் இந்தப் பேரினவாத அடிவருடிகள் வந்திருக்கலாம். இவர்களைப் பொறுத்தவரையில் ஜனநாயகமும், மனித உரிமைகளும் மீறப்படுவதற்கேயானவை.

1948இன் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம், 1966 குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கை, 1992 இன் ஐ.நா. சிறுபான்மையினர் பிரகடனம், என்பன பேரினவாத தகிடுதத்தங்களுக்கு முன்னால் மௌனித்துவிட்ட நிலையில் மெய்யான அபிவிருத்தி என்பது சாத்தியமா?

சமூக, பொருளாதார, பண்பாட்டு மேம்பாடு என்பது குறித்துத் தமிழ் மக்கள் கனவிலே கூட காணமுடியாத, எட்டாக்கனியாகவே இருக்கவேண்டும் என்பதில் சிங்களப் பேரினவாதம் உறுதியாகவுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களது இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவித்து நிரந்தர சமாதானத் தீர்விற்கான நம்பிக்கையை கட்டியெழுப்ப உருவாக்கப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையை சிங்கள அரசாங்கம் முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் கிஞ்சித்தும் கரிசனை காட்டவில்லை. அத்துடன், அண்மையில் ஜெனீவா பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட ஏற்பாடுகளைக் கூட அரசாங்கம் உதாசீனம் செய்துவருகின்றது.

அந்த உடன்படிக்கையை கிடப்பில் போட்டுவிட்டுப் போர் முஸ்தீபுகளில் இறங்கியுள்ள அரசாங்கத்திற்கு முண்டுகொடுப்பவர் தமிழ் பேசும் மக்களது அபிவிருத்தியைப் பற்றிப் பேசுவது அவரது அதிகார நாற்காலியைத் தக்கவைப்பதற்கே ஆகும்.

(17ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவில் இந்து மயானத்தில் சிரமதானம்

யாழ்ப்பாணம்,மார்ச் 19

கொக்குவில் இந்து மயானத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் முதற்கட்டமாக இன்று காலை 8.30 மணி முதல் சிரமதானப் பணியினை மேற்கொள்ள கொக்குவில் இந்து மயான அபிவிருத்திச் சபையினர் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

முதற்கட்ட சிரமதானப் பணியினை நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் பொ.வைரமுத்து ஆரம்பித்து வைப்பார். இம்மயானத்தைப் பயன்படுத்தும் சகலரும் அன்றையதினம் இச்சிரமதானப் பணியில் பங்கு கொண்டு தங்களது பங்களிப்பைச் செலுத்துமாறு சபையின் தலைவர் இ.செல்வராசா கேட்டுள்ளார். (ஐ)

# தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களை ஆதரித்து நெடுந்தீவில் நேற்றுக் கூட்டம்

## சிவாஜிலிங்கம் எம்.பி.கலந்துகொண்டு உரை

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நெடுந்தீவு பிரதேச சபைக்குத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் பிரசாரக் கூட்டம் நேற்று நெடுந்தீவு பல.நோ.கூ. சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று நெடுந்தீவுக்கு விஜயம் செய்த தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கமும் இந்தக் கூட்டத்தில் பங்கு கொண்டு உரையாற்றினார்.

சிவாஜிலிங்கம் எம்.பி. தமதுரையில் -

தமிழர்கள் தமது சிந்தனைகளை - மன ஆதங்கத்தை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்த உள்ளூராட்சித் தேர்தல் மற்றொரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளது. எனவே தமிழர்கள் ஒன்றுபட்டு நின்று தமிழரசுக் கட்சிக்கு ஆதரவு வழங்கவேண்டும்.

வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்று நாங்கள் கோரியுள்ளோம். ஆனால் தேர்தலை ஒத்திவைக்க அரசு சம்மதம் தெரிவித்த போதும் எமக்கு அதில் நம்பிக்கை இல்லை.

எனவே அரசு தேர்தலை நடத்தவும் கூடும். அப்படி ஒரு நிலை ஏற்படின் எமது மக்கள் அதற்குத் தயாராக இருத்தல்வேண்டும். தேர்தல் நடைபெறும் பட்சத்தில் அனைத்து மக்களும் தமிழரசுக் கட்சிக்கு தமது பூரண ஆதரவை நல்கவேண்டும் - என்றார்.

(எ-111)




# வாழைச்சேனையில் வேட்பாளர் வீடு மீது குண்டு வீச்சு!

மட்டக்களப்பு,மார்ச் 19

மட்டக்களப்பு வாழைச்சேனையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் வீட்டின் மீது நேற்று சனிக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கைக்குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான வீடு பலத்த சேதத்துக்குள்ளானது.

தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட வீட்டின் உரிமையாளர் இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சுயேச்சையாக போட்டியிடுகிறார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக இதுவரை யாரும் கைதுசெய்யப்படவில்லை என்றும் இந்தத் தாக்குதலில் யாருக்கும் எந்த வித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் வாழைச்சேனை பொலீஸார் தெரிவித்தனர். (ஐ)

# மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச் 19

வண்ணார்பண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி பு.சண்முகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரமும் சிறப்பு விருந்தினராக மாகாணக் கல்வி அமைச்சின் நூலகப் பொறுப்பாளர் கை.நந்தகுமாரும் கலந்துகொள்வர். (ஐ-203)

# சுருக்கெழுத்தாளர் ஆட்சேர்ப்பில் புறக்கணிப்பு எனச் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம்,மார்ச் 19

நீதிமன்ற சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் ஆகிய பதவிகளுக்கான விண்ணப்பம் கோரலில் புறக்கணிப்பு நிகழ்ந்துள்ளது என்று வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அண்மையில் அகில இலங்கை ரீதியில் நீதிச் சேவை ஆணைக்குழு நீதிமன்றங்களில் எழுதுநர், சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் ஆகிய பதவிகளுக்கான விண்ணப்பங்களைக் கோரியிருந்தது.

இதில் புறக்கணிப்பு நிகழ்ந்துள்ளதாகச் சுட்டிக்காட்டி வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் ஆணைக்குழுவிற்கும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கும் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எழுதுநர், சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் போன்ற பதவிகளுக்கு விண்ணப்பங்கள் அகில இலங்கை ரீதியில் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் கோரப்பட்டுள்ளன. இப்பதவிகளுள் சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் பதவிகளுக்கான விண்ணப்பம் தொழில்நுட்பக் கல்லூரியில் பயின்று நீதிமன்றங்களில் பயிற்சி பெற்ற மாணவர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியுமெனஅறிவுறுத்தப்பட்டுள்ளன. ஆனால் எழுதுநர் பதவிக்கு யாரும் விண்ணப்பிக்க முடியுமென கோரப்பட்டுள்ளது. சுருக்கெழுத்தாளர்,தட்டெழுத்தாளர் பதவிகளுக்கு ஏனைய அரச அலுவலகங்களில் பதவிகள் தற்போது இல்லாதொழிக்கப்பட்டுள்ளன. எனவே, இப்பதவிகளுக்கு தற்போதைய சூழ்நிலையில் நீதிமன்றங்களில் மட்டுமே வெற்றிடங்கள் உள்ளன. இப்பதவிகளுக்கு அரச திணைக்களங்களினால் நடத்தப்படும் முறைசாராக் கல்விப் பிரிவில் பயிலும் மாணவர்களும் மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக்குழுவில் (TVEC)பதியப்பட்ட வேறு நிறுவனங்களில் பயிலுபவர்களும் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின்(NAITA) அனுசரணையின் கீழ் பயிலுபவர்கள் விண்ணப்பிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

எனவே, இவர்களது எதிர்கால நலன் கருதி எழுதுநர் பதவிக்கு யாரும் விண்ணப்பிப்பது போன்று சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் பதவிகளுக்கு தொழில்நுட்பக் கல்லூரியில் பயின்ற மாணவர்களுடன் ஏனைய நிறுவனங்களில் பயின்றோரும் விண்ணப்பிக்கத்தக்க வகையில் ஆவன செய்து தருமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது.

(ஐ-202)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# சிக்கலை ஏற்படுத்தும் சிங்களக் கடும்போக்கு!

தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் ஜெனீவாப் பேச்சுகளில் பங்குபற்றிய மூத்த உறுப்பினர்கள் இருவர் ஒரே மாதிரியான கருத்துகளை முன்வைத்திருக்கின்றனர்.

புலிகளின் மதியுரைஞரும் பேச்சுக்குழுத் தலைவருமான அன்ரன்பாலசிங்கம், புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோரே அவர்கள் இருவருமாவர். ஜெனீவாப் பேச்சுகளில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டை முழு அளவில் நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசுத் தரப்பு உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் - காணப்பட்ட தீர்மானங்கள் அமுல்படுத்தப்படாவிட்டால் - அடுத்த சுற்றுப் பேச்சுகளில் பங்குபற்றுவதா என்பதை விடுதலைப் புலிகள் இயக்கம் மீளாய்வு செய்யவேண்டியிருக்கும் என்று அவர்கள் இருவரும் எச்சரித்திருக்கின்றார்கள்.

அரசுப் படைகள் மற்றும் பொலீஸாருக்கு எதிரான சகல வன்முறைகளும் நிறுத்தப்படுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனப் புலிகள் தரப்பில் ஜெனீவாப் பேச்சுகளின் போது உறுதியளிக்கப்பட்டது.

அதேபோல தமிழர் தாயகப் பிரதேசத்தில் நிலை கொண்டுள்ள ஒட்டுப்படைகளின் ஆயுதங்களைக் களைந்து அவற்றை அங்கிருந்து அகற்றுவதற்கு அரசுத் தரப்பில் உறுதி கூறப்பட்டது.

புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் தாங்கள் அளித்த வாக்குறுதியைச் செம்மையாகச் செயற்படுத்துகின்றார்கள். ஜெனீவாப் பேச்சின் போது அல்ல, அதற்கு, முன்னரே - கடந்த ஜனவரி 25 ஆம் திகதி வன்னியில் நோர்வே அமைச்சர் எரிக்சொல்ஹெய்மை விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் சந்தித்த போது அளிக்கப்பட்ட வாக்குறுதிப்படியே அரசுத் தரப்புக்கு - படையினருக்கும் பொலீஸாருக்கும் - எதிரான சகல வன்முறைகளும் பெரும்பாலும் அடியோடு நிறுத்தப்பட்டுவிட்டன.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் கூட யாழ். நகருக்கு வராமல் பலாலியோடு திரும்பிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இப்போது வலு துணிச்சலாக - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு வழங்கிய பெருமளவு நிதியோடு வந்து - யாழ் நகரில் குந்தியிருந்து, நிதியை வாரி வழங்கி, ஆள்களை வளைத்துப் போடும் - எலும்புத்துண்டு எறியும் - தமது வழமையான கைங்கரியத்தை ஆரம்பித்திருக்கின்றார் என்றால், அதற்கும் கூட புலிகள் கொடுத்த வாக்குறுதி மீதான நம்பிக்கைதான் காரணமோ தெரியவில்லை.

வன்முறைகளை நிறுத்தும் புலிகளின் வாக்குறுதி நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஆனால், அரசுத் தரப்பு தான் கொடுத்த வாக்குறுதியையே மறந்துவிட்டு ஏதேதோ பேசுகிறது; எதையெதையோ செய்கிறது.

"ஆயுதக் குழுக்கள் தொடர்பான விடயங்களை அரசின் பொலீஸாரே கையாள்வர். இராணுவம் அதற்குத் தேவையில்லை" - என்று சரடு விடுகின்றார் ஜனாதிபதி மஹிந்தர்.

ஆனால் அவரின் பொலீஸ்மா அதிபரோ அல்லது பாதுகாப்பு ஆலோசகரோ தட்டைப் புரட்டிப் போட்டு வேறு கதை விடுகின்றனர்.

"ஆயுதக் குழுக்களா? எங்கே இருக்கின்றன? கருணாவா? அவர் எங்கே இயங்குகின்றார்? எனக்குக் காட்டித் தாருங்களேன்!" - என்று முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைக்கின்றார் பொலீஸ்மா அதிபர்.

புலிகளோடு இலங்கை அரசு செய்து கொண்டுள்ள யுத்த நிறுத்த ஒப்பந்தம், அதனடிப்படையில் ஜெனீவாவில் காணப்பட்ட இணக்கம் இவை எல்லாம் பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, ஜனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகர் கொட்டகதெனிய போன்றோருக்கு மறந்துவிட்டன.

"புலிகள் பயங்கரவாத இயக்கம். அத்தகைய இயக்கம் இன்னொரு இயக்கத்தின் ஆயுதங்களைக் களையும்படி கோருவதற்கு என்ன உரிமை கொண்டுள்ளது?" - என்று நியாயம் பிளக்கின்றனர் இருவரும்.

ஜெனீவாவில் காணப்பட்ட இணக்கத்தை சொல்லிலும், செயலிலும் நடைமுறைப்படுத்தும் எண்ணம் அரசுத் தரப்புக்கு கிஞ்சித்தும் கிடையாது என்பதையே அரசுத் தரப்பின் செயற்பாடுகளும் சொல் வீச்சுகளும் நிரூபித்து நிற்கின்றன.

சிங்கள அதிகார வர்க்கம் தமிழ் மக்களுக்கு நீதி வழங்க மறுத்து - நியாயம் செய்யப் பின்னடித்து - நேர்மையற்று நடந்து கொண்டதால்தான் அமைதி வழியில் இணக்கப்பாடு காண்பது கடந்த ஆறு தசாப்த காலமாக சாத்தியமற்றுப் போயிற்று; முடியாத காரியமாயிற்று.

கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் ஏமாற்றும் சிங்களத் தலைமைகளின் விட்டுக்கொடாத கடும் போக்குக் காரணமாகவே திம்புவில் தொடங்கி அண்மைக்கால சமரச முயற்சிகள் வரை அனைத்தும் தோல்வியில் முடிவடைந்தன. அவை சிக்கலடைந்து முன்னேற்றம் காணாது முடங்கிப்போனமைக்கு சிங்களத் தலைமைகளின் இத்தகைய குழப்பகரமான - கடும்போக்கான - அடக்குமுறையின்பாற்பட்ட - செயற்பாடே அடிப்படைக்காரணமாக அமைந்தது.

இப்போதும், ஜெனீவாவில் சொன்னது ஒன்று; இலங்கையில் செய்வது வேறொன்று என இரட்டை வேடம் போடுவதன் மூலம் சமரச வாய்ப்புக்கான சந்தர்ப்பத்தைக் கெடுக்கிறது மஹிந்தவின் அரசு. பரஸ்பரம், புரிந்துணர்வு, நம்பிக்கை, நல்லெண்ணம் ஆகியவற்றின் தளத்தில் கட்டியெழுப்ப வேண்டிய அமைதி முயற்சிகள் என்ற கட்டத்தை விரோதப் போக்கு, அவநம்பிக்கை, பகையுறவு, எதிர்ப்புணர்வு ஆகிய கெடுதிகளின் அடிப்படையில் அணுக முயல்கிறது மஹிந்த நிர்வாகம்.

அது மட்டுமல்ல. மஹிந்தரின் தரப்பில் மூத்த அரசியல் வாதிகளும் பாதுகாப்பு உயர் அதிகாரிகளும் ஜெனீவா இணக்கப்பாட்டை குழப்பியடிப்பது போலத் தெரிவிக்கும் கருத்துகள், மதியுரைஞர் பாலா சுட்டிக்காட்டியமை போன்று அமைதி முயற்சிகளின்பால் புலிகள் தரப்புக்கு - தமிழர் தரப்புக்கு - இருந்த கொஞ்சநஞ்ச நம்பிக்கையையும் அடியோடு தகர்த்து வருகின்றன.

புலிகளைக் கடும் சீற்றத்துக்குள் ஆழ்த்தச் செய்யும் இந்தப் போக்கு அமைதி முயற்சிகளுக்கு நல்லதல்ல. இந்தத் தடவையும் சமாதான நடவடிக்கைகள், சிங்களக் கடும் போக்கு காரணமாகக் குழம்புமானால் அதற்காகக் பெறுமதி மதிக்க முடியாத விலையை சிங்களம் கொடுத்து வருந்தவேண்டி நேரும்.

அரசியல் சுயலாபத்துக்காகவும் அடக்குமுறை எதேச்சாதிகாரச் சிந்தனைப்போக்குக்கு அடிபணிந்தும் சிங்களத் தலைமை பின்பற்றும் - பின்பற்றப்போகும் - கொள்கை நிலைப்பாடு, இலங்கைத் தீவில் இரண்டு வெவ்வேறு அரசுகளைத் தோற்றுவிக்கப் போகின்றது என்பது திண்ணம்.

# தென்மராட்சியில் 9 கிராமங்களில் இவ்வருடம் அபிவிருத்தித் திட்டங்கள்

தென்மராட்சி,மார்ச்19

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள ஒன்பது கிராம அலுவலர் பிரிவுகளில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தினர் இவ்வருடம் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

மண்டுவில்,நுணாவில் கிழக்கு, நுணாவில் மேற்கு, சரசாலை வடக்கு, கைதடி நுணாவில்,வரணி வடக்கு, கொடிகாமம் வடக்கு, கொடிகாமம் மத்தி, சங்கத்தானை ஆகிய பிரிவுகளிலேயே இந்த அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இப்பகுதிகளில் 75 அரை நிரந்தர வீடுகள், 96 தற்காலிக வசிப்பிடங்கள், 59 மலகூடங்கள், 13 பொதுக்கிணறுகள் புனரமைத்தல், 3 குழாய்க் கிணறுகள் அமைத்தல், 3 பொதுநோக்கு மண்டபங்கள் அமைத்தல்,3 பொதுமலகூடங்கள் அமைத்தல் ஆகிய அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

நுணாவில் கிழக்கு, நுணாவில் மேற்கு, சரசாலை வடக்கு ஆகிய பிரிவுகளில் அரை நிரந்தர வீடுகளும் - மண்டுவில், நுணாவில் கிழக்கு, நுணாவில், வரணி வடக்கு, கொடிகாமம் வடக்கு, கொடிகாமம் மத்தி, சங்கத்தானை ஆகிய பிரிவுகளில் தற்காலிக கொட்டில்களும் -

மண்டுவில், நுணாவில் கிழக்கு, நுணாவில் மேற்கு, சரசாலை வடக்கு ஆகிய பிரிவுகளில் மலகூடங்களும் அமைக்கப்படும்.

மண்டுவில், நுணாவில் மேற்கு, சரசாலை வடக்கு, கைதடி நுணாவில்,கொடிகாமம் வடக்கு, கொடிகாமம் மத்தி, சங்கத்தானை ஆகிய பிரிவுகளில் திறந்த கிணறு புனரமைத்தலும் கைதடி நுணாவில், கொடிகாமம் மத்தி, சங்கத்தானை ஆகிய பிரிவுகளில் குழாய்க் கிணறுகள் அமைத்தலும் - சரசாலை வடக்கு, கைதடி நுணாவில், கொடிகாமம் மத்தி ஆகிய பிரிவுகளில் பொது மண்டபங்கள் அமைத்தலும் இடம் பெறும்.

தற்காலிக வசிப்பிடங்கள் அமைக்கப்படும். நுணாவில் மேற்கு, கைதடி - நுணாவில், கொடிகாமம் மத்தி ஆகிய பிரிவுகளில் நான்கு அறைகளைக் கொண்ட பொதுமலகூடங்களும் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-117)

# சாவகச்சேரி கல்வயல் பகுதியில் தென்னை மீள் நடுகைத்திட்டம்

தென்மராட்சி, மார்ச் 19

சாவகச்சேரி, கல்வயல் பகுதியில் மானிய அடிப்படையில் தென்னை மீள்நடுகைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் எட்டுப் பரப்புக்கு மேற்பட்ட காணி வைத்திருப்போருக்கு தலா 35 தென்னங்கன்றுகள் வீதம் மீள் நடுகைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

நல்லூர் கமநல சேவைகள் நிலைய நாற்று மேடையில் உற்பத்தி செய்யப்பட்ட தென்னம்பிள்ளைகள் தென்னை பயிர்செய்கை அலுவலரினால் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

தென்னம்பிள்ளைகள் வழங்கப்பட்ட பயனாளிகளுக்கு விரைவில் உரங்கள் வழங்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

2000 ஆம் ஆண்டு யுத்த காலத்தில் இப்பகுதியில் பெருமளவில் தென்னை மரங்கள் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (த-117)

# கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் அரச ஊழியர்களிடையில் போட்டி

கோப்பாய், மார்ச் 19

அரச நிறுவனங்களிலும் இலக்கியத் துறையிலும் இணைக்கப்பட்டுள்ள நிறுவனங்களிலும் இணைக்கப்பட்டுள்ள ஏனைய நிறுவன ஊழியர்களினதும் ஆக்கத்திறன்களை வெளிக்கொணரும் வகையில் கலாசார அலுவல்கள் தேசிய மரவுரிமைகள் அமைச்சினால் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

தமிழ், சிங்கள மொழிகளிலான சிறுகதைகள், பாடல்கள், கவிதைகள், சிறுகதைகள், சிறுவர் கதைகளின் மொழிபெயர்ப்புகள் என 5 பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

சிறுகதைகள் ஆகக்கூடியது 1500 சொற்களையும் பாடல்கள்3 1/2 நிமிடங்கள் உடைய காலப்பகுதியை உள்ளடக்குவதுடன் இசை நயத்துடன் கூடிய ஒழுங்கையும் கொண்டிருக்க வேண்டும்.

கவிதைகள் ஆகக்கூடியது 10 செய்யுள் பகுதிகளை மாத்திரம் கொண்டிருத்தல் வேண்டும்.

சிறுகதைகள் 10 வயதிற்குட்பட்டவர்களுக்குரியதாயும் இலகுவான மொழி நடையிலும் இருக்கவேண்டும்.

சிறுகதைகளின் மொழி பெயர்ப்புக்கான ஆக்கங்கள் ஏதாவது ஒரு மொழியில் அமைந்துள்ள ஒரு சிறுகதையை தமிழில் அல்லது சிங்களத்தில் மட்டும் முன்னெடுத்துச் செல்லக்கூடியதாக இருக்கவேண்டும்

ஒவ்வொரு பிரிவிலும் வெற்றி பெறும் முதல் மூன்று ஆக்கங்களிற்கும் பணப்பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும். அத்துடன், மேலும் அதிசிறந்த 10 ஆக்கங்களுக்கு திறமைப் பத்திரங்களும் பணப்பரிசில்களும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆக்கங்களை உரிய திணைக்களத் தலைவரின் சிபார்சுடன் கலாசார செயலாளர், கலாசார அலுவல்கள் தேசிய மரவுரிமைகள் அமைச்சு, 8 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்திரமுல்லை என்ற முகவரிக்கு 30.04.2006 இற்கு முன்னர் அனுப்பி வைக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-72)

# வருடப் பிறப்புக்கு முன்னர் புங்குடுதீவுக்கு மின்சாரம்

புங்குடுதீவு,மார்ச் 19

புங்குடுதீவுப் பகுதிக்கு சித்திரை வருடப்பிறப்புக்கு முன்னர் மின்சாரம் வழங்க நடிவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இலங்கை மின்சார சபையினர் தெரிவித்திருக்கின்றனர்.

இதற்கென இலங்கை மின்சார சபையினரால் புங்குடுதீவில் மின்கம்பங்கள் [illegible]ப்பட்டு மின் இணைப்புக்கான கம்பிகள் பொருத்தும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இப்பகுதிக்கான மின்சாரம் நீண்டகாலமாக வழங்கப்படாதிருந்தது. மக்களின் நீண்டகால வேண்டுகோளை அடுத்து தற்போது மின்வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(த-188-204)

# மூக்குக்கண்ணாடிகள் இலவசமாக விநியோகம்

தென்மராட்சி, மார்ச் 19

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கண்பார்வையில் பாதிப்பு ஏற்பட்ட 156 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கவுள்ளனர்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் இன்று இந்த மூக்கு கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

கடந்தவாரம் நடத்தப்பட்ட கண் பரிசோதனை முகாமில் கண்பார்வையில் பாதிப்பு ஏற்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டவர்களில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 156 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளதாக கழகத் தலைவர் லயன் சி.சிவபாலசுப்பிரமணியம் தெரிவித்தார். (எ-117)

# குடாநாட்டு இளைஞர், யுவதிகளுக்கு. தொழிற் பயிற்சிகள் வழங்க ஏற்பாடு

சங்கானை,மார்ச் 19

தொழில்துறைத் திணைக்களம் யாழ். மாவட்ட இளைஞர்கள், யுவதிகளுக்குப் பல்வேறு தொழில்பயிற்சிகளை வழங்கவுள்ளது.இதற்கென போதானாசிரியர்களை இணைத்துக் கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மின் இணைப்பு, குழாய் இணைப்பு, மரவேலைப் பயிற்சி, தும்புசார் பயிற்சி, மோட்டார் வண்டி பயிற்சி, வாழைநார் உற்பத்திப் பயிற்சி, உருக்கி ஒட்டும் வேலை,பற்றிக் பிறிண்டிங், மட்பாண்ட பயிற்சி, இயந்திரப் படகு வெளியிணைப்புத் திருத்தம், கணனி வன்பொருள் பயிற்சி, அலுமினியப் பொருத்துகை, மேசன் பயிற்சி ஆகிய பயிற்சிநெறிகளே நடத்தப்படவுள்ளன. அவற்றிற்கு போதனாசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

விண்ணப்பிக்க விரும்புகின்ற போதனாசிரியர்கள் தமது விவரங்களை தொழில்துறைத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு மாவட்ட முகாமைத்துவ உதவியாளர் திருமதி பொ.பௌராஜ் கேட்டுள்ளார். (த-29-202)

## உதயவாக்கு

உள்ளத்தில் உண்மையுடையவர்கள் ஒருபோதும் தோல்வியடைய மாட்டார்கள். - *ஓர் அறிஞர்*

## நாளை

பங்குனி 06
திங்கட்கிழமை
20.03.2006
திதி : பஞ்சமி
முற்பகல் 10.36
நட்சத்திரம் : விசாகம்
காலை 06.32
சுபநேரம் : 12.18 - 01.48
ராகுகாலம் : 07.48 - 09.18
(யாவும் பழைய நேரப்படி)

# ஸ்கந்தா மாணவரின் தேவைகளை நிறைவுசெய்வதற்கு புதிய திட்டம்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கற்கும் மாணவர்களின் விசேட நலன்களைக் கருத்திற்கொண்டு 'அன்புக் கரங்கள்' எனும் தொனிப் பொருளில் விசேட செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது.

கல்லூரியில் கற்கும் மாணவர்களின் அடிப்படைத் தேவைகளை உரிய முறையில் இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் க.சிவாஜியின் நேரடிக் கண்காணிப்பில் முன்னெடுக்கப்படும் இத்திட்டத்தில் முதற்கட்டமாக மாணவர்களிடம் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டு அவற்றின் மூலம் மாணவர்களின் அடிப்படைத் தேவைகள் குறித்த விவரங்கள் திரட்டப்பட்டுள்ளன. அடிப்படைத் தேவைகள் உள்ள மாணவர்கள், வறுமைக் கோட்டின்கீழ் உள்ள மாணவர்கள் என நூறிற்கு மேற்பட்டோர் இனங்காணப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குரிய அடிப்படைத் தேவைகள் பூர்த்திசெய்யப்பட்டு அவர்களின் கல்வியில் ஆரோக்கியமான சூழலை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று கல்லூரி ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார். (த-13)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

P-4 கொம்பியூட்டர் - 1, தொலைத் தொடர்பு நிலையத்திற்குரிய ரெலிபோன் பூத் - 2, பற்றரி சாச்சர் - 1, SHARP போட்டோ கொப்பி இயந்திரம் - 1 என்பன விற்பனைக் குண்டு. தொடர்பு: சபாயோகசிங்கம், பிரதான வீதி, அச்சுவேலி. T.P.: 021 226 3418 (48125)

நல்ல நிலையிலுள்ள 59 xxxx தொடரிலக்கமுடைய டொல்பின் வான் விற்பனைக் குண்டு. தொடர்பு தொ.பே.இல.: 077 644 7329, 0602213264 (48249)

அனைத்து வகையான Windows கணனியினதும் Administrator பாஸ்வேட் உடைப்பதற்கான CD விற்பனைக்குண்டு. (100% உத்தரவாதம்) தொடர்பு: R.Satharshan. 0776687564 (48214)

JC இன பால் கறக்கும் மாடும் சினையுடன் கூடிய மாடு ஒன்றும் விற்பனைக்குண்டு. தொடர்பிற்கு: 26, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (48217)

Bajaj Palsar 180 cc 4000 Km ஓடிய மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 54, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (48248)

பைனியர் டெக் செற், டி.வி.டி. பிளையர், இல.139 தொடர் இலக்கமுடைய லான்சர் 50 மோட்டார் சைக்கிள் என்பன விற்பனைக் குண்டு. தொடர்பு: அருள், இல. 257, ஆடியபாதம் வீதி, நல்லூர். (48247)

Sharp Washing Mechine 9500 ரூபா, சைக்கிள், KTV காட்டுடன் X-Sat றீசிவர் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 521, நாவலர் மண்டபம் முன்பாக நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (48242)

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 12 Sri xxxx தொடரிலக்கமுடைய லான்சர் கார் விற்பனைக் குண்டு. தொடர்பு: 0776147201 (48199)

நல்ல நிலையிலுள்ள MAZDA 322 Model 17 - xxxx தொடரிலக்கமுடைய கார் (Brand New) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0777 398795 (48227)

## காணி விற்பனைக்கு

யாழ். நகரில் கன்னாதிட்டி வீதியில், பெருமாள் கோயிலுக்கு அருகில் ஏறக்குறைய ¾ பரப்பு நிலத்தில் அத்திபாரம் இட்ட நிலையில் கிணற்றுடன் கூடிய நிலம் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0112 454644 (48232)

பொலிகண்டி வீரபத்திரர் கோயிலுக்கும் குருநாதர் கோயிலுக்கும் அருகில் 3½ பரப்புக் காணி 'தியலம்பற்றை' விற்பனைக்குண்டு. தொடர்பு: அமிர்தா இரும்பகம், தனங்களப்பு றோட், சாவகச்சேரி. T.P.: 0776138642 (மாலை 6 மணிக்குப் பின்னர்) (48169)

திருநெல்வேலி வடக்கு, பணிக்கர் லேனில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பிற்கு: 021 222 8174 (48111)

## கடை விற்பனைக்கு

பரமேஸ்வராச் சந்தியில் கடை ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பிற்கு: T.P.: 0776321348 (48210)

## நாய்கள் விற்பனைக்குண்டு

2 வயது, 15 மாதம், 2 மாதம் ஆண் அல்ஷேசன் நாய்கள் விற்பனைக்குண்டு. (தடுப்பூசிகள் போடப்பட்டது) தொடர்புகளுக்கு: ச.தியாகராசா, 152/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி. (48232)

## வீடு, வளவு விற்பனைக்கு

பெரியவிளான், யுவானியார் கோயிலடியில் தெல்லிப்பழை வீதியில் 2½ பரப்புக் காணியும் கல் வீடும் - கீதபொன்கலன் திரேசம்மாவுடையது. தொடர்பு: தி.பிலோமினா. T.P.:0779604197 (48184)

## வான் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள வெள்ளை நிறமுடைய சுசுக்கி எவ்விறி WPJU xxxx (புதிய மொடல்) வான் விற்பனைக்குண்டு. (வீட்டுப் பாவனைக்கு உகந்தது). தொடர்பு: 0773209100 (48233)

## கடைக்கட்டடம் விற்பனைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இலங்கை வங்கிக்கும் ஹட்டன் நஷனல் வங்கிக்கும் இடையில் ஒரு பரப்பும் ஒரு குழியும் உடைய கடைத் தொகுதி விற்பனைக்குண்டு. வங்கிகளுக்கும் நிறுவனங்களுக்கும் உகந்தது. வாகனத் தரிப்பிடமும் சகல வசதிகளும் உடையது. தொடர்பு: விளம்பர இல. 2832, மே/பா. உதயன் பணிமனை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (48236)

## மோட்டர் விற்பனைக்கு

10 H-P, 7½ H-P, 20H-P என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 177, ரஜனி வைண்டிங் வேக்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (48237)

## இறைச்சிக்கோழி விற்பனை

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு:- (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (48148)

## மணமகள் தேவை

காலில் ஊனமுள்ள, 1954இல் பிறந்த, அரச உத்தியோகத்தில் இருப்பவருக்கு, ஊனமுள்ள அல்லது சுனாமியால் பாதிப்புற்றவரும் விண்ணப்பிக்கலாம். 1970இல் பிறந்த, தனியார் ஸ்தாபன உத்தியோகத்தருக்கு செவ்வாயுள்ள, கிரகபாவம் 67, இந்து கௌரவ குடும்பத்து தொழிலுள்ள மணப்பெண் தேவை. தொடர்பு: 0776146273. (48142)

சுன்னாகம், வரியப்புலம் பட்டதாரி, 1975இல் பிறந்த , உதயச்செவ்வாய், கிரகபாவம் 80 உடைய ஆசிரியருக்கு, தொழிலுள்ள அழகான மணப்பெண் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு:- 077 6140273. (48143)

கனடா குடியுரிமையுடைய யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1973, 5' 3'' உயரம், பூரட்டாதி Computer Cum ( Net Work Engineer) மணமகனுக்கு டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன் or விஞ்ஞானப் பட்டதாரி பண்புள்ள அழகிய மணமகள் தேவை. தொடர்பு : 021 222 2168, 077 6341541. (47988)

யாழ். இந்து, 1977, திருவாதிரை நட்சத்திரம்,சிங்கப்பூரில் எஞ்சினியராகத் தொழில் புரியும் யாழ். வரவுள்ள மணமகனுக்குப் பொருத்தமான, பண்பான மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். வெளிநாட்டு மணமகளும் விரும்பத்தக்கது. தொடர்பு: Email: jaffna06@yahoo.com T.P.: 0065 91482491, 0776176476 (48209)

புங்குடுதீவு இந்துகௌரவ குடும்பம், 1976, உத்தராடம், மகர ராசி, 8இல் செவ்வாய், 81 கிரகபாவம், A/L படித்த வர்த்தகர் மணமகனுக்கும், 1974 அத்தம், கன்னிராசி, 19 கிரகபாவம், 5'6'' உயரம், O/L படித்து சொந்த வியாபாரம் செய்யும் மணமகனுக்கும் படித்த அழகான மணமகள்கள் தேவை. தொடர்பு: சிவாலயா, சர்வதேச திருமண நிலையம், இல.11, யமுனா வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். T.P.: 0776528641 (48189)

நல்லூர் இந்து கௌரவ குடும்பம், 1967, மிருகசீரிடம் மிதுன ராசி, 33 கிரகபாவம், செவ்வாய் தோசமற்ற, உயரம் 5' 7'' சுயதொழில்புரியும் மணமகனுக்கு நற்குணமுள்ள, ஐந்து வயது குறைந்த, படித்த மணமகள் தேவை. தொடர்பு: இல. 9, றக்காறோட், யாழ்ப்பாணம். T.P.: 021 222 9530 (48194)

பிரித்தானியாவில் Studian visa வில் வசிக்கும் யாழ். இந்து கௌரவ குடும்பம், 1973, மூலம், தனுசு ராசி, 16¾ கிரக பாவம், உயரம் 5'4'', Engnieer (civil) பொறியியலாளராகப் பணிபுரியும் மணமகனுக்கு A/L இற்கு மேல் படித்த வெளிநாட்டில் குடியுரிமை உடைய மணப்பெண் தேவை. தொடர்பு: Shivaalaya International marrage Bureau, No. 11, Jamuna Street, Nallur, Jaffna, Sri Lanka. T.P.: 0776528641 (48216)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1977ஆம் ஆண்டு, அவிட்டம், 3ஆம் பாதம், கும்பராசி உதயத்தில் செவ்வாய், பாவம் 60, சொந்தக் கடை வைத்திருக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்பு: T.P.: 0779770002 (48238)

## மணமக்கள் தேவை

1982இல் பிறந்த, றோ.க. மதத்தைச் சேர்ந்த பெண்ணிற்கு வெளிநாட்டில் குடியுரிமை பெற்ற மணமகனும், யாழ். இந்து, 1973, 12இல் செவ்வாய், அத்த நட்சத்திரம், 1979, திருவாதிரை நட்சத்திர பெண்களுக்கு அரச உத்தியோகம் பார்க்கும் மணமகன்மாரும் 1975, ரேவதி நட்சத்திரம், 26¾ கிரக பாவமுடைய, நீர்ப்பாசனத் திணைக்களத்தில் தொழில்புரிபவருக்கும் பட்டதாரி மணமகளும் தேவை. தொடர்பு: விதூஸ், இல.44, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை. T.P.: 0776146221 (48187)

## வாடகைக்கு

வேம்படி சந்தி, முதலாம் குறுக்குத் தெரு, இல . 175 இல்அமைந்த மேல்ம வீ 9 அறைகளுடன் 2கோல் (A/C) மற்றும் சகல வசதியும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. அரசசார்பற்ற நிறுவனங்களுக்குகந்தது. தொடர்பு : க.கோபால், தொ.பே.: 077636 6020, 021 4591885. (48152)

இல.27, பொஸ்கோ பாடசாலைக்கு முன்பாக உள்ள 4 படுக்கை அறைகள், 3 கோல் (அற்றாச் பாத் றூம் வசதியுடன்) முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்ட வீடு வாடகைக்குண்டு. N.G.O. விரும்பத்தக்கது. தொடர்பு: 07711 0092, கனடா இல.: 0015197424163. (48205)

நெல்லி[illegible]ரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து 50m முன்பாக உள்ள ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் இயங்கும் கட்டடத்தொகுதியில் உள்ள இல.1 கடை (32 அடி நீளம் 11அடி அகலம்) முற்பணத்துடன் / முற்பணம் இல்லாமல் வாடகைக்கு உண்டு. தொடர்பு:-T.P. 077 3039422. (48131)

## கடை வாடகைக்கு

இல. 55, சீனியர் லேன், யாழ்ப்பாணத்தில் சகல வியாபாரமும் செய்யக்கூடிய கட்டடம் வாடகைக்குண்டு. தொடர்பு: 55,சீனியர் லேன், யாழ்ப்பாணம். (48301)

## வீடு வாடகைக்கு

கல்வியங்காடு கலைமகள் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: 0777 6176425, நேரம் பிற்பகல் 6.30 இற்குப் பின். (48246)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broilar குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 20.03.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிப்படும். எமது பருத்தித்துறை, நெல்லியடிக்கிளைகளிலும் ஐங்கரன் களஞ்சியம் திருநெல்வேலி, முருகன்- சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-48227)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1973, சித்திரை, துலாம் ராசி, 12இல் செவ்வாய், 15 கிரக பாவம், உயரம் 5'3'', சிவப்பு நிறம், B.Sc. Cima இறுதியாண்டு மணமகளுக்கும் 1973, திருவாதிரை, மிதுன ராசி, 22¾ கிரக பாவம், 5 அடி, B.S.M.S. டாக்டர் மணமகளுக்கும் வைத்தியர், கணக்காளர், வங்கி உத்தியோகத்தர், பட்டதாரி, வெளிநாடு U.K., ஆஸ்திரேலியா, கனடா மணமகன்கள் தேவை. தொடர்பு: சிவாலயா, சர்வதேச திருமண நிலையம், இல.11, யமுனா வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். T.P.: 0776528641 (48190)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1974, புனர்பூசம், மிதுன ராசி, 14¾ கிரகபாவம், 5 அடி, பொது நிறம், B.A. பட்டதாரி ஆசிரியைக்கும் 1973, மூலம், தனுசு ராசி,7இல் செவ்வாய், 55¼ கிரகபாவம், 5'2'' உயரம், வெள்ளை நிறம், B.A. பட்டதாரி ஆசிரியைக்கும் அரச, தனியார் உத்தியோகம் பார்க்கும் மணமகன் தேவை. வெளிநாடும் விரும்பத்தக்கது. தொடர்பு: சிவாலயா சர்வதேச திருமண நிலையம், இல.11, யமுனா வீதி, நல்லூர் - யாழ்ப்பாணம். (48191)

ஜேர்மன் நாட்டில் குடியுரிமையுடைய 1975, அத்தம், கன்னி ராசி, 4 இல் செவ்வாய், 48¼ கிரகபாவம், 5'2'' உயரம் M.L.T. Bio இரசாயனவியல் PHD U.K. பல்கலைக்கழகத்தில் ரியூட்டராகப் பணிபுரியும் மணமகளுக்கு டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன் மணமகன் தேவை. வெளிநாட்டு மணமகனும் விரும்பத்தக்கது. மணமகள் யாழ். வந்துள்ளார். தொடர்பு: சிவாலயா சர்வதேச திருமண நிலையம், இல.11, யமுனா வீதி, நல்லூர். T.P.: 0776528641 (48216)

நோர்வே நாட்டில் குடியுரிமையுடைய யாழ்.இந்து கௌரவ குடும்பம், மூலம், தனுசு ராசி, 7இல் செவ்வாய், சூரியன், 47¼ கிரக பாவம், 5'4'' உயரம், சிவப்பு நிறம், A/L படித்த, Bio Science Computer Engineer (net work)- Norway Ministry of Financeஇல் பணிபுரியும் மணமகளுக்கும் பட்டதாரி, வெளிநாடு, உள்நாடு மணமகன் தேவை. தொடர்பு: Shivaalaya International marrage Bureau No.11, Jamuna Street, nallur - Jaffna, Sri Lanka. T.P.: 0776528641 (48188)

**REFRESH SYSTEM**

புதிய, பழைய கணனிகள் வீட்டில் வந்து திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: (021 4591818, 077 3253104, 077 6279671)
(47878) சுதுமலை, மானிப்பாய்.

**இதோ! அதிமுக விலைக் கழிவுடன்...**

Asrock, Sony, Logitech நிறுவனங்களின் இலங்கைக்கான உத்தரவு பெற்ற முகவரான *Fine Technology Zone* நிறுவனத்தின் வடபகுதிக்கான அங்கீகரிக்கப்பட்ட முகவராகிய நாம், தற்போது கணனி மற்றும் அனைத்து உதிரிப்பாகங்களையும் அதிமுக விலைக் கழிவுடன், உங்களுக்கு வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றோம்!

| Items | Price |
|---|---|
| **ViewSonic Monitors** | |
| 15' (Black) - *(3 Years)* | 11,650/- |
| 17' (Black) - *(3 Years)* | 17,000/- |
| **Used Monitors** | |
| IBM – 15' | 6,500/- |
| IBM – 21' *(Black)* | 13,000/- |
| **Motherboards** - *(2 Years)* | |
| Asrock - *Intel Chipset (LGA 775 Socket)* | 8,000/- |
| Asrock 845i - *Intel Chipset (478 Socket)* | 7,750/- |
| Asrock 915i - *Intel Chipset (478 Socket) Dual* | 12,500/- |
| Asus - *NVIDIA Chipset (AMD – A Socket)* | 8,500/- |
| MSI - *VIA Chipset (LGA 775 Socket)* | 8,500/- |
| **VGA Cards** - *(1 Year)* | |
| Asus – 128 MB | 7,100/- |
| MSI – 64 MB | 5,500/- |
| ATI (8500) – 64 MB | 5,000/- |
| **Hard Disk Drives** | |
| Samsung - *(SATA)* 250 GB *(2 Years)* | 17,500/- |
| Hitachi - 80 GB *(1Year)* | 7,300/- |
| Seagate - 40 GB *(1Year)* | 6,500/- |
| **Memory** - *(1 Year)* | |
| Kingston – *Original* 256 MB *(400 MHz)* | 3,500/- |
| 512 MB *(400 MHz)* | 6,500/- |
| **DVD ROM** | |
| Sony - *16x - (1 Year)* | 3,750/- |
| **CD ROM** | |
| Sony - *52x - (1 Year)* | 2,000/- |
| **Combo Drive** - *(1 Year)* | |
| Sony | 5,600/- |
| Asus | 5,500/- |
| **DVD Writer** | |
| Sony - *(1 Year)* | 8,000/- |
| **CD Writer** | |
| Sony - *(1 Year)* | 3,700/- |
| **Floppy Drive** - Sony | 1,000/- |
| **Keyboards** | |
| Logitech - *(1 Year)* | 900/- |
| Perx | 550/- |
| Normal | 550/- |
| **Mouse** | |
| Optical Mouse - *(1 Year)* | 1,600/- |
| Logitech - *(1 Year)* | 500/- |
| Perx | 350/- |
| Fast Mouse | 350/- |
| **Speaker** | |
| Perx - *460 W* | 750/- |
| Labtech | 650/- |
| **Sub Woofer** | |
| Creative SBS - 2.1 | 4,100/- |
| **TV Tuner Combo** - *(1 Year)* | |
| inTex - *(IT - 3350)* | 4,800/- |
| **Flash Drive** - *(1 Year)* | |
| Janex - 256 MB | 3,000/- |
| **UPS** - *(2 Years)* | |
| Power Tree - *650 W* | 4,200/- |
| **Printers** - *(1 Year)* | |
| Epson - *LQ 300+* | 22,000/- |
| HP Laser - *1020* | 21,500/- |
| Cannon - *PIXMA iP1000* | 6,500/- |
| **Scanner** - *(1 Year)* | |
| Cannon - *LiDE 60 (High Photo Quality)* | 10,500/- |
| **Data Switch** - *(4 Ways)* | 2,500/- |
| **DVD Player** - *(1 Year)* | |
| Sony - *(DVP NS50P)* | 14,000/- |
| **Screen Filter** - *Silver* | 350/- |
| **Dust Cover** | 190/- |
| **Mouse Pad** | 40/- |
| **Blank CDs, DVDs** | |
| DVD – R (TDK) | 100/- |
| DVD + R (TDK) *with Pack* | 200/- |
| CD – R | 20/- |
| CD – RW | 150/- |
| **Power Cable** | 300/- |
| **Data Cables** | |
| USB External Cable | 250/- |
| IDE Cable *(Pack)* | 500/- |
| SATA Cable | 300/- |
| **Covers** | |
| DVD Cover | 30/- |
| CD Cover | 20/- |
| **ATX Casing** - *(LGA Support)* | |
| New Model Casing 3,000/- to 4,500/- | |

**CICS Computer Technologies**
# 87, Palaly Road, Thirunelvely, Jaffna.
Phone: 0777917610
E-mail: cicsjaffna@gmail.com

# ஜெனீவா இணக்கப்பாடுகளின் அமுலாக்கம்: தெற்குத் தலைமையில் மாற்றம் உண்டா?

## இணைப்புக்குழுவில் ஆளுநரை நுழைத்து குழப்பத்தை ஏற்படுத்திய ஜனாதிபதி

## தமிழ்த் தேசியத்துக்கு வலுச்சேர்க்க தமிழர் தேசம் தயாராகின்றது

யுத்த நிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கம் தொடர்பாக ஜெனீவாவில் எட்டப்பட்ட தீர்மானங்களின் நடைமுறையில்தான் அடுத்தகட்டப் பேச்சுத் தங்கியுள்ளது. இணக்கப்பாடு - தீர்மானங்கள் - நடைமுறைக்கு வராவிட்டால் அடுத்த கட்டப்பேச்சு நடக்காது.

இதுதான் விடுதலைப் புலிகளின் பிந்திய நிலைப்பாடாக வெளிவந்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை நோர்வேத் தரப்பையும் கண்காணிப்புச் குழுவையும் வன்னிக்கு அழைத்த விடுதலைப் புலிகளின் தலைமை இந்த நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளது.

ஜெனீவாவில் கண்ட இணக்கப்பாட்டின்படி அரசு செயற்பட்டு ஒட்டுப்படைகள், படையினர்பிரசன்னம் போன்ற விவகாரங்களுக்கு முடிவுகாணாவிட்டால் அடுத்த கட்டப்பேச்சுகளை மறு பரிசீலனை செய்ய வேண்டிய நிலை உருவாகும் என்ற செய்தியை நோர்வே ஊடாக அரசுத் தலைமைக்கு அனுப்பிவைத்துள்ளது விடுதலைப் புலிகளின் தலைமை.

ஜனவரி 23ஆம் திகதி ஜெனீவாவில் அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேரடிப்பேச்சு இடம்பெற்று - சர்வதேச அனுசரணையாளர்களின் பிரசன்னத்தில் - இருதரப்பினரும் கூட்டாக அறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

அக்கூட்டறிக்கையில் சகல வன்செயல்களையும் நிறுத்துவதாக விடுதலைப் புலிகள் இணங்கியிருந்தனர். அந்த இணக்கத்தின்படி விடுதலைப் புலிகள் செயற்படுகின்றனர். சகல வன்செயல்களையும் நிறுத்தி, சமாதானத்தின்பால் உள்ள தமது பற்றுறுதியை அவர்கள் வெளியிட்டு வருகின்றனர்.

அதற்குமாறாக இணக்கம் காணப்பட்டமைக்கு முரணாக ஒட்டுக்குழுக்களின் செயற்பாடுகளைத் தீவிரமாக்கி, யுத்தத்துக்கு விடுதலைப்புலிகளைச் சீண்டியழைக்கும் வகையிலான செயற்பாடுகளை அரசுத் தலைமை முன்னெடுத்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

போராளிகளை அச்சுறுத்தல், கொலைசெய்தல், ஆள்கடத்தல்கள், பொதுமக்கள் மீதான நெருக்குவாரங்கள், அச்சுறுத்தல்கள் என அரசும் படைத்தரப்பும் கட்டவிழ்த்துவிட்டுள்ள நடவடிக்கைகளால் விடுதலைப் புலிகள் சீற்றம் அடைந்துள்ளனர்.

அனுசரணையாளர் என்ற வகையில் நோர்வேயின் தூதர் ஹான்ஸ் பிரஸ்கரையும், கண்காணிப்பாளர் என்ற வகையில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹெறாக்கிலண்டையும் வன்னிக்கு புலிகள் அழைத்தனர்.

### நோர்வே ஊடாக அரசுக்குச் செய்தி

"ஜெனீவா உடன்பாடு கைச்சாத்திடப்பட்டபோது, அங்கு எட்டப்பட்ட தீர்மானங்கள் உடனடியாக நடைமுறைக்குவரும் என அரசுத்தரப்பு ஒப்புதல் கொடுத்திருந்தது.

"ஆனால், ஜெனீவா பேச்சுகள் முடிந்து ஒருமாதத்தை எட்டும் நிலையில் அரசு உருப்படியான செயற்பாடுகள் எதனையும் முன்னெடுக்கவில்லை.

"மாறாக ஒட்டுக்குழுக்களின் தாக்குதல்கள் தீவிரமாகிக்கொண்டிருக்கின்றன. ஜெனீவா தீர்மானங்களை நடைமுறைப்படுத்த அரசு முன்வராவிட்டால் அடுத்த கட்டப் பேச்சுக்குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

"அரசின் போக்குக்கு- தலைமைப்பீடத்தின் ஆட்சேபத்தையும் கரிசனையையும் அரசுக்குத்தெரிவியுங்கள்."

- இப்படி விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு குறித்து அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் நோர்வே த் தரப்புக்குத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஜெனிவாப்பேச்சின் பின் இடம்பெற்ற சம்பவங்களைப் பட்டியலிட்டு நோர்வேத் தூதரிடம் அவர் கையளித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் - தமிழ் மக்களின் நியாயப்பாட்டை நோர்வே மட்டுமன்றி சர்வதேச சமூகமும் கருத்தில் கொண்டு, ஜெனீவா உடன்பாட்டை நடைமுறைப் படுத்துமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். அதுவே இன்று அவசரமும் அவசியமுமான நடவடிக்கையாகும்.

யுத்த நிறுத்த சூழலுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் ஒட்டுக் குழுக்களின் ஆயுதங்களைக் களைந்து, வடக்கு - கிழக்குக்கு வெளியே அவர்களை அனுப்புவதுதான் உடனடிச் செயற்பாடாக இருக்க வேண்டும்.

ஒட்டுக் குழுக்கள்தான் சமாதானச் சூழலுக்கு அச்சுறுத்தல் என்பதைப் புரிந்து கொண்டுள்ள அமெரிக்கா உட்பட இணைத்தலைமை நாடுகளும், கண்காணிப்புக் குழுவும் அது தொடர்பாகக் கருத்துகளை வெளியிடுவதன் மூலமும் அறிக்கைகள் வெளியிடுவதன் மூலமும் எதையும் சாதிக்கமுடியாது.

### பொருளாதாரத் தடை அரசுக்கு விதிக்கவேண்டும்

பொருளாதார ரீதியில் இலங்கை அரசுக்கு எதிராக அந்த நாடுகள் தடைகளைப் போட்டு, சர்வதேச ரீதியான அழுத்தங்களை சர்வதேச சமூகம் பிரயோகிப்பதன் மூலமே இலங்கை அரசைப் பணியவைக்க முடியும்.

தெற்கில் உள்ள பிரதான கட்சிகளான, ஐ.தே.க. மற்றும் சுதந்திரக்கட்சி போன்றவை அரசியல் வரட்டுத்தனப் போக்கில், எதிர்கால அரசியல் வாழ்வை மையமாகக் கொண்டு செயற்படுவதையே அவதானிக்க முடிகின்றது.

நாட்டின் பொருளாதாரம், வேலைவாய்ப்பு, சர்வதேச உதவிகள் போன்ற விடயங்களில் இருகட்சிகளும் ஏட்டிக்குப்போட்டியாகச் செயற்படலாம். ஆனால், அதைவிட்டு, ஓர் இனத்தின் உயிர்வாழ்வோடு சம்பந்தப்பட்ட விவகாரத்தில் ஒன்றுபட்டு செயற்படுவதற்குப் பதிலாக, அந்த இனத்தின் பிரச்சினையை அரசியல் வியாபாரமாக பயன்படுத்தி, அந்த இனத்தை அழிக்க இந்த இரு பிரதான கட்சிகளும் கால்கோள் இடுகின்றனவா என்ற கேள்வி எழுகின்றது.

மறுபுறத்தில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் வழிகாட்டலில் அரசியலில் முன்நிலைக்கு வந்த பேரினவாதச் சக்திகளான ஜே.வி.பி மற்றும் ஹெல உறுமய போன்ற கட்சிகள், இது ஒரு சிங்கள நாடு என்ற கோஷத்துடன் சிங்கள மேலாண்மைப் போக்குடன் பேரினவாதத்தைக் கக்கி, அரசியலில் மேல்நிலைக்குவர முற்பட்டு நிற்கின்றன.

இந்த வகையில் இந்த நாட்டின் பிரஜைகளாக தமிழர்களை ஏற்க விரும்பாத தெற்குத் தலைமைகள், தமிழர் விவகாரத்தை வைத்து அரசியல் வியாபாரம் செய்யும் போக்குக்கு முடிவு கட்டப்படவேண்டும். சிங்களத் தலைமைகள் ஒன்றுபட்டு ஒரே அணியில் திரண்டு தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாணவேண்டும் என்று குரல் எழுப்பும்போதுதான் இந்த நாட்டில் சமாதான ` மலரும்; அமைதி நிலை திரும்பும்.

ஜெனீவாவில் எட்டப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் தெற்குத் தலைமைகள் ஒன்றுபட்டுச் செயற்பட்டு நல்லெண்ண சமிக்ஞையை தமிழ் தரப்புக்கு காட்டவேண்டும்.

அப்படி ஒரு நிலைப்பாட்டை தெற்குத் தலைமைகள் எடுக்குமாயின் நாட்டில் நிரந்தர சமாதான சகவாழ்வு ஏற்படும் சூழல் உருவாகும். இல்லாவிட்டால், இந்த நாட்டில் இரு இனங்கள் தனித்தனி அரசுகளை ஆளும் சூழல்தான் உருவாகும். இது இலங்கை வரலாற்றில் - 50 ஆண்டு கால அழிவுகளின் பின் - உருவாவது தவிர்க்க முடியாததாகிவிடும் என்பதே யதார்த்தமாகும்.

குடாநாட்டில் பணியாற்றும் 40 ஆயிரம் படையினரின் சவப்பெட்டிகள் கொழும்பு வந்தால், 4 லட்சம் தமிழரின் சவப்பெட்டிகள் கிளிநொச்சிக்கு செல்லும் என்பது புத்தசாதுக்களின் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கை வகுப்பாளர் சம்பிக்க ரணவக்கவின் கருத்து.

அதேபோல், இனவிவகாரத்தில் சமாதான சூழல் ஒன்றை உருவாக்க தன்னை அர்ப்பணித்துச் செயற்படும் நோர்வேயை வெளியேற்றி சமாதான முயற்சிகளுக்கு சமாதிகட்ட ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, அதன் செயலாளர் விமல் வீரவன்ஸ போன்றவர்கள் சபதம் எடுத்து எழும்பி நிற்கின்றனர்.

தெற்குத் தலைமைகளிடம் இந்தப்போக்கு நீடித்தால் ஜெனீவா உடன்பாடு நடைமுறைக்கு வரும் வாய்ப்புக்கள் அருகிவிடும். யுத்தம் வெடிக்கும். அதன் மூலம் ஏற்படப்போகும் எதிர்காலச் சூழலுக்கு தெற்குத்தலைமைகள் சிங்கள மக்களுக்கு பதில் கூறவேண்டிவரும்.

இந்த அபாய நிலையை உணர்ந்து, பேரினவாதக் கூச்சல்களை விட்டு யதார்த்தபூர்வமாக சிங்களத் தலைமைகள் சிந்திக்கத்தவறுமேயானால் தனியரசை தமிழ்மக்களுக்கு அவர்களே கையளிக்கும் சூழல் உருவாகும். இதை ஜே.வி.பி.என்றால் என்ன, ஜாதிக ஹெல உறுமய என்றால் என்ன, ஐ.தே.கட்சி என்றால் என்ன, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி என்றால் என்ன சிந்தித்துச் செயற்பட்டால் சரி. தெற்கில் வசிக்கும் தமிழரை சவப் பெட்டியில் அனுப்புவோம் எனக்குரல் எழுப்புவர்கள் நாட்டைக் குட்டிச்சுவரான நிலைக்குத் தள்ள உடந்தையாக இருப்பார்களே தவிர சமாதான சகவாழ்வுடன் கூடிய நாட்டைப்பார்க்கமாட்டார்கள். இதுதான் யதார்த்தம்.

இந்த நிலையில் ஜெனீவாவில் எட்டப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் அக்கறைகாட்டாத ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வடக்கு - கிழக்கில் ஏதோ அபிவிருத்திகளை முன்னெடுக்க முனைபவர் போல தனது செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றார்.

### இணைப்புக்குழுவும் ஆளுநர் பிரவேசமும்

யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திணைக்களத் தலைவர்களுடன் ஆராய்ந்து திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாக முடிவுகளை எடுக்கும் குழுதான் இணைப்பு குழு. அந்தக்குழுவின் செயற்பாடு ஒரு வட்டத்துக்குள்தான் இருக்கின்றது. மாவட்ட மட்டத் திட்டங்களை நடைமுறைப் படுத்தும் அதிகாரங்கள்தான் அந்தக் குழுவுக்கு இருக்கின்றன.

இந்த இணைப்புக் குழுவுக்கு அந்தப் பிரதேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிரேஷ்ட உறுப்பினரைத் தலைவராகத் தெரிவு செய்ய வேண்டும். யாழ்.மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதிநிதிகளில் சிரேஷ்ட உறுப்பினராகவும் கூடுதல் உறுப்பினர்களைக் கொண்ட தமிழரசுக் கட்சியின் உறுப்பினராகவும் இருக்கும் மாவை சேனாதிராசா இருப்பதால் அவரை இக்குழுவின் தலைவராக நியமித்திருக்கவேண்டும்.




தனது விசுவாசியாகவும் அமைச்சராகவும் இருக்கும் டக்ளஸ் தேவானந்தாவை அக்குழுவின் தலைவராக ஜனாதிபதி நியமித்தார். அதன்பின்னர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எழுப்பிய ஆட்சேபனையை அடுத்து இணைத் தலைவர்களாக டக்ளஸ் தேவானந்தாவையும் மாவை சேனாதிராசாவையும் ஜனாதிபதி நியமித்தார்.

இந்த நியமனத்தில் புதிதாக ஒருவரை - வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரை நியமித்ததன் மூலமே சிக்கல் உருவானது.

சாதாரணமாக மாவட்ட மட்டத்தில் நடக்கும் ஒரு கூட்டத்துக்கு ஆளுநரையும் பங்கு கொள்ளச் செய்வதன் மூலம் குடாநாட்டில் இயல்பு வாழ்வு ஏற்பட்டுவிட்டது என்ற செய்தியை சர்வதேசத்துக்கு விடுக்க ஜனாதிபதி முனைந்துள்ளார் போலும்.

### சர்வதேசத்தை ஏமாற்ற முயற்சி

பெரிய பிரசாரங்களுடன் ஆதரவாளர்களுடன் கூட்டப்பட்ட இந்தக் கூட்டம் மூலம் குடாநாட்டு மக்களுக்கு கிடைக்கப்போவது எவை என்பது கேள்விக் குறியாகவுள்ள போதிலும், குடாநாட்டில் விடுதலைப்புலிகள் சம்பந்தப்படாமல், கூட்டம் ஒன்றை நடத்தி அதன் மூலம் இயல்பு நிலை காணப்படுகின்றது என்று காட்ட முயற்சி எடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்துக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் ஆளுநர் மொஹறான் விஜேவிக்கிரமும் துருப்புக் காவிகள் மூலம் அழைத்து வரப்பட்டதும் -

கூட்டத்துக்குத் சென்ற அரச திணைக்கள அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் மோப்ப நாய்கள் கொண்டும் அதி நவீன கருவிகள் கொண்டும் துருவித்துருவி சோதனை செய்யப்பட்டதும் - இராணுவ மயமாக்கலின் வடிவங்களாகவே அமைகின்றன. அவை இயல்பு நிலையைத் தோற்றுவிக்கும் வடிவங்கள் அல்ல என... கள் கூறுகின்றனர்.

இயல்பு நிலையை உருவாக்குவதற்கு எட்டபபட

[13ஆம் பக்கம் பார்க்க]

## 60ஆவது அகவை நிறைவும் சேவைநலன் பாராட்டும்



எமது பாடசாலையில் இருவருடங்களும் ஆசிரிய சேவையில் 29 வருடங்களும் அகஇருள் போக்கி அறிவொளி பரப்பி அரும் பணியாற்றி இன்று (19-03-2006) ஞாயிற்றுக்கிழமை தமது அறுபதாவது அகவையைப் பூர்த்தி செய்யும் எமது அன்புக்குரிய ஆசிரியை

திருமதி சிவஞானம் பாலதயானந்தன்

அவர்களை மனதாரப் பாராட்டுவதோடு அவர் தம் குடும்பத்தினரோடு வளமான எதிர்கால வாழ்வில் திலைக்க இறைவனைஇறைஞ்சுகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/கோண்டாவில், சி.சி.த.க.பாடசாலை.

(சி/48408)(26.16.45)

# பண்டத்தரிப்பு ஆயுள்வேத மருந்தக திறப்பு விழா சிறப்புற நடைபெற்றது

வலி.தென்மேற்கு, மார்ச் 19

வடக்கு- கிழக்கு மாகாண சுதேச வைத்திய திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்ட பண்டத்தரிப்பு இலவச ஆயுள்வேத மத்திய மருந்தகத்தின் திறப்பு விழா கடந்த வியாழக்கிழமை முற்பகல் சிறப்பாக நடைபெற்றது.

பிரான்பற்று மக்கள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் எஸ்.கிருஷ்ணலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறைப் பேராசிரியர் சுப்பிரமணியம் பவானி சம்பிரதாய முறைப்படி நாடாவை வெட்டி மருந்தகத்தைத் திறந்து வைத்தார்.

மருந்தகத்தின் பெயர்ப் பலகையை வலி. தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக பொறுப்பதிகாரி ஞா.தேவச்சந்திரன் திரைநீக்கம் செய்து வைத்தார். பிரான்பற்று மக்கள் நலன்புரிச் சங்கச் செயலாளர் சி.மகேந்திரன் வரவேற்புரையை நிகழ்த்தினார். பிரான்பற்று முருகமூர்த்தி ஆலய பிரதம குரு சிவசிறீ க.உலகேஸ்வரக்குருக்கள் ஆசியுரையை நிகழ்த்தினார்.

இவ்விழாவில் பண்டத்தரிப்பு பொது சுகாதார பரிசோதகர் என்.நிர்மலானந்தன், சுவெட்டி ஆயுள்வேத மருந்தக டாக்டர் இ.கேதீஸ்வரன், சுழிபுரம் ஆயுள்வேத மருந்தக டாக்டர் என். பரமசிவம்பிள்ளை, பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ச.செல் வரத்தினம் ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

மருந்தகத்தின் பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி கிரிஜா சிறிதரன் நன்றியுரை நிகழ்த்தினார். (எ-175)





எல்லா சிறப்புச் சந்தைகளிலும் நாடெங்கும் மருந்தகங்களிலும் விற்பனையாகின்றது.

Sole Agents:
Suri Trading Company (Pvt) Ltd
Hotline: 0114810 251






3C, 3S or 3B, 3C தகமையுடன் வெளிநாட்டில் உயர்கல்வி.

UK, USA, Canada, Singapore, Cyprus, Malasia, Australia, New Zealand, Rusia போன்ற நாடுகளில் மேற்படிப்பைத் தொடர்வதற்கு University, College அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுத்தருகிறது.

அதுமட்டுமல்லாது Rusian University களில் நீங்கள் M.B.B.S முடிப்பதற்கான முழுவருட அனுமதிக்கட்டணம் 2500$ (1 year)

மலேசியாவின் Tafe College மிகப்பெரிய Technical கல்லூரி ஆகும். Automotive Enginerring, Multimedia Computing, Computer & Network Technology, Software Engineering Technology, Business Accounting, Finance, Business Management போன்ற பெரிய அளவிலான படிப்பை குறைந்த செலவில் படிப்பதற்கு சலுகைகளைப் பெற்றுத்தருகிறது.

2006 February, April ற்கான பதிவுகள் நடைபெறுகின்றன

Courses Available
- Computing
- Business Management
- Engineering & Mathematical Sciences
- Art
- Business Studies
- Law
- Urban Planning
- Social Sciences
- Architecture & Construction
- Education & Training
- Humanities
- Sciences
- Commercial Management
- Tourism Management
- Research Degree MA/MPHIL/PHD
- MBA
- MSC & MA
- Bachelor of Business Administration
- BSc. (Hons.)
- BA
- E-Business
- Biotechnology
- Microbiology
- Software Engineering
- Information Technology
- Computer Administration
- Medichine
- Economics
- Hotel Management
- Accounting
- Marketing Management
- Travel & Tourism

SKY LINE TRAVELS & SERVICES
PROFESSIONAL OVERSEAS EDUCATIONAL CONSLTANTS
No. 7-1/2, W.A.Silva Mawatha, Wellawatte, Sri Lanka. Tel: 0773 175767
E-mail: Mohamedhaniffa_riyas@yahoo.co.uk


ஓம் ஸ்ரீ ராம ஜெயம்

## நினைவஞ்சலி



### அமரர் அப்பாவுசெட்டி ரங்கசாமி

**(05.08.1921- 17.02.2006)**

பெருமாள் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் அப்பாவு செட்டி ரங்கசாமி அவர்கள் தனது வாலிப வயது முதலே பெருமாள் கோயில் மகோற்சவகால கைங்கரியங்களில் ஒலி, ஒளி அமைப்பாளராக முன்னின்று துடிப்புடன் உழைத்தவராவார். கோயிலின் நிர்வாகசபை, திருப்பணிசபைகளில் பெரும்பங்காற்றி நற்பணிகள் பல நிறைவேற அயராது உழைத்தவர். இவர் HOLLYWOOD RADIO AND TELEVISION INSTITUTE (HRTL) இல் தபால் மூலம் ஆங்கில மொழி மூலம் பயின்று பல சான்றிதழ்களையும் பரிசில்களையும் வென்றுள்ளார். அதன் பயனாக MODERN RADIO SERVICE என்னும் நிறுவனத்தை நிறுவி, யாழ்.நகரில் ஒரு முன்னோடி வானொலி தொழில் நுட்பவியலாளராக சிறந்து விளங்கி பலரின் பாராட்டுதல்களையும் பெற்றவர்.

மோட்டார் இயந்திரவியலில் அனுபவமிக்கவர். மின் இயந்திர உரிமையாளராக யாழ். குடாநாட்டின் பல கோயில்களின் விழாக்களில் கண்கவர் மின் விளக்கு வண்ணத்தால் அலங்கரித்து தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டவர்.

யாழ்.மாநகராட்சி மன்ற திறந்தவெளி அரங்கத்தின் பொறுப்பாளராக பல வருடங்கள் கடமையாற்றி பல கலை நிகழ்ச்சிகளை சிறப்பாக்கிய இவர், தமது இறுதிக் காலத்தில் தனது மகன், மகள்மார், மருமக்கள்மார், பேரப்பிள்ளைகளுடன் அமைதியாக வாழ்ந்து தனது 85 ஆவது வயதில் இறைபதம் அடைந்தார்.

அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

(சி.48428) (39-11-45)

ஆதீன மகாசபை,
**யாழ்.வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள்கோயில்.**

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர்களை வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கல்வித்தரத்தினை மீண்டும் ஒரு தடவை நிரூபித்திருக்கும் எமது கல்லூரியின் மைந்தர்களான க.பொ.த (உ.த) 2005 பரீட்சையில் அதிவிசேட சித்தியடைந்த (3A பெற்ற)



செல்வன் ந.பிரதீபன்
விஞ்ஞானம்



செல்வன் தோ.கென்றிபிரசாந்தன்
கலை



செல்வன் ஏ.இரகுராட்ணம்
கணிதம்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2005 இல் சித்தியடைந்த மாணவர்களான

01. ச.கஜறூபன்
02. செ.அனுசாந்தன்
03. உ.கிரிசாந்த்
04. வி.ஸ்ரீபன்
05. ம.டயாகரன்
06. ந.மதுசன்
07. செ.சுலக்ஷசன்
08. வ.அருன்றாஜ்
09. கு.செவின்ஷன் அலெக்ஸ்
10. க.சஞ்சயன்
11. ப.நிருபன்
12. ச.சாமுவேல்
13. சு.டெனிஸ்குமரன்
14. ஜி.கோபிஷா
15. ம.சன்கவி
16. ஜெ.றெயன்தனுஷன்

இவர்களை வாழ்த்துவதுடன் இவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு 22.03.2006 புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளதால் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்,**
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
சுவிற்ஸர்லாந்துக் கிளை.

(48235) (39-11-45)




திருமண சேவை

ஆயிரம் பொய் சொல்லியும் ஒரு திருமணமா?... இந்தப் பழமொழிக்கு இம்மியளவும் உடந்தை இல்லாதவர் வேல் அமுதன்! உண்மை மாத்திரமே சொல்லி அவதானமாக திருமணத்தை ஆற்றுப்படுத்துபவர். அனுபவமுள்ள ஆற்றலுமிக்க தசாப்த விழாக்கண்ட "சுயதேர்வு முறை முன்னோடி" திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதன்.

(சி/48414) (39-11-45)

"மேலதிக விவரங்களுக்கு இன்றே வேல் அமுதனுடன் தொடர்பு கொள்ள"
"சந்திப்பு முக்கியம்! ஆனால் முன்னேற்பாட்டு ஒழுங்கு முறையில்"

தொலைபேசி தொடர்புகளுக்கு:
திங்கள், புதன், வெள்ளிக்கிழமை நாள்களில் பிற்பகல் 4.30 மணி முதல் இரவு 8.00 மணி வரை மாத்திரம்.
நேரடித்தொலைபேசி இலக்கங்கள்:
2360488, 4514396, 0602158067.

Reputed Marriage Focilitater,
Self Selection System,Forerannes
Kurumpasiddyoor Mayelu Vel Amuthan,
(11 Successful years in matrimony) 8-3-3 matro Apartment
(Opposite Wellawatte Police, Via 33rd Lane)
55th Lane, Colombo - 06.

# United Nations Development Programme
## Sustainable human development

UNDP

UNDP is the UN's global development network, advocating for change and connecting countries to knowledge, experience and resources to help people build a better life. We are on the ground in 166 countries, working with them on their own solutions to global and national development challenges. As they develop local capacity, they draw on the people of UNDP and our wide range of partners.

To implement UNDP initiatives in collaboration with the Government of Sri Lanka, we invite applications from qualified Sri Lankan Nationals for the following position.

**FINANCE AND ADMINISTRATION ASSISTANT – JAFFNA**

**Under the supervision of the Head of UNDP Office in Jaffna and Operations Manager (Field), the incumbent will:**

- Maintenance of the internal expenditures control system which ensures that vouchers processed are matched and completed, transactions are correctly recorded and posted in ATLAS (UNDP's web based management information system)
- Timely corrective actions on unposted vouchers, including the vouchers with budget check errors, match exceptions, unapproved vouchers.
- Maintenance of the Accounts Receivables for UNDP projects and follow up with partners on UNDP
- Timely review of cash position for the Jaffna Field Office to ensure sufficient funds on hand for disbursements.
- Timely preparation of monthly cash flow forecast for use by Head of Office and by Colombo based Operations Staff.
- Provide administrative and logistical support to UNDP Offices in Jaffna including maintenance of offices/equipment, etc.
- Preparation of inventory reports
- Implementation of inventory and physical verification control in the Jaffna Field Office.
- Draft correspondence and communications independently, as required
- Arrange logistical support for visiting missions including accommodation arrangements, as required
- Make travel arrangements as required for Jaffna based staff including security clearances
- Supervise maintenance of UNDP Vehicles assigned to Jaffna Office and Manage the drivers' pool
- Maintain leave records of all staff based in UNDP Jaffna
- Perform other functions as required.

**Experience:**
- 3 to 5 years of relevant administrative experience is required at the national or international level
- Experience in the usage of computers and office software packages (MS Word, Excel, etc) and knowledge of spreadsheet and database packages, experience in handling of web based management systems.

**Language Requirements:**
- Excellent oral and written command of English and Tamil required.
- Ability to communicate in Sinhala an asset

**Operational skills:**
- Ability to work as a member of a multi-disciplinary and multicultural team
- Strong negotiation and interpersonal skills with good initiative and sound judgment
- Motivated, flexible and capable of working under pressure
- Willingness to travel within Sri Lanka

**Education Background**
- Secondary School Education required. Bachelors' Degree in Management, Business Administration will be a definite advantage.

UNDP offers an attractive compensation package commensurate with experience. These are non-career appointments for limited duration with possible extensions. Please send your curriculum vitae, with names of two non-related referees and contact telephone numbers to reach us within 10 days of this advertisement to the senior Programme Officer, UNDP, 123/1, Temple Road, Jaffna. Indicate position applied for on the top left hand corner of the envelope. UNDP will only be able to respond to those applicants in whom there is further interest. Qualified female candidates are encouraged to apply.

# 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர்
## லோறன்ஸ் அலெக்ஸ்சாண்டர்

உரிமையாளர்:- NEWTON WINE SHOP
A.J.M. TEX
ALAI ARASY
} JAFFNA

**மண்ணில்: 12.04.1953**

**விண்ணில்: 10.02.2006**

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட எங்கள் குடும்பத்தலைவரின் இழப்பை அறிந்து எங்களோடு தங்கள் துயரை நேரடியாகக் கலந்துகொண்டும், தொலைபேசி, தொலைநகல், தந்தி, பத்திரிகை, அஞ்சலிப்பிரசுரங்கள், மலர் வளையங்கள் மூலமாகவும் பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் மற்றும் எமக்குப் பலவழிகளிலும் உதவிகள் புரிந்த, புரிகின்ற அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

மேலும் எதிர்வரும் 22.03.2006 புதன்கிழமை முற்பகல் 11.15 மணிக்கு மானிப்பாய் புனித அன்னம்மாள் ஆலயத்தில் நடைபெறவிருக்கும் நினைவஞ்சலித் திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து சகோதரன் வீட்டில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள், சகோதர சகோதரிகள், மைத்துனர், மைத்துனிகள், உற்றார், உறவினர்கள்.**

*தொலைபேசி: 021- 222 5352, 021 222 7665, 0777 253216, 0777 747986*

யாவில் ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

(ச/48411)(51.26.19.14)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 - 02 - 1953



உதிர்வு 12 - 04 - 2001

### திருமதி இந்திரசேனா கனகநாயகம்

*(இந்திரா அக்கா)*

**திதி: 19.03.2006**

ஐந்து ஆண்டுகள் சென்றாலும்- உங்கள்
நினைவலைகள் நிழலாக என்றும் தொடர்கின்றன.

தகவல்:
வி.கனகநாயகம் (கணவர்),
கனகேந்திரா கொமினிக்கேசன்,
துரைமலர் பொய்கை,
செட்டிவளவு லேன்,
இணுவில் மேற்கு, இணுவில்.

கணவர், சகோதரர்கள்,
சகோதரிகள், மைத்துனர்கள்,
மைத்துனிமார், பெறாமக்கள்,
மருமக்கள்.

*தொலைபேசி எண்கள்:*
T.P.: 021 222 3715, 021 4591245
Idd: 0094 212223715, 0094 214591245

(47794)(32-14-45)

## குருக்கள் தேவை

*நவாலி, அந்திரான் முருகமூர்த்தி கோயிலுக்கு நித்திய, நைமித்திய பூசைகளை நடத்துவதற்கு ஒரு குருக்கள் தேவை. விண்ணப்பிப்பவர் கோயிலுக்காக உள்ள வீட்டில் குடியிருக்கக் கூடியவராக இருத்தல்வேண்டும். சம்பளம் முதலியன நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.*

(48203)
(26.15.11)

அந்திரான் முருகமூர்த்தி கோயில்,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

ஆலய பரிபாலன சபை.

## நூல் அறிமுகவிழா

கரவெட்டி,மார்ச்19

வல்வை சிதம்பராக் கல்லூரி அதிபர் அ.விஜயநாதன் எழுதிய ''வரகவி'' நூலின் அறிமுகவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிக்கு வதிரி அண்ணமார் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

ஆலய நூலகர் இரா.ஸ்ரீதரன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், ஆசிரியர் பத்மராஜனும் அறிமுகவுரையை ஆசிரியர் இ.இராஜேஸ்கண்ணனும் முன்னுரையை ஆசிரியர் கே.தங்கவடிவேலும், நயப்புரையை கலாநிதி த.கலாமணியும் நிகழ்த்துவர். (எ-70)

## காணி உறுதி விநியோகம்

தென்மராட்சி,மார்ச்19

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்ட குடியிருப்பாளர்களுக்கு காணி உறுதிகள் வழங்கப்படவுள்ளன.

தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் நாளைதிங்கட்கிழமை இந்தக் காணி உறுதிகளை குடியிருப்பாளர்களிடம் கையளிப்பார்.

'சுவர்ணபூமி' அளிப்புத் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 16 குடியிருப்பாளர்களுக்கு உறுதி வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (எ-117)

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 24 - 12 - 1945



உதிர்வு 19 - 03 - 2001

### திருமதி துரைராஜா தவமலர்

ஆண்டுகள் ஐந்து ஆனதம்மா
ஆசைமுகம் நாம் பார்த்து!
கண்கள் எங்கும் தேடுதம்மா
அன்புமுகம் காண இங்கு!

*''தவமஹால்'',*
*அல்வாய்.*

(48197)(32-14-45)

-குடும்பத்தினர்.

## சுனாமிக்குப் பின்னான சமூக அபிவிருத்தியும் மீள்கட்டமைப்பும்

care

### கெயர்' சர்வதேசம் - யாழ்ப்பாணம் - 2006

### கேள்விப்பத்திரம்

கெயர் நிறுவனத்தினால் சுப்பர்மடம் கிராமத்தில் சேதமுற்ற வெள்ள வாய்க்காலைத் திருத்துவதற்காக பொருத்தமான ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

இது தொடர்பான மேலதிக விவரங்களுக்கும் விண்ணப்பப்படிவங்களை பெறுவதற்கும் கீழ்க்கண்ட முகவரியிலுள்ள கெயர் அலுவலகத்துடன் 8.30 தொடக்கம் 4.30 மணிவரையான கடமை நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி 27-03-2006

**மனிதநேய உதவிகளுக்கான பணிப்பாளர்**
**கெயர் சர்வதேசம்**
**15, கண்டி வீதி,**
**யாழ்ப்பாணம்,**
**தொலைபேசி: 021 222 9763**

(அ/48424)(18-32-14-45)


## ENGLISH மொழியா? உங்கள் பிரச்சினை

### இன்றே தபால் மூல ஆங்கிலப் பாடநெறியில் இணையுங்கள்

நீங்கள் இருக்கும் இடத்தில் இருங்கள் நாம் அங்கு உங்களுக்கு ஆங்கில கல்வியை குறுகிய காலத்தில் (அடிப்படையில் இருந்தே) கற்பிக்கின்றோம்

Free **இதோ இலவச அழகிய குடை**

எமது எந்த ஒரு பாடநெறியிலும் இணையும் அனைத்து மாணவ / மாணவிகளுக்கு
- அழகிய குடை ஒன்றும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் (முந்துங்கள்)

மேலதிக விபரங்களுக்கு சுயவிலாசத்துடன் 5.00 பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறுங்கள்

**UNION EDUCATIONAL INSTITUTE**
P.O. BOX 143, KANDY, SRI LANKA. TEL: 0773 123 523
சில கல்வி நிலையங்கள் போன்று மாணவர்களிடம் பணத்தை அறவிடுவது அல்ல எமது நோக்கம்

## முதன் முறையாக யாழ் நகரில் *Tally*

பல்கலைக்கழக மாணவர்கள், AAT, CIMA, CMA, IAB, HND(UK), HNDA, Charted(SL), A/L வர்த்தக பிரிவு மாண்வர்கள் மற்றும் கணக்கியலில் ஆர்வமுடையவர்கள் இத்தேர்வில் பங்குபற்றலாம்.

30 நிமிடங்களில் 30 வணிகம் மற்றும் கணக்கியல் கேள்விகளுக்கு விடையளித்து 60% வரையான கட்டணக்கழிவை பெறுங்கள்.

*Accountancy Intelligence Test*

கணக்கியல் மென்பொருள் கற்கைநெறி
*(Certified Computer Accountant)*




VAT Enabled Tally

Tally GRADUATE ies 7.2

**AIT 2006**
ACCOUNTANCY INTELLIGENCE TEST

**Super Exclusive Offer**
*March 15th to April 20th*

முன்பு கல்விக்கு ஏற்றவேலை
இனி வேலைக்கு ஏற்றகல்வி

ABOUT TALLY
- Simplicity
- Flexibility
- Speed
- No Codes
- Powerful
- Real-Time

பரீட்சை பற்றிய மேலதிக விபரங்களுக்கு கீழ்குறிப்பிட்ட எமது நிலையங்களை நாடுங்கள்

**ASIAN -CSC**
COMPUTER EDUCATION

101, 2ம் மாடி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
Tel : 021-222 8196
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021-222 5677


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| அமரர் நாகமணி கந்தையா (பண்டிதர்) | திருமதி ஸ்ரீபத்மா (சரசு) கந்தையா |
| --- | --- |
| தோற்றம் | |
| 09-11-1922 | 07-03-1935 |
| மறைவு | |
| 10-02-2005 | 29-03-2005 |

பண்பின் சிகரமாய்,
பாசத்தின் உறைவிடமாய்,
எமது வளமான வாழ்விற்கு வழிகாட்டியாய்த் திகழ்ந்து
இல்லறத்தை நல்லறமாகப் பேணி,
வள்ளுவன் வாசுகியாக வாழ்ந்து,
பிரிவிலும் ஒன்று சேர்ந்த எம் குடும்ப விளக்குகளே!
நீங்கள் அணைந்து ஆண்டு ஒன்று சென்றாலும்
உங்களின் நீங்காத நினைவுகள் எமது உயிர் உள்ளவரையும்
எம் நெஞ்சங்களில் ஒளி வீசிக்கொண்டேயிருக்கும்.
எமது அன்புத் தெய்வங்களின் ஆத்மா சாந்தியடைந்து
இறைவன் திருவடிகளில் இன்புற்றிருக்க இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**ஓம்சாந்தி**

தொ.பே.:
00442089037626.

(48130)(32-14-45)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# தேர்தலில் வெற்றி பெற எதையும் செய்யத்துணியும் அரசியல்வாதிகள்!

உலக வலம்

தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற வேண்டுமானால் அரசியல்வாதிகள் எதை வேண்டுமானாலும் செய்வார்கள்.

இஸ்லாமியர் மத்தியில் ஒரு நாட்டுப் பழமொழியுண்டு. ''எவன்... லெப்பைக்கு ரெண்டு பணம்'' என்பதாக.

அதாவது, அரசியல்வாதிகள் பெரும்பாலும் தமது கட்சி, தமது பதவி இவைகளில் மட்டுமே கவனமாக இருப்பார்கள். மற்றப்படி எவருக்கு என்ன கேடு நேர்ந்தாலும் அவர்களுக்குக் கவலையில்லை. அவர்கள் காட்டும் அனுதாபம் ஆதரவு எல்லாமே வெள்ளி வேஷம் தவிர வேறொன்றும் இல்லை.

தமிழர்களைப் பொறுத்தவரை இது காலங்காலமாகத் தமிழ் இனத்தைப் பீடித்துள்ள ஒரு பீடை. இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த காலத்திலிருந்து இதை மிகத் தெளிவாக நாம் பார்த்துவருகிறோம்.

ஆயுதப் போராட்டம் ஆரம்பமாகி மக்கள் ஒருநிலைப்பாட்டுக்கு வந்த பிறகும் அதே நிலைமை நீடிப்பது கவலைக்குரியது.

இங்குதான் என்றில்லை, தமிழ் நாட்டிலும் அதே நிலைதான். தமிழருக்கென்று எழுதப்பட்ட தலையெழுத்து 'பதவி' என்ற பசையில் எவர்தான் ஒட்டிக்கொள்ளாமல் இருந்து விடுகிறார்கள்?

ஈ.வே.ரா.பெரியாரால் ஆரம்பிக்கப்பட்ட திராவிடர் கழகம், அண்ணாவின் தலைமையில் அரசியல் கட்சியாகப் பரிணமித்து சமூக அரசியல், சமூக கலாசார முன்னேற்றங்களை முன்வைத்து களம் இறங்கியது. அண்ணாவின் ஆளுமையின்கீழ் அக்கட்சியின் கொள்கைகளும் செயல்திட்டங்களும் முன்னெடுக்கப் பெற்று காங்கிரஸ் கட்சியின் பெரும் கோட்டையாக விளங்கிய தமிழ் நாடு ஆட்சி அதிகாரம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கைக்கு வந்தது.

திராவிட கலாசாரம் பேணப்பட்டது. பல்வேறு முற்போக்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. உலகமே வியக்கும் விதத்தில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு இடம்பெற் றது. 'மட்ராஸ் ஸ்டேட்' 'தமிழ் நாடு' மாநிலமாக அழகான பெயர் மாற்றம் பெற்றது. ஏனைய மாநிலங்கள் பொறாமைப்படும் அளவுக்குத் தமிழ் நாட்டில் ஜனநாயக ஆட்சி, பண்பாடு வளர்ச்சியுற்றது. அண்டைநாடுகளில் உள்ள தமிழர்களின் இன்னல் கண்டு கொதித்து எழுந்து குரல் எழுப்பும் நிலையும் - மத்திய அரசை நெருக்கிக் காரியமாற்றும் வல்லமையும் உருவானது. இன்னும் எத்தனையோ சொல்லலாம்...! ஆனால், அண்ணாவின் மறைவு அந்தோ! தமிழ் நாடு மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பிப் பதவி, போட்டி களும் கொள்கை மாறாட்டங்களும், காட்டிக் கொடுத்தலும், காலைவாரிவிடுதலும் தங்குதடையின்றி மேலோங்கின. அதுமட்டுமல்ல, அண்ணா தனது வாரிசுகள் என்று வளர்த்துவிட்ட தம்பிகள் தமக்குள் அடிபடவும் பதவிகளைப் பற்றிக்கொள்ளவும் முயன்றதில் கழ கம் பல கூறுகளாகப் பிரிந்துப் போய்விட்டது. திராவிட முன்னேற்றக் கழகம் இப்பொழுது எண்ணிறந்த பெயர்களில் திணைக்களங்களாக இயங்கிக்கொண்டிருக்கின்றன.


ஜெரிக்கோ சிறையை இஸ்ரேலியர் முற்றுகையிட்டபோது உடைகளைக் களைந்து கைகளை உயர்த்தியபடி வெளியில் வரும் பலஸ்தீனக் கைதிகள்.

இந்த நிலைமையில் தனிக் கட்சி அமைத்துத் தனியாகச் செயற்பட்டுவந்த வைகோ அவர்கள் மீண்டும் தி.மு.கவுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டு சிலபல இடங்களையும் கைப்பற்றியிருந்தார். இப்பொழுது நேற்றுவரை கலைஞருடன் இருந்துவிட்டு இன்று ஜெயாவின் கட்சிக்குத் தாவியிருக்கிறார் என்றால் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. தமிழ்நாட்டின் அரசியல் அந்த விதத்தில் போய்க்கொண்டிருக்கிறது. வைகோ இலங்கைத் தமிழர்களிடம் அனுதாபம் கொண்டவர் - அவர்களின் துன்பம் கண்டு துவண்டுபோகிறவர் - இலங்கைப் படையினர் வடக்கு - கிழக்கில் கண்மூடித்தனமாகக் கொலைப் பாதகங்களில் ஈடுபட்டிருந்தபோது ஐ.நா. செயலாளருக்கு அவசரத்தில் தந்திச் செய்தி அனுப்பி தலையிட்டு உதவும் படி கேட்டு வற்புறுத்தியவர்.

அவ்வாறான வைகோ இலங்கைத் தமிழர் விடயத்தில் - குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் விடயத்தில் ஓர் எதிர்ப்போக்கைக் கடைப்பிடித்து வந்த ஜெயலலிதாவுடன் கூட்டுச் சேர்ந்தமை அந்த அம்மாவின் கடும் போக்கில் சிலபல மாற்றங்களை ஏற்படுத்தும் என்றும் எதிர்பார்க்கலாம். ஆனால், அந்தக் காரணத்துக்காகத்தான் அவர் அ.தி.மு.கவுடன் கூட்டுச் சேர்ந்தார் என்று கூறமுடியாது. அவருடைய கட்சிக்கு தி.மு.கவினர் வழங்கவிருந்த தொகுதிகளைவிட அதிக தொகுதிகளை வழங்க ஜெயா முன் வந்தார். அதுதான் பிரதான காரணம். எதுவானாலும் தமிழ்நாட்டில் இன்றுள்ள அரசியல் நிலைமை இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் ஓரளவு சாதகமாகவே உள்ளது. இதுவே நீடிக்கவேண்டும் என்றே தமிழர் எவரும் விரும்புவர்.

***

### இஸ்ரேலில் தேர்தல்

இஸ்ரேலில் பொதுத்தேர்தல் நடைபெற இன்னும் சில தினங்களே உள்ள நிலையில் பலஸ்தீனத்தின் மீது இராணுவ நடவடிக்கையொன்றை எடுத்து இஸ்ரேலியத் தற்காலிகப் பிரதமர் எஹுத் ஒல்மர்ட் தனது கட்சிக்கும் தனக்கும் வெற்றி வாய்ப்பை அதிகரித்துக் கொண்டுள்ளார்.

எவருக்கு என்ன நேர்ந்தாலும் பரவாயில்லை தமதுநோக்கம் நிறைவேறினால் சரி என்ற அரசியல் போக்கை இதுவும் எடுத்துக் காட்டுவதாய் உள்ளது.

பலஸ்தீனத்தில் ஜெருக்கோ நகரிலுள்ள பலஸ்தீனச் சிறையில் காவலில் உள்ள சில கைதிகளைப் பிடிப்பதற்காக இஸ்ரேலியர் இவ்விதம் நடந்துகொண்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

ஐந்து வருடங்களுக்கு முன் கொலை செய்யப்பட்ட இஸ்ரேலியச் சுற்றுலாத்துறை அமைச்சரின் கொலையுடன் தொடர்புடைய குற்றவாளிகள் ஜெரிக்கோ சிறையில் இருப்பதாகவும் அவர்களைக் கைதுசெய்து கொண்டுபோகவே வந்ததாகவும் இஸ்ரேலியர் கூறிக்கொண்டனர். சிறைச்சாலையைச் சுற்றிவளைத்து சம்பந்தப்பட்ட நபர்களைச் சரணடையும்படி இஸ்ரேலியர் கட்டளையிட்டனர். புல்டோசர்கள், கனரக தாங்கிகள் மற்றும் ஹெலிஹொப்டர்களுடன் சிறையை முற்றுகையிட்ட இஸ்ரேலிய இராணுவத்தினர் சுட்டத்தில் ஒரு பலஸ்தீன காவலாளி கொல்லப்பட்டதாகவும் பலர் காயமுற்றதாகவும் முதலில் வந்த செய்திகள் கூறின. பலஸ்தீன விடுதலைக்கான இடதுசாரி மக்கள் முன்னணியின் தலைவர் அகமத் சதாத் மற்றும் அவரின் சகாக்களைச் சரணடையும் படியும் இல்லையேல் கொல்லப்படுவார்கள் என்றும் இஸ்ரேலியப் படையினர் அறிவித்தனர். தாக்குதல் நிலைமை கடுமையானதையடுத்து சுமார் 10 மணி நேரத்துக்குப் பின்னர் சதாத்தும் வேறு சிலரும் கைதாகினர்.

### இஸ்ரேலின் அடாவடி ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம்

இந்த நிகழ்ச்சி பலஸ்தீனத்தில் பெரும் களேபரங்களைத் தோற்றுவித்துள்ள அதே நேரம், ஐரோப்பிய யூனியன் இஸ்ரேலின் இவ்வித அடாவடித்தனமான செய்கையைக் கடுமையாகக் கண்டிக்கின்றது.

பலஸ்தீன எல்லைக்குள் புகுந்து இஸ்ரேலிய இராணுவத்தினர் ஜெரிக்கோ சிறையின் மீது தாக்குதல் நடத்தி கைதிகளைக் கைதுசெய்ததுடன் வெளிநாட்டவர் சிலரையும் கடத்தியிருந்ததை ஐரோப்பிய நாடாளுமன்றம் கண்டித்தது.

இஸ்ரேலியரின் இந்தச் செயலானது எமது இறைமையை அப்பட்டமாக மீறும் செயல் மட்டுமல்ல இஸ்ரேலுடன் நாம் செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்களுக்கெல்லம் மாறானது எனப் பலஸ்தீன அதிபர் முகமது அப்பாஸ் கண்டித்திருக்கிறார்.

ஆத்திரம் கொண்ட பலஸ்தீனியர்கள் பிரிட்டிஷ் அமெரிக்க நிலைகள் மீது தாக்குதல் நடத்தினார்கள்.

***

### சிலி நாட்டின் முதலாவது பெண் ஜனாதிபதி

சிலி நாட்டின் அதிபராக முதன் முதலில் ஒரு பெண் தெரிவுசெய் யப்பட்டுள்ளார்.

பெரு நாட்டுக்குத் தெற்கில் பொலிவியா, ஆர்ஜென்டீனா நாடுகளுக்கு மேற்கில் அமைந்துள்ள இச்சிறு நாடு றோமன் கத்தோலிக்க மக்களையே பெரும்பான்மையினராகவும் ஸ்பானிஷ் மொழியைத் தேசிய மொழியாகவும் கொண்டுள்ளது.

சர்வாதிகாரி ஆகஸ்டஸ்டோ பினசெட்டின் பிடியிலிருந்து சிலி இப்பொழுது மெதுவாக ஆனால், துணிச்சலாக ஒரு பெண்ணின் ஆட்சிக்குள் வந்துள்ளது.


சிலி நாட்டின் புதிய அதிபர் மிச்செல்

சிலியின் அதிபராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள மிச்செல் பாக்லெட் ஒரு வைத்தியர். முன்னர் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர். செனட் சபையின் தலைவரின் முன்னிலையில் அவர் ஜனாதிபதியாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

பினசெட்டின் இராணுவ சர்வாதிகாரம் 1990ஆம் ஆண்டு முடிவடைந்ததிலிருந்து சிலி நாடு மத்திய இடதுசாரிக் கூட்டணி கட்சியினரால் ஆளப்பட்டு வருகின்றது. புதிய அதிபரின் பதவி ஏற்பு வைபவத்தில் 120 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

ஸ்பெயின் நாட்டின் முடிக்குரிய இளவரசர் பிலிப், தென்னாபிரிக்க அதிபர் தாபோ எம்பெக்கி மற்றும் பல லத்தீன், ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் வந்திருந்தனர். இந்நிகழ்வில் கலந்துகொண்ட அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொண்டலீஸா ரைஸ் சிலி நாட்டுக்குக் கிடைத்த ஓர் அதிசயமான பெண்மணி. அவரால் உலகப் பெண்களுக்கும் பெருமை என்று கூறினார். இதுவரை அதிபராகவிருந்த றிச்சார்டோ லாகோஸிடமிருந்து அதிபர் பதவியை மாச்செல் பெற்றுக்கொண்டார்.

## அரசியல் தலைமைக்கு மெதுமெதுவாக ராகுல்காந்தி

***

### நேரு வழி வாரிசு ராகுல் காந்தி

முன்னாள் இந்தியப் பிரதம மந்திரி ராஜீவ் காந்தி சந்தர்ப்ப சூழ்நிலைகளால் பிரதம மந்திரி பதவிக்கு வந்தவர். அரசியல் அனுபவமற்ற அவரைக் கூடியிருந்தவர்களும் குழிபறிப் பவர்களும் பகடைக்காயாக்கிக் கொண்டார்கள்.

அதேமாதிரி ஒரு சூழ்நிலை அவ ருடைய தாய் இந்திரா காந்திக்கும் ஏற்பட்டது. நேரு காலமானதோடு அந்தப் பதவியைக் கைப்பற்றிக் கொள்ளவும் நேரு குடும்பத்தை அரசியல் அந்தகாரத்தில் மூழ்கடித்துவிடவும். அக்காலத்தில் இந்திய அரசியலில் படுகிழவர்களாக இருந்த ஒரு கூட்டம் பெரும் பாடு பட்டது. அதற்கு 'சின்டிகேட்' என்று பெயர் சூட்டப்பட்டிருந்தது. இந்திரா காந்தி அப்பொழுது இளம் வயதினராய் இருந்தபோதும் அரசியல் சாணக்கியத்தில் பழுத்தபழமாக இருந்தவர். சிறுமியாக இருந்த காலத்திலிருந்தே தந்தையாரின் அருகில் இருந்து அரசியல் பாடம் கற்றவர் - அதில் புடம்போடப்பட்டவர். அதனால் 'சின்டிகேட்' ஆசாமிகள் ஒரு சுற்று வெற்றி பெற்று இந்திராவை நாடாளுமன்ற விசாரணைக்கும் கூட உட்படுத்தினார்கள். ஆனால், அதுவே அவருக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்து விட்டது. அடுத்த சுற்றில் அவர் மீண்டும் பதவிக்கு வந்தார்.


ராகுல் காந்தி

இந்திய மக்களின் நாடி நரம்பெல்லாம் அவருக்கு அத்துபடி. துரதிர்ஷ்டவசமாக அவர் இடைநடுவில் துப்பாக்கிக்குண்டுக்கு இரையானார். அது அந்த நாட்டு மக்களுக்கு மட்டுமன்றி அண்டை நாடுகளில் அவரை மலைபோல் நம்பியிருந்தவர்களுக்கும் நிர்க்கதியாகப் போய்விட்டது.

அந்த வரிசையில் இப்பொழுது ராஜீவ் காந்தியின் புதல்வர் ராகுல்காந்தி அடியெடுத்து வைப்பதாகத் தெரிகின்றது. தந்தையைப் போலன்றி இவர் அவசரப்பட்டு, மற்றவர்களின் பேச்சைக் கேட்டு முடிவெடுக்காமல் தன் பாட்டியாரைப் போலவும் பூட்டனாரைப் போலவும் ஆற அமர ஆலோசித்து கருமம் ஆற்றுபவர் என்பதை வெளிக்காட்டி வருகின்றார். அந்தவகையில் அவருடைய அன்னை சோனியா காந்தி வழிகாட்டுவதாகவும் தெரிகின்றது.

காங்கிரஸ் கட்சி மத்தியில் ஆட்சி அமைக்கும் நிலை ஏற்பட்டிருந்த சமயத்தில் அதன் தலைவி சோனியா, இந்திய நாட்டின் அதிகாரப் பதவியை அவசரப்பட்டுக் கைப்பற்றிக்கொள்ளாமல் மிக நிதானமாக நடந்து கொண்டு பழுத்தபழமான மன்மோகன் சிங்கைப் பிரதமர் பதவியில் அமர்த்தி இந்தியாவின் மதிப்பை உலகக் கண்களில் உயர்த்தி விட்டார்.

அதேசமயம், அவரது இரண்டு பிள்ளைகளையும் அரசியலில் நுழைத்து மீண்டும் நேரு குடும்பத்தின் கையில் இந்திய அரசியலைப் புகுத்திவிட அவர் முயற்சி எடுக்காதது ஒருபுறமிருக்க, அந்தவகையில் அவர்களும் அவசரப்படாதது கவனத்துக்குரியது.

இப்பொழுது ராகுல் காந்தியை அரசியலில் பொறுப்பான பதவிகளில் அமர்ந்து கொள்ளும்படியாக அவரது கட்சிக்காரர்கள் அழுத்தம்கொடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள். இந்த அழுத்தங்களால் ராகுல் காந்தி எடுபடவில்லையென்பது இந்திய நாடாளுமன்றில் அவர் நிகழ்த்திய கன்னிப் பேச்சு எடுத்துக்காட்டுவதாய் இருந்தது.

இந்த மாதம் 9ஆம் திகதி இந்திய நாடாளுமன்றில் 35 வயதான ராகுல் காந்தி நிகழ்த்திய பேச்சு அவரது அன்னையர் உட்படச் சபையின் இரு பகுதியினராலும் மேசைகளைத் தட்டிப் பாராட்டும்படி செய்தது.

காத்துக்கொண்டிருக்கும் 'நேரு - காந்தி வம்சவாரிசு' என்று இந்திய பத்திரிகைகளால் பாராட்டப்பட்ட கேம்பிஜ் - ஹார்வர்ட் பல்கலைக்கழகப் பட்டதாரியான ராகுல் காந்தி தமது உரையில், 'இந்திய இளைஞர்களைக் கனவுகாண அனுமதிக்கவேண்டும்.... அந்தக் கனவுகளை எவ்வாறு நனவாக்கிக் கொள்வது என்பது பற்றி அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கவேண்டும்' என்று கூறிய போது, சபை கலகலப்பாகக் காணப்பட்டது. பணக்கார மாணவனுக்கு எத்தனையோ மாற்று வழிகள் உண்டு. ஆனால், ஏழைப் பையனுக்கு மிக மோசமான ஒரு பள்ளிக் கூடமே அவனது கல்விக்கு முடிவு கட்டுகிறது என்று ராகுல் கூறினார்.

அரசியல் மட்டக் கருத்துகளை எடுத்து விளாசுவதையடுத்து உண்மையாகவே ஆராய்ந்து ஏழை மாணவர்களின் நிலை பற்றி அவர் பேசியிருந்தார் என்று டைம்ஸ் ஒப் இந்தியா எழுதியிருந்தது.

ராகுல் கூறினார், ''அரசியலுக்கு நான் புதியவன். இன்னும் நான் எவ்வளவோ பழகவேண்டியிருக்கிறது. ஆனால், ஒன்றை நான் புரிந்துகொண்டுள்ளேன். ஒரு பிரச்சினையை நாம் எவ்வளவு நெருங்கிப் போகின்றோமோ அந்த அளவுக்குப் புரிந்துகொண்டு விடமுடியும்'' என்று இந்தச்சமயத்தில் பார்வையாளர் பகுதியில் அமர்ந்திருந்த சகோதரி பிரியங்காவிடம் நின்றவர்கள் கேட்ட போது நல்ல கருத்துக்களைக் கூறினார். எனக்குப் பெருமையாக இருக்கிறது - என்றார்.

காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர்கள் ராகுல் காந்தியை மெதுமெதுவாக அரசியலுக்குள் அறிமுகப்படுத்தி வருகிறார்கள்.

ராகுலின் பூட்டன் ஜவஹர்லால் நேரு, பாட்டி இந்திரா காந்தி, தகப்பன் ராஜீவ் காந்தி ஆகியவர்கள் இந்தியப் பிரதமர்களாக இருந்துள்ளனர்.

# பெருங்குளம் முகாம் விஸ்தரிப்பு மக்கள் இடம் பெயரும் நிலையில்

யாழ்ப்பாணம்,மார்ச் 19

சாவகச்சேரி பெருங்குளம் சந்தியில் உள்ள முகாம் விஸ்தரிக்கப்பட்டு வருவதால் அப்பகுதியில் உள்ள பல குடும்பங்கள் இடம்பெயரும் நிலையில் உள்ளதாகத் தெரிவிப்படுகின்றது.

முகாம் பலப்படுத்துவதற்காக அப்பகுதியில் உள்ள பனை, தென்னை மரங்கள் படையினரால் தறித்து எடுத்துச் செல்லப்படுவதாகவும், இதனால் தமது வாழ்வாதார வருமானங்கள் அழிக்கப்பட்டு வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

பெருங்குளம்சந்திமுகாம் விஸ்தரிக்கப்படுவதுடன் முகாம் பலப்படுத்தும் நடவடிக்கையினைப் படையினர் மேற் கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(3-117)

# பண்ணாகம் அ.த.க. பாடசாலைக்கு புதிய விளையாட்டு மைதானம்

வலி தென்மேற்கு மார்ச் 19

பண்ணாகம் வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் ஒன்று அமைப்பதற்காக பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினரால் காணி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுக் கையளிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக்குப்பக்கத்திலுள்ள இக்காணி கொள்வனவு செய்யப்பட்டு அதற்கான உறுதி பாடசாலை நிர்வாகத்திடம் வழங்கப்பட்டிருப்பதாக பழைய மாணவர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

இப்பாடசாலைக்கு நீண்ட காலமாக விளையாட்டு மைதானம் இல்லாத குறைபாடு இதன் மூலம் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

(3-135)

வெளிவந்துவிட்டது!!!




இலங்கையின் ஒரேயொரு மாதாந்த தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

தமிழ் PCTIMES
தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

2006 மார்ச் முதல் மாதாந்தம் வெளிவருகிறது.
இலங்கையின் சகல பாகங்களிலும் கிடைக்கும்!

புதிய
- தகவல்கள்
- செய்திகள்
- மென்பொருள் (SoftWare)
- வன்பொருள் (HardWare)
- செய்முறைகள்
- செயற்பாடுகள்

இன்னும் பல சுவையான அம்சங்களுடன்...

wijeya newspapers

விஜய பதிப்பகத்தாரின் மற்றுமோர் வெளியீடு.

**YMCA சேவைகள்**

சுவாத்தியமான தங்குமிடம், சுத்தமான உணவகம், நோயாளர் வாகனசேவை, திருமண மண்டபம், வசதிகளுடனும்கூடிய கேட்போர் கூடம் அனைத்தையும் நியாயமான கட்டணத்தில் பெற்றுக்கொள்ள

யாழ்.YMCA, (சி/48067)
109, கண்டி வீதி.தொ.பே 2222499

இதோ அறிமுகப்படுத்துகின்றோம்

**சிதார வர்ம தைலம்**

உடைவு, முறிவு, வீக்கம், சுளுக்கு, இரத்தக் கட்டு, முழங்கால் மூட்டுவலி, குதிக்கால் வலி ஆகியவைகளுக்கு காலை மாலை பூசி வரவும்.
Reg.Number 10171 ARPR No.228
(வெளிப்பிரயோகத்திற்கு மட்டும்)
சந்தைப்படுத்துவோர்:

சிவா நறுமணப்பூங்கா
288,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.Phone 222 2567
சகல பார்மசிகளிலும் கிடைக்கும்
(சி-48146)

**மணமகள் தேவை**

வைத்திய நிபுணர்களின் குடும்பத்தினரின் MBBSவைத்தியருக்கு MBBSஇன்ரன்சிப் செய்தும், பாஸ் பண்ணியவருமாகிய மணமகள் தேவை. வயது 30 விவரத்திற்கு
கொழும்பு -T.P:2587921
(சி/47894)

20+ YEARS CONTRIBUTION TOWARDS e-Sri Lanka by IDM
Nation's ICT Academy Affiliated University College

# IDM Computer Studies Islandwide (Pvt.) Ltd

Nation's ICT Academy
Affiliated University College

216, Navalar Road,Jaffna. T.Phone: 021-4591398

## Microsoft Online Examinations

எமது நிறுவனத்தில் MicroSoft பயிற்சி நெறிகளை மேற்கொள்ளும் மாணவர்களின் நன்மை கருதி Online பரீட்சைகள் எமது நிறுவனத்திலேயே செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

**Available In Jaffna Branch**

## Edexcel International - UK

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**1. BTEC Diploma in Teacher Education**




**2. Higher National Diploma (BTEC-HND)**

- HND in Computing
- HND in Software Engineering
- HND in Business Information Technology




(C/48397)

# ஜொகன்னர்ஸ்பேர்க் சுனாமி!




கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜொகன்னர்ஸ் பேர்க்கில் நடைபெற்ற ஆஸ்திரேலிய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான ஐந்தாவது ஒருநாள் ஆட்டத்தை பார்த்த ரசிகர்கள், அந்த ஆட்டத்தை எப்பொழுதுமே மறக்க மாட்டார்கள். கடைசி ஓவர்களில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்திய அந்த மயிர்க் கூச்செறியும் ஆட்டத்தைக் கிரிக்கெட் வரலாற்றில் இதுவரை யாரும் பார்த்திருக்கவும்மாட்டார்கள்; பார்க்கக் கிடைத்தவர்கள் கிரிக்கெட்டில் புண்ணியம் செய்திருக்கவேண்டும்.

ஆஸ்திரேலியா 434 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை எட்டி உலக சாதனை படைக்க, அதை வான்வரை சென்று நான்கே மணிநேரத்தில் முறியடித்து சாதனை மேல் ஒரு சாதனை படைத்தது தென்னாபிரிக்கா. ஆட்டத்தின் கடைசிப்பந்துவரை போராடிய தென்னாபிரிக்கா, 438 ஓட்டங்களை எடுத்து வெற்றியைப் பெற்றது. ஒரு நாள் தொடரையும் கூடவே கைப்பற்றியது. இப்படியான வரலாற்றுச் சாதனை மிக்க ஆட்டத்தை இனிமேலும் பார்ப்பது அரிது. ஆட்டம் முடிந்தாலும் விறுவிறுப்பு அலை இன்னும் அடங்காத ஆட்டம் அது.

2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்க அணி பெற்ற தோல்வியினால் அந்த ஆண்டே அணியில் அதிரடி மாற்றங்கள் செய்யப்பட்டன. அணித் தலைவராக இருந்த அனுபவ வீரர் ஷேன் பொலக்கைத் தூக்கிவிட்டு அப்போது குறைந்த ஒரு நாள் ஆட்டங்களில் பங்குபற்றியிருந்த கிரேம் சிமித்தின் கையில் தலைமைப் பொறுப்பு கொடுக்கப்பட்டது. இதற்குப் பல எதிர்ப்புகள் கிளம்பின.

தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரர்கள் பலர் சிமித்தைத் தலைவராக்கியமை மிகப் பெரிய முட்டாள் தனம் என்று கூறினார்கள். 2007 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரைக் கருத்தில் கொண்டுதான் சிமித்திடம் தலைமைப் பதவி கொடுக்கப்பட்டதெனக் கூறினார்கள். ஆனால், சிமித்தோ எல்லோரினதும் எதிர்க் கருத்துக்களையும் தவிடு பொடியாக்கியதுடன் தனது பணியை அருமையாக நிறைவேற்றினார்.

உலகக் கிண்ணத் தொடரிற்கான இலட்சிய அணியை உருவாக்குவதை முன்னிறுத்திச் செயற்பட்ட சிமித், தேர்வாளர்களின் நம்பிக்கையைப் பொய்யாக்காமல் அவர்களின் முயற்சியை சரியெனக் காட்டியுள்ளார். ஆஸ்திரேலியாவுக்கு எதிராக அவரது அணியினர் பெற்ற வெற்றி, வீரர்கள் ஒவ்வொருவருக்கும் தடைசெய்யப்பட்ட மருந்திலும் பார்க்க அதிகமான ஊக்க மாத்திரை.

சிமித்தின் தலைமைத்துவத் திறமைக்கு ஜொகன்னர்ஸ் பேர்க்கில் நடைபெற்ற ஐந்தாவது மற்றும் கடைசி ஒரு நாள் ஆட்டம் மட்டுமே உதாரணத்திற்குப் போதும். அதனால்தான் ஆட்டம் முடிந்த பின்னர் ''தென்னாபிரிக்க வீரர்கள் இவ்வளவு தூரம் போராடுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை.'' - என்றார் ரிக்கி பொண்டிங்.

ஆஸ்திரேலியா உலக சம்பியனான பின்பு வரிசையாகப் பல ஒரு நாள் தொடர்களை வென்றுள்ளது. இதனால் தென்னாபிரிக்கத் தொடரையும் அவர்கள் வென்று விடுவார்கள், அதிலும் இமாலய ஓட்டக் குவிப்பின் பின்னர் அது சந்தேகத்திற்கு இடமற்றது என்று ரசிகர்கள் எதிர்பார்த்திருந்தார்கள்.

அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் ஆட்டத்தின் உதவியுடன் ஆஸ்திரேலியா 434 ஓட்டங்களைக் குவித்தது. தென்னாபிரிக்க அணி வீரர்கள் செய்வதறியாது திகைத்தனர். ''இனி எப்படித்தான் பந்து வீசுவது?'' என்று அந்த மைதானத்தில் நின்று அவர்கள் நினைத்திருக்கக் கூடும். 105 பந்துகளில் 164 ஓட்டங்களைச் சேர்த்த ரிக்கி பொண்டிங் ஆட்டமிழந்து சென்றபோது அரங்கமே எழுந்து நின்று விளையாட்டு உணர்வுக்கு மதிப்பளித்தது.

இந்த இமாலய இலக்கை எந்த அணியும் எட்ட முடியாதென்று பல கிரிக்கெட் ஆர்வலர்கள் கணித்தார்கள். ஆனால் நடந்ததோ வேறு. கற்பனைகளுக்கு எட்டாதது. சுனாமி போன்ற அலைகளாக தென்னாபிரிக்க வீரர்கள் ஆஸ்திரேலிய பந்துகளைத் தாக்கத் தொடங்கினர்.

தென்னாபிரிக்க அணித் தலைவர் கிரேம் சிமித் 55 பந்துகளில் 90 ஓட்டங்களை விளாசி, தாக்குதலை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து கிப்ஸ் வீறுகொண்டெழுந்தார். 32 வயதாகும் கேப்டவுனைச் சேர்ந்த அனுபவ வீரரான கிப்ஸ் அணிக்கு உயிர் கொடுத்தார் என்றுதான் சொல்லவேண்டும். 111 பந்துகளில் 175 ஓட்டங்களைக் குவித்த கிப்ஸ், உலகையே தன்வசம் திருப்பினார். தென்னாபிரிக்க ரசிகர்களை மட்டுமல்லாது கிரிக்கெட் ரசிகர்களையே இருக்கையின் நுனிக்குக் கொண்டு வந்த அவ்வாட்டத்தில் நம்ப முடியாத அளவிற்கு தென்னாபிரிக்கா ஓட்டங்களைக் கிடுகிடுவென எகிற வைத்தது.

இறுதியில் கடைசி ஓவர் வரை போராடிய தென்னாபிரிக்கா மனம் துவண்டு போகாமல் 49.5 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 438 ஓட்டங்களைக் குவித்து ஆஸ்திரேலியாவை வீழ்த்தியதோடு அதன் உலக சாதனையையும் முறியடித்தது.



இதுவரை ஆஸ்திரேலியா இவ்வளவு திறமையை வெளிப்படுத்தி ஆடியதுமில்லை; தென்னாபிரிக்கா இந்தளவிற்கு பெரிய சாதனையை முறியடிக்கும் அளவிற்கு முன்னேறியதுமில்லை. இது வெற்றி என்று மட்டும் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடியதல்ல. முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் மற்றும் கிரிக்கெட் விமர்சகர்கள் இதை மகத்தான வெற்றி என்றுதான் கூறுகிறார்கள்.

10 வருடங்களிற்கு முன்பு-அப்போது கிரிக்கெட்டில் சின்னப் பிள்ளையாக நுழைந்த-கென்ய அணிக்கெதிராக 398 ஓட்டங்களைக் குவித்துச் சாதனை படைத்தது எமது நாட்டு அணி. அது மிகப் பெரிய சாதனையாக விளங்கினாலும், வலுவான ஓர் அணிக்கு எதிராக அச்சாதனை ஏற்படுத்தப்படவில்லை. ஆனால், உலகின் முன்னணி அணியான ஆஸ்ரேலியா 4 மணி நேரத்திற்கு முன்னர் முறியடித்த சாதனையை ஒரு படி மேலே போய் முறியடித்து சாதித்துக் காட்டியது தென்னாபிரிக்கா.

ஒரு நாள் ஆட்டம் ஒன்றில் 872 ஓட்டங்கள் குவிப்பது என்பது சாதாரண விடயமல்ல. இந்த ஆட்டம் உலகக் கிண்ணத் தொடரிற்கு பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தி விட்டது. அந்த ஆட்டத்தில் கிப்ஸ், பொண்டிங் ஆகியோரின் ஆட்டத்தைப் பார்த்தவர்கள் இனி ஒரு நாள் ஆட்டத்திலும் இரட்டைச் சதங்களை எதிர்பார்ப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

தென்னாபிரிக்காவின் இந்த உலக சாதனை மிகுந்த இந்த ஆட்டத்தை ரசிகர் கள்என்றுமே மறக்கமாட்டார்கள். ஆஸ்திரேலியாவைக் காட்டிலும் ஓர் வலுவான அணி இனி வரும் காலங்களில் உருவாக முடியும் என்பதைத் தான் ஜொகன்னர்ஸ்பேர்க் ஆட்டம்சுட்டி நிற்கின்றது. அதனால் இலங்கை உட்பட மற்ற அணிகள் எல்லாம் இது போன்ற சவால்களை சந்திக்க இப்போதே தயார் செய்து கொள்வது எதிர்காலத்திற்கு நல்லது. ✱



## பொதுநலவாய நாடுகள் விளையாட்டு

# இலங்கைக்கு முதல் தங்கம்!



ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் பொதுநலவாய நாடுகள் விளையாட்டுப் போட்டியில் இலங்கைக்கு நேற்று முதலாவது தங்கப் பதக்கம் கிடைத்தது. ஆண்களுக்கான 62 கிலோ பளு தூக்கல் நிகழ்ச்சியில் இலங்கை வீரர் சிந்தான விதானகே முதலிடம் பெற்று தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார். இந்தப் போட்டியில் இலங்கை பெறும் முதலாவது தங்கம் இதுவாகும்.

இதன் மூலம் பதக்கம் பெற்ற நாடுகள் பட்டியலில் இலங்கையும் இணைந்து கொண்டுள்ளது. ஏற்கனவே அந்தப் பட்டியலில் ஆஸ்திரேலியா முன்னணியில் இருக்கின்றது.

இந்திய வீரரான அருண் முருகேசனும் விதானகேயும் ஒரே அளவிலான (271 கிலோ கிராம்) பாரமே தூக்கினர். எனினும் விதானகேயைவிட முருகேசனின் உடல் எடை சற்றுக் கூடுதலாக (0.08) இருந்தது. இதனால் விதானகேயுக்குத் தங்கம் கிடைத்தது. முருகேசனுக்கு வெள்ளி கிடைத்தது. மலேசியாவைச் சேர்ந்தவரான அப்துல் ரோஸ்வாடி வெண்கலப் பதக்கம் வென்றார்.

# மொகாலி டெஸ்டில் பிளின்ரொப் சாதனை

இந்தியாவிற்கு எதிராக மொகாலியில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்டில் இங்கிலாந்தின் அணித் தலைவர் பிளின்ரொப் அரிய சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளார்.

இந்த டெஸ்ட ஆட்டத்தில் இங்கிலாந்து 9 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இந்த டெஸ்ட் ஆட்டத்தின் போது பிளின்ரொப் 5 நாள்களிலும் ஏதாவது ஒரு கட்டத்தில் துடுப்பெடுத்தாடி சாதனை படைத்திருக்கின்றார்.

இந்த ஆட்டத்தில் முதல் நாள் மாலை பிளின்ரொப் 5 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். மழையால் பாதிக்கப்பட்ட மறுநாள் அவர் 26 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். 3ஆம் நாள் அவர் 70 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். 4 ஆம் நாள் மாலை அவர் தனது 2ஆவது இன்னிங்ஸில் ஆட வந்தார். ஆட்டமிழக்காமல் இருந்த அவர் 5 ஆம் நாள் காலை 51 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இதன்மூலம் 5 நாள்களும் அவர் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிச் சாதனை படைத்துள்ளார். கிரிக்கெட் வரலாற்றில் இதற்கு முன்னர் 5 முறை மட்டுமே இது போன்ற சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

# மழையால் தப்பியது பாகிஸ்தான்

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி முதல் ஒருநாள் ஆட்டத்தில் மழை கொட்டியதால் இலங்கையின் பிடியிலிருந்து தப்பியது.

மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டம் கொழும்பு ஆர்.பிரேமதாஸ விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் பகலிரவு ஆட்டமாக நடைபெற்றது. இவ்வாட் டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணியினர் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் முன் தாக்குப் பிடிக்க முடியாமல் அப்படியே சரிந்தனர். சல்மான்பட் (26), கம்ரன்அக்மல் (5), சொய்ப் மாலிக் (7), இன்ஸமாம் (24) என விரைவாக ஆட்டமிழந்தனர்.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட அதிரடி நாயகன் சமீட் அப்ரிடி 2 ஓட்டங்களுக்கே வெளியேறி ஏமாற்றம் அளித்தார். மொஹமட் யூசுப் (46), யூனிஸ்கான் (41) ஆகியோர் ஓரளவு தாக்குப்பிடித்து ஓட்ட எண்ணிக்கையை 200ஐத் தாண்ட வைத்தனர். 50 ஓவர்கள் நிறைவில் பாகிஸ்தான் அணி 8 விக்கெட் இழப்பிற்கு 201 ஓட்டங்கள் எடுத்தது.

குறைவான வெற்றி இலக்கு என்பதால் இலங்கை அணிக்கு வெற்றி பிரகாசமாக இருந்தது. ஆனால், இடியுடன் கூடிய மழை வர மைதானம் வெள்ளக்காடானது. இதனால் இலங்கை அணி துடுப்பெடுத்தாட வாய்ப்பு இல்லாமல் போனது .இறுதியில் ஆட்டம் கைவிடப்பட் பாகிஸ்தான் தோல்வியிலிருந்து தப்பிப்பிழைத்தது.

# 100 ஆவது டெஸ்டில் டிராவிட்!

இந்திய அணித் தலைவரான ராகுல் டிராவிட் இன்று தொடங்கும் மும்பை டெஸ்ட்டில் 100 ஆவது டெஸ்ட் என்ற மைல்கல்லை எட்டுகிறார். இந்திய அணி இக்கட்டில் மாட்டித் தவிக்கும் சமயங்களில் கை கொடுக்கக்கூடிய வீரரான ராகுல் டிராவிட் இந்திய அணியின் பெருஞ்சுவர் எனப் போற்றப்படுகின்றார்.

1973 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11 இல் பிறந்த டிராவிட் 1996 ஆம் ஆண்டு ஜூன் 20 இல் இங்கிலாந்திற்கு எதிராக லோட்ஸ் மைதானத்தில் டெஸ்டில் அறிமுகமானார். முதல் டெஸ்டிலேயே 95 ஓட்டங்களைக் குவித்த பெருமை பெற்ற டிராவிட் அறிமுகமான இங்கிலாந்திற்கு எதிராகவே 100 ஆவது டெஸ்டுக்களில் விளையாடவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுவரை டிராவிட் 99 டெஸ்ட்களில் 8492 ஓட்டங்களை 58.16 என்ற சராசரியும் பெற்றுள்ளார். இதில் 22 சதங்களும் 41 அரைச்சதங்களும் அடங்கும். ஆஸி அணிக்கு எதிராக 19 ஆட்டங்களில் விளையாடியுள்ள டிராவிட் 1503 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இங்கிலாந்துக்கு எதிராக இதுவரை 11 டெஸ்களில் 1159 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.







# கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

வலி.தென்மேற்கு,மார்ச்19

சில்லாலை சாந்தை பகுதியிலும் அதன் சுற்றாடல்களிலும் நீண்டகாலமாக பொதுமக்களுக்கு உபத்திரவம் கொடுத்து வந்த கட்டாக்காலி நாய்கள் கடந்த புதன்கிழமையன்று பிடித்து அழிக்கப்பட்டன.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக பொறுப்பதிகாரியின் அனுசரணையுடன் பண்டத்தரிப்பு பொது சுகாதாரப் பரிசோதகர் என்.நிர்மலானந்தன் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

46 கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டு அவையாவும் அடித்துக் கொல்லப்பட்டன என கூறப்பட்டது.

(எ-135)

## தேவை

றோல், பற்றிஸ் தயாரிக்கத் தெரிந்த பெண் ஒருவர் தேவை.

தொடர்பு:- மு.கமலநாதன்,
17, விதானையார் விதி,
கண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(48243)(32-16-19)

## காணி, கடை விற்பனைக்கு

யாழ்.ஐயனார் கோயில் வீதியில் கிணறு, மலசலகூட வசதியுடன் 6¾ பரப்புக் காணியும் (தட்டாதெருச்சந்திக்கு அருகில்) மற்றும் யாழ்.கஸ்தூரியார் வீதியில் மேல் மாடியுடன் கூடிய கடையும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 021 222 5048
222 9080
077 3239159

(48246)
(32-16-19)

Chamber of Commerce and Industries of Yarlpanam
Incorporated under Companies Act.No.17 of 1982 N(A)765
(Affiliated to Federation of Chambers of Commerce and Industries of Srilanka)
601, Navalar Road, Nallur, Jaffna.

## Vacancy

### Post of Information Officer/Manager

CCIY is looking for a highly dedicated individual to serve as the Information Officer/Manager for the Jaffna office. The Information Officer will be responsible for all aspects connected with the information of Chamber activities.

❖ **Qualifications:-**

(a) University Degree Preferably in Management or Commerce.
(b) Excellent computer skills including knowledge of MS Office.
(c) Working knowledge of English.
(d) Motorbike License will be advantage.

❖ **Prior experience will be added Qualification.**

❖ **Salary:-** Negotiable

Interested Candidates should forward their CV's with the names of two non - related referees within Ten days of this advertisement.

**Chief Executive Officer,**
**CCIY.**
**15.03.2006.**

(C/48402)

## கிறிஸ்தவ ஊழியப் பயிலகம்

**இடம்:** சீயோன் தேவாலயம்
24, இராமையா செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

**காலம்:** 27-03-2006 முதல் 31-03-2006 வரை
**நேரம்:** காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை
**விரிவுரையாளர்:** போதகர் பரிசில்வர்பக் குழுவினர்
(சர்வதேச கிறிஸ்டியன் நிவைவல் குருசேட் பப்புவா நியூ கினி)

குறிப்பு:

- 5 நாள்களும் பங்குபற்றுபவர்களுக்குச் சர்வதேசச் சான்றிதழ் வழங்கப்படும்.
- கிறிஸ்தவ சபைகளில் ஊழியத்தில் ஈடுபடுவோர் பங்குகொள்ளலாம்.
- 200 பேர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுவர்.
- தனிப்பட்ட அழைப்புக் கொடுக்கப்படமாட்டாது.

**பதிவுக் கட்டணம் : ரூபா 70/=**
(பதிவுசெய்வோர் இக்கட்டணத்தை சீயோன் தேவாலயத்தில் செலுத்தலாம்)

**பதிவுசெய்யும் கடைசித் திகதி**
**20.03.2006**
(உங்கள் விண்ணப்பத்தை நேரடியாகவோ கடித மூலமாகவோ கீழ்க்காணும் முகவரியில் பதிவுசெய்யலாம்)

☞ **விண்ணப்பப் படிவம் உங்கள் சபை போதகரினால் சிபார்சு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.**

***போதகர் சீயோன் தேவாலயம்,***
***347, நாவலர் றோட்,***
***யாழ்ப்பாணம்.***

தகவல்:
போதகர் J.K. பிலிப்
(சீயோன் தேவாலயம்)

(47895)(32.26.16.19)

# Danish Refugee Council (DRC)

*Vacancy*

**Senior Programme Co-ordinator**

The Danish Refugee Council works to promote lasting solutions to the problems of refugees and internally displaced persons throughout the world. Operational in Sri Lanka since 1998, DRC supports reintegration of returned persons in the North and East and capacity building of local partner organizations. Programme sectors include infrastructure rehabilitation, income generation, social mobilisation, capacity development as well as protection and advocacy. DRC works in close partnership with local communities, NGOs and authorities. DRC's main office is located in Vavuniya, with district offices in Trincomalee and Kilinochchi.

The Senior Programme Co-ordinator holds a senior national management position within DRC's Sri Lanka programme. S/he has primary responsibilities in guiding and supporting programme activities and staff. Based in Vavuniya, s/he travels extensively in North and East Sri Lanka, and occasionally to Colombo. S/he reports to the Country Representative and is a member of the senior management team.

**Main Responsibilities:**

- Ensure that programme activities are designed and conducted in accordance with DRC's mandate, humanitarian guiding principles and current best practices;
- Provide appropriate guidance and support to DRC and local partner staff;
- Promote a co-ordinated approach to rehabilitation efforts through liaison with relevant local authorities, local and international NGOs and other stakeholders;
- Ensure that programme activities are conducted in accordance with project documents and schedules, and with donor requirements;
- Draft reports and proposals.

**Qualifications:**

- Good first degree from a recognised university;
- At least 10 years of NGO experience, including 3 with an INGO at senior management level;
- Significant experience in post-conflict rehabilitation and local capacity development;
- Excellent communication and inter-personal skills, with demonstrated ability to work as part of a multi-disciplinary team;
- Fluency (spoken and written) in English & Tamil, Sinhala preferred;
- Training and experience with participatory methods (PRA, etc.);
- Willingness to live, work and travel in N.E. Sri Lanka is mandatory.

Please forward your curriculum vitae along with contact telephone numbers and names of three work-related referees to the following address by March 31. The position title should be indicated on the top left hand corner of the envelope in applications sent by post.

*Remuneration package is competitive and negotiable. Qualified women are encouraged to apply.*

**Head of Administration and Finance**
**Danish Refugee Council**
**77 First Cross Street, first floor**
**Vavuniya 43000**

**Fax no. 024-2224009**
**E-mail: recruitment@drc.lk-org**

## மரண அறிவித்தல்

### மகேந்திரராசா மயூரன்



அல்வாய் தெற்கு, ஸ்ரீ மகாலைச் சேர்ந்தவரும் லண்டனில் வசித்தவருமான செல்வன் மகேந்திரராசா மயூரன் அவர்கள் 16.03.2006 வியாழக்கிழமை லண்டனில் அகால மரணமானார்.

அன்னார் க.மகேந்திரராசா (தொழிற் திணைக்களம், யாழ்ப்பாணம்) - ஸ்ரீநந்தனா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் மனோராஜ், மதிரதன் (இ.போ.ச, பருத்தித்துறை), மனோஜன், நிதர்சன், சஞ்சிதா, சர்மிலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஸ்ரீதரன் (முகாமையாளர், மக்கள் வங்கி, மாங்குளம்) - மல்லிகா, பிரபாகரன் - கிருஷ்ணா (லண்டன் ), சதாசிவம் - மகாமணிதேவி, சிவனேசன் - ஸ்ரீமணிதேவி ஆகியோரின் மருமகனும் பாக்கியராசா - மீனாட்சியம்மா, செல்வராசா - சிவனேஸ்வரி, விநாயகராசா - சத்தியகுமார் ஆகியோரின் பெறாமகனும் முகுந்தன், நிருபிகா, நிரோஷிகா, ரமணன், சாரங்கன், சிவானி, ஈஸ்வரன் (சுவிஸ்), திருமதி பொன்னரசன் மீரா (கனடா), திருமதி மோகன் அனுரா, சுஜாத்தா, சிவகௌரி, திருமதி சச்சிதானந்தன் தனுஷா (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் திருமதி சண்முகதாஸன் சத்திய வாணி (சுவிஸ்), கலைவாணி (ஆசிரியை, தேசிய பாடசாலை, மன்னார்), ஜெயவாணி, வானதி, எழில்நிலா, கிருஷிகேசன் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

***அல்வாய் தெற்கு,***
***அல்வாய்.***

தகவல்:
**க.மகேந்திரராசா**
*(தந்தை).*

(48303)(32-16-19)

# உடையார்கட்டு மகாவித்தியாலயத்தின் தேவைகள் நிறைவு செய்யப்படுமா?

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள உடையார்கட்டு மகாவித்தியாலயம் பல்வேறு வசதியீனங்களுடன் இயங்கி வருகின்றமையால் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக இயங்கும் இந்தப் பாடசாலை அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வருகின்றது.

1974ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலை மூன்று நிரந்தர கட்டடங்களையும் ஓர் அரை நிரந்தரக் கட்டடத்தையும் ஐந்து



தற்காலிக ஓலைக்கொட்டகைகளையும் கொண்டு இயங்கிவருகின்றது.

பல்வேறு இடப்பெயர்வுகள் போர்க் காலச் சூழ் நிலைகள் போன்றவற்றின் போது மக்களைத் தாங்கி, தன்னகத்தே வைத்துப் பாதுகாத்தும் இருக்கிறது இந்தப் பாடசாலை.

தற்போது ஆயிரத்து 400 இற்கும் மேற்பட்ட மாணவர்களையும் 38 ஆசிரியர்களையும் கொண்டு இயங்கிவரும் இந்தப்பாடசாலை ஆண்டு ஒன்றுமுதல் ஜி.சீ.ஈ. உயர்தரம் வரையான பிரிவுகளைக் கொண்டது.

கடந்த ஆண்டு மார்கழி மாதம் பெய்த மழை காரணமாக இப்பாடசாலையின் தற்காலிக கொட்டகைகளின் சுவர்கள் இடிந்து விழ்ந்துள்ளன.

இந் நிலையில் ஏனைய நிரந்தரக் கட்டடங்களில் அனைத்து வகுப்பு மாணவர்களையும் வைத்து கற்பிக்கக்கூடிய இட வசதியும் இல்லை. இதனால் மாணவர்கள் பெரும் சிரமமடைகின்றனர்.

இதனால் மழைகாலங்களில் பாடசாலை கற்றல் செயற்பாடுகளை உரிய முறையில் நடத்த முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது.


மாணவர்கள் பாடசாலைக்கு வரும் போது கொண்டு வரும் சைக்கிள்களை நிறுத்தி வைப்பதற்கும் ஓர் இடம் இப் பாடசாலையில் இல்லை.

பாடசாலையின் விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கு கூட ஒரு

**வன்னிமடல்**

நிரந்தரக்கட்டடம் இல்லை. தற்காலிக கொட்டகையிலேயே இது இயங்கி வருகின்றது.

நூலகத்திற்கான கட்டடம் பொதுக் கல்வித்திட்டம் II இன் கீழ் ஆரம்பிக்கப்பட்டு இரண்டுவருடங்களாகியும் அதன் வேலைகள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை.



தற்காலிகக் கொட்டகைகளில் கல்விபயிலும் மாணவர்களின் அவலம்.

மாணவர்கள்இருக்கும்வகுப்பறைகளில் தளபாட வசதிகள் மிகவும் குறைவாகவே உள்ளன.

இவை மட்டுமன்றி ஆசிரியர்களுக்கென தனியான ஒரு ஓய்வறையோ, சங்கீத, நடன பாடங்களை நடத்துவதற்கான வகுப்பறைகளோ இங்கு தனியாக இல்லாததால் ஆசிரியர்களும் மாணவர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். நீண்டகாலமாக இயங்கிவரும் இப் பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் ஒன்று இதுவரை அமைக்கப்படவில்லை.

அடிப்படைத் தேவைகளான மலசல கூட வசதி, குடி தண்ணீர் வசதி போன்றனவும் இங்கு போதியளவில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வில்லை.

அதிபர், ஆசிரியர்களுக்கென அமைக்கப்பட்டுள்ள விடுதி பெயரளவில் மட்டுமே

**பொன்பரன்**

விடுதியாக உள்ளது. இந்தப் பாடசாலைக்கென கணனி ஒன்று வழங்கப்பட்டுள்ள போதிலும்அதற்கென தனியான ஓர் இடமோ, மின் பிறப்பாக்கியை இயக்குவதற் கான எரிபொருளோ, மின்சாரவசதியோ இல்லாமையால் கணனியை உரிய முறையில் இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

யுத்த காலங்களின் போது பெரும் நெருக்கடிகளைச் சந்தித்த இந்த மாணவர்கள் சமாதான காலத்திலாவது ஒரு விடிவு கிடைக்காதா என ஏங்கிநிற்கின்றனர். இந்த விடயத்தை சம்பந்தப்பட்ட அதி காரிகள் கவனத்தில் எடுப்பார்களா என இந்தப் பாடசாலை சமூகம் ஏங்கிநிற்கிறது.

## ஜெனீவா உடன்பாடு....

[5ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஜெனீவா உடன்பாடுகளை, இந்த வகையான - படையினரின் பிரசன்னத்திலான - இயல்பு வாழ்க்கையாக காட்ட ஜனாதிபதி முனைந்துள்ளாரா என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

தற்சமயம் நிலவும் அமைதியான சூழலுக்கு விரோதமாக - தமிழ்மக்களின் விருப்பத்துக்கு மாறாக -யாழ்.பல்கலைக் கழகத்துக்கு துணைவேந்தரை நியமிப்பது, இணைப்புக்குழுவுக்கு தலைவரைத் தெரிவு செய்வது - போன்றசெயற்பாடுகளை ஜனாதிபதி முன்னெடுப்பாராக இருந்தால், மீண்டும் மக்கள் கொந்தளித்து எழும் சூழல் உருவாகும். அத்துடன் ஜெனீவாவின் அடுத்த கட்டப் பேச்சுகளுக்கு முன்பாக அங்கு முன்னர் எட்டப்பட்ட இணக்கப்பாடுகள் நிறைவேற்றப்படாவிட்டால் மக்கள் கொந்தளிப்பு தவிர்க்க முடியாத தாகிவிடும் என்று மக்கள் கூறுகின்றனர்.

இந்தநிலையில், மக்கள் உள்ளூராட்சித் தேர்தலை எதிர்நோக்கி நிற்கின்றனர். தமிழ்மக்களின் அபிலாஷைகளுக்கு விரோதமானவர்கள் உள்ளூராட்சிச் சபைகளை கைப்பற்ற முனைப்புடன் செயற்படத் தயாராகின்றனர். உள்ளூராட்சிச் சபைகளைக் கைப்பற்றி, தங்களது ராஜபோக வாழ்க்கையை நிலை நிறுத்த அந்தச் சக்திகள் தயாராகிக் கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலைப் போன்று இந்தத் தேர்தலையும் தமிழ்மக்கள் புறக்கணிப்பார்கள். நாங்கள் எல்லாச் சபைகளையும் கைப்பற்றி, விடுதலைப் புலிகள் பக்கம் மக்கள் இல்லை. அவர்கள் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் இல்லை என்று சர்வதேசத்துக்குக் காட்ட இந்தச் சக்திகள் தயாராகி நிற்கின்றன.

இந்தச்சக்திகளுக்கு நல்ல பாடம் புகட்ட தமிழ்மக்கள் தயாராகிவிட்டனர். குடாநாட்டில் மட்டுமல்ல, வடக்கு -கிழக்கில் சகல சபைகளையும் கைப்பற்றி தமிழ் தேசியத்துக்கு உரம் சேர்க்க மக்கள் தயாராகிவிட்டனர். தேர்தல் நடக்குமா? இல்லையா? என்ற கேள்வி ஒருபுறம் எழுப்பப்படுகின்ற போதும், இந்த மண்ணில் தமிழ் தேசியத்தின் எழுச்சியை நிலை நாட்ட மக்கள் தயாராகிவிட்டனர்.

மக்கள் அளிக்கப்போகும் தீர்ப்பு, இந்த மண்ணில் தமிழர் விரோதச் சக்திகளுக்கு இடம் இல்லை என்பதை நிரூபிக்கப் போகின்றது மட்டும் உண்மை.

# பிறர்மீது கொள்ளும் நம்பிக்கை கடவுள் நம்பிக்கையாய் மலரும்

''அவரிடம் நம்பிக்கை கொள்ளும்
அனைவரும் நிலைவாழ்வு பெறுவர்''

நம்பிக்கையே வாழ்வின் அடித்தளம். மனிதர்கள் ஒவ்வொருவரின் வாழ்வும் நம்பிக்கையில் கட்டியெழுப்பப்படுகின்றது. தந்தை, தாய் மீது பிள்ளைகளும் பிள்ளைகள் மீது தாய், தந்தையும் நம்பிக்கை வைக்க வேண்டும். நம்பிக்கையினாலேயே குடும்ப உறவு வளர்க் கப்படுகின்றது. ஒருவர்மீது ஒருவர் நம்பிக்கை வைக்காமல் சந்தேகம் ஏற்படுமானால், அது அந்த குடும்ப உறவையே பெரிதும் பாதிக்கின்றது.

நம்பிக்கை என்பது குடும்பத்தில் மாத்திரம் இருக்கக்கூடியது மட்டும் அல்ல. அது உறவினர், நண்பர்கள், அயலவர்கள் போன்ற அனைவரிடத்திலும் இருக்கவேண்டிய ஒன்றாகக் காணப்படுகின்றது.

யேசுவும் சீடரும் படகில் ஏறிச் சென்றுகொண்டிருந்தவேளை பெரும் புயலுடன் கூடிய கடற் கொந்தளிப்பு ஏற்பட்டது. சீடர்கள் பயந்து தூங்கிக்கொண்டிருந்த யேசுவை எழுப்பினர்.

'நாங்கள் சாகப் போகிறோம் எங்களைக் காப்பாற்றும்' என்று அவரிடம் கூறினர். அதற்கு யேசு 'நம்பிக்கை குன்றியவர்களே ஏன் அஞ்சுகின்றீர்கள்'' என்று கூறி காற்றையும் கடலையும் அடக்கினார்.

## தவக்காலச் சிந்தனை 19

யேசு போதித்துக் கொண்டிருந்தவேளை சீடர்களைப் படகேற்றித் தமக்குமுன் அக்கரைக்குச் செல்லு மாறு அவர் கட்டாயப்படுத்தினார். அவர்கள் வெகுதூரம் சென்றபின் தனது போதனையை முடித்துக்கொண்டு மலைக்குச் சென்று தனிமையில் இறைவனை வேண்டி, பின்னர் எதிர்க்காற்று வீசிக்கொண்டிருந்தவேளை படகு பெரும் அலைகளால் அலைக்கழிக்கப்பட்டது. இரவின் நான்காம் காவல் வேளையில் யேசு அவர்களை நோக்கி கடல்மீது நடந்தார். அதனைக் கண்ட சீடர்கள் கலங்கி 'ஐயோ பேய்' என்று அச்சத்தினால் அலறினர். உடனே யேசு 'துணிவோடிருங்கள், நான்தான் அஞ்சாதர்கள்' என்றார். உடனே பேதுரு 'நீர் தாம் என்றால் நானும் கடல்மேல் நடக்க ஆணையிடும்' என்றார். 'வா' என அழைத்தார் யேசு. உடனே பேதுரு படகிலிருந்து இறங்கிக் கடல்மீது நடந்தார். அப்பொழுது பெரும் புயற்காற்று வீசியது. உடனே பேதுரு நம்பிக்கை இழந்து மூழ்கும்போது 'ஆண்டவரே என்னைக் காப்பாற்றும்' என்று கத்தினார். 'யேசு நம்பிக்கை குன்றியவனே ஏன் ஐயம் கொண்டாய்' என்று கூறி அவரைப் படகினில் ஏற்றினார்.

இவ்விரு சம்பவங்களின் மூலம் யேசு, நம்பிக்கை இழப்பதனால் பெரும் இழப்பு நேரிடும் என்பதைத் தெளிவாக எடுத்துக்கூறுகின்றார். எனவே, ஒரு செயலைச் செய்யும்போது அதில் நம்பிக்கை இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் அச் செயலில் வெற்றியடையமுடியும்.

நம்பிக்கையானது ஒவ்வொரு செயலிலும் இருக்கவேண்டும். ஒவ்வொருவருக்கும் நம்பிக்கை ஒரு மரத்தின் அணிவேரினைப் போன்று அத்தியாவசியமானது. நண்பன் ஒருவன் தன்னுடைய நண்பனை அன்பு செய்கிறான் என்பதை அவனுக்கு ஓர் ஆபத்து நேரிடும் வேளையில் எவ்வாறு தோள் கொடுத்து உதவுகின்றானோ அதன் மூலமே வெளிப்படும்; அவனது அன்பு தெளிவாகத் தெரியும்.

'நான் கடவுள்மீது நம்பிக்கையோடு இருந்தேன், ஆகவே குணமடைந்தேன்'

நம்பிக்கையானது ஒவ்வொருவரது வாழ்விலும் இருக்கவேண்டும். என்னால் இந்த வேலையை முடிக்கமுடியும் என்ற நம்பிக்கை வேண்டும். நாங்கள் ஒவ்வொருவரும் கடவுள் மீது நம்பிக்கையோடு இருக்க வேண்டும். நம்பிக்கையிழந்த ஒவ்வொருவரும் கடவுளைவிட்டு வேறு பாதையில் சென்று பாவ காரியங்களில் ஈடுபடுகின்றார்கள். இதனால், நிலை வாழ்வை இழந்து தவிக்கின்றார்கள்.

இன்றைய காலத்தில் பாவ வாழ்க்கையானது மலிந்து காணப்படுகின்றது. கொலை, கொள்ளை, கற்பழிப்பு, கொடுமைப்படுத்தல், கடத்தப்படுதல் போன்ற பல பாரிய பாவ காரியங்கள் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒருவர் முன்னேறினால் மற்றவர்கள் பொறாமைப் படுதல், முன்னேறவிடாமல் தடுத்தல் போன்ற காரியங்களால் இன்றைய சமுதாயம் பெரிதும் சீர்கெட்ட சமுதாயமாக மாறிக்கொண்டிருக்கின்றது. இதற்குக் காரணம் ஒருவர்மீது ஒருவர் கொண்டிருக்கும் அவ நம்பிக்கை.

எனக்குத் துணையாக இறைவன் இருக்கின்றார் என்ற நம்பிக்கையுடன் ஒவ்வொரு செயலிலும் நம்பிக்கை இருக்கும் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய முயற்சியில் முழுப்பயனை அடையமுடியும். இயேசுதான் மெசியா என்று நம்பிபுவோர் அனைவரும் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள்.

நாம் கடவுள்மீது அன்புகொண்டு அவர் கட்டளைகளைக் கடைப்பிடிக்கும்போது கடவுளின் பிள்ளைகளின் மீதும் அன்பு செலுத்துகின்றோம் என்பது எமக்குத் தெரியவரும். நாம் கேட்கும் வேண்டுகோளானது கடவுளின் திருவுளத்திற்கு ஏற்ப அமைந்திருப்பின் அவர் நமக்கு செவிசாய்க்கிறார். இதுவே நாம் அவர்மீது கொண்டுள்ள உறுதியான நம்பிக்கை. இவ்வாறு நாம் வேண்டும் வேண்டுதல்கள் நிறைவு பெறுவதன் மூலம் எங்களுக்கு கடவுள்மீது கொண்ட நம்பிக்கையானது வெளிப்படுத்தப் படுகின்றது.


நாங்கள் செய்யும் செயலானது அதேவடிவில் நம்மிடமே திருப்பி அனுப்பப்படுகின்றது. நன்மைசெய்தால் எமக்கும் அது நன்மையாக முடிகின் றது. தீமை செய்தால் அது நமக்கும் தீமையாகவே வந்து சேருகின்றது.

ஒருவர்மீது ஒருவர் அன்பு செலுத்துவோமாக ஏனெனில், அன்பு கடவுளிடமிருந்து வருகின்றது. அன்பு செலுத்துபவர்கள் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள் ஆவார்கள். அவர்கள் கடவுளை அறிந்துள்ளார்கள். அன்பில்லாதவர்கள் கடவுளை அறியாதவர்கள். கடவுள் எங்கள் மீது கொண்ட அன்பினாலேயே எங்களைப் பாவத்திலிருந்து மீட்க தன் ஒரே மகனை இவ்வுலகிற்கு மனிதனாக அனுப்பி பல பாடுகளைப் பட்டு கடவுளுக்கு மக்கள்மீது கொண்டிருந்த அன்பை இவ்வுலகிற்கு எடுத்துக்காட்டினார். நாம் கண்ணுக்குத் தெரியாத கடவுளுக்கு அன்பு செலுத்துவதற்கு முன்னர் ஒவ்வொருவரும் சகோதரர்மீது அன்பு செலுத்தி, அவர்கள் மீது நம்பிக்கை கொண்டால் நாம் கடவுளையே அன்பு செலுத்தி அவர்மீது நம்பிக்கை கொண்டவர்கள் ஆவோம். இதையே கடவுள் தன் மகன் யேசுவின் மூலம் எங்கள் ஒவ்வொருவருக்கும் எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டினார்.

நீங்கள் யாரும் எதிலும் கடன்படாதீர்கள். ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதே நீங்கள் செலுத்தவேண்டிய ஒரே கடனாய் இருக்கட்டும். கடவுள்மேல் நம்பிக்கை இழந்ததாலேயே சக்கரியா ஊமையாக்கப்பட்டார். நாங்கள் நம்பிக்கையுடன் இறைவனிடம் வேண்டும் எந்தவொரு வேண்டுதலும் இறைவனால் செவிசாய்க்கப்படும்.

எனவே, நாங்கள் அனைவரும் நம்பிக்கை தளராமல் இறைவனிடம் நம்பிக்கையுடன் செபிக்கவேண்டும். நம்பிக்கையானது தாய், தந்தை மீது பிள்ளைகளும் பிள்ளைகளின் மீது தாய் தந்தையும் உற்றார் உறவினர்கள் மீதும் நண்பர்கள் மீதும் கடவுள்மீத் நம்பிக்கைகொள்ளவேண்டும். அதைவிட ஒருவன் தன் மீதே தான் நம்பிக்கை கொள்ளவேண்டும்.

- செந்தினி



மாதகல் கடற்கரையிலுள்ள புனித லூர்த்துமாதா (கெவி) ஆலய வருடாந்த திருவிழா இம்முறை மாதகல் புனித தோமையர் ஆலய வளாகத்தில் நடைபெற்றது. யாழ்.மறை மாவட்ட ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை திருப்பலி ஒப்புக் கொடுப்பதை முதலாவது படத்திலும் திருவிழாவின் போது சித்திரத் தேரில் புனித லூர்த்து மாதா பவனி வந்து அருள் பாலிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: வலி.தென்மேற்குச் செய்தியாளர்)

## ஆனைக்கோட்டையில் இரு தினங்கள் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம், மார்ச் 17

ஆனைக்கோட்டை சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசிகள் ஏற்றப்படவுள்ளன.

நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணிவரை உயரப்புலம் அடைக்கலநாயகி சனசமூக நிலையத்திலும்- முற்பகல் 11.30 மணி தொடக்கம் 1.30 மணி வரை சும்மாரீறும் சந்தியிலும் பிற்பகல் 2 மணி தொடக்கம் 3.30 மணிவரை உதயதாரகை சனசமூக நிலையத்திலும் தடுப்பூசிகள் ஏற்றப் படும்.

நாளைமறுதினம் புதன்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11மணிவரை ஆனைக் கோட்டை சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் 1.30 மணிவரை மூத்தவிநாயகர் கோயிலடியிலும்-

பிற்பகல் 2.30 மணி தொடக்கம் 3.30 மணிவரை சென்பீற்ரேஸ் சனசமூக நிலையத்தி லும் தடுப்பூசிகள் ஏற்றப்படவுள்ளன என ஆனைக்கோட்டைப் பிரதேச சுகாதாரப் பரி சோதகர் அறிவித்துள்ளார். (எ-202)

## பொதுக்கூட்டம்

வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சங்கத்தின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ். பல நோக்கு கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் சி.சிவராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் ஓட்டோ உரிமையாளர்கள், சாரதிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (எ-202)

## Mobile Phone Repairing

(கையடக்கத் தொலைபேசிகள் திருத்தும் பயிற்சி)

**SOFTWARE, HARDWARE THEORY**

I. Phone Spares.
II. Phone பாவிக்கும் முறைகள்.
III. Phone இல் காணப்படும் I.C வகைகள்.
IV Spares பழுதினால் தோன்றும் பழுதுகள்.
V. I.C பழுதடைவதனால் Phone இல் தோன்றும் பழுதுகள்.
VI. Trouble Shooting 1
VII. Trouble Shooting 2
VIII. I.Cகளை நேரடியாக மாற்றுவதன் மூலம் பழுதுகளை நிவர்த்தி செய்தல்.
IX. ஒரு Phone இல் இருந்து இன்னொரு Phone இற்கு ஒத்துப்போகும் I.C வகைகள்.
X. Soft ware, Hard ware இல் ஏற்படும் பழுதுகள்.
XI. Software codes.
XII. Service Diagram ஐப் பயன்படுத்தி I.C களைக் கண்டறிதல்.

**Practical Classes**

I. Battery இல் Voltage அளவிடும் பயிற்சி.
II. Battery இற்கு Quick Charge ஏற்றுதல்.
III. Phone கழற்றும் முறை.
IV. Phone இல் உள்ள பாகங்களை அடையாளப்படுத்தல்.
V. Phone களை Service செய்யும் முறை.
VI. Phone Charge Testing.
VII. Phone Mother board இல் காணப்படும். Registers, Capacitors மாற்றும் பயிற்சி.
VIII. I.Cகளை மாற்றும் பயிற்சி.
IX. Key PAD L.E.D மாற்றும் பயிற்சி.
X. Spares களை மாற்றும் பயிற்சி. (Switch, Display, Ribbon) ஒட்டுதல்.
XI. Hot Gun பயன்படுத்தும் பயிற்சி.

**SOFT WARE**

I. Software Infroduction
II. Software Installation
III. Unlocking (Lock உடைத்தல்)
IV. Software Updates (Flashing)
V. Unlimited Video
VI. MP3 Player
VII New Various
VIII. Anti Virus
(V–VIII) போன்ற Softwares Phone இற்கு போடும் பயிற்சி
IX. Games, Images, Songs phone இற்குப் போடுதல்.
X. Memory Card render writter Introduction
XI. Blue tooth மூலம் Computer இல் இருந்து picture Tones போடுதல்.

மற்றும் phone கள் திருத்தும்போது நடைமுறையில் வரும் பிரச்சினைகளை கையாள்வது போன்றவற்றும் பயிற்சிகள்.

பயிற்சிக் காலம்:- 1Month ஆசிரியர்: S.தீபன்

பயிற்சிக் கட்டணம்:- ~~10,000/=~~ 4,100/=

தொடர்புகளிற்கு: T.P.: 077 3068927

இடம்:- ஸ்ரீ சத்திய சாயி அச்சகம், K.K.S. Road, பூநாறி மரத்தடி, யாழ்ப்பாணம். (48305)

## மறைந்தும் மறவாத ஓராண்டு நினைவலைகள்

மண்ணில் 09 - 06 - 1941 விண்ணில் 30-03-2005

திருமதி

### செல்லம்மா செல்லையா

திதி: 19-03-2006



தோற்றம் மறைந்தாலும் நாமமோ மறையவில்லை
காலம் கரைந்தாலும் கவலையோ ஆறவில்லை
ஓராண்டாய் நீங்கள் சென்ற இடமறியோமே?
எங்கிருந்தாலும் உங்கள் ஆத்மா சாந்திபெற
எல்லாம்வல்ல மீனாஷி அம்பாளை வேண்டிநிற்கின்றோம்.

(48316)(26.16.19)

என்றும் உமை மறவாத
**கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

4ஆம் குறுக்குத்தெரு,
கச்சாய்றோட், சாவகச்சேரி
0777 715034

## ஊர்காவற்றுறையில் கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

குருநகர்,மார்ச் 17

ஊர்காவற்றுறைப் பகுதியில் கட்டாக் காலிகளாகத் திரியும் வளர்ப்பு நாய்கள், நாய்பிடிக்கும் ஊழியர்களாலும் ஊர்கா வற்றுறைப் பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களாலும் அழிக்கப்பட்டு வருகின்றன.

(எ-51)

## IBMS

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

பிரிவு I : 25.03.2006
பிரிவு II : 27.03.2006
காலை 10.00 மணி

| கற்கைநெறி | பயிற்சிக்கட்டணம் | |
|---|---|---|
| | முழுமையான கட்டணம் | சலுகைக் கட்டணம் |
| Dip. in Microsoft Office | ~~3000.00~~ | 500.00 |
| Dip. in Desk Top Publishing | ~~4000.00~~ | 500.00 |
| Dip. in Internet Technology | ~~4000.00~~ | 500.00 |
| Dip. in Hardware Eng. | ~~5000.00~~ | 1500.00 |

Head Office : # 410, K.K.S. Road, Jaffna.
T.P. No. : 021 222 8232

Branches : • NMMV Road, Nelliady
• Sangaththanai, - Chavakachcheri

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவாம்பிகை அருணாசலம்

(டச்றோட், சித்தன்கேணி)

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவாம்பிகை அருணாசலம் அவர்கள் வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் (முன்னாள் பிரதம சிறாப்பர், வவுனியா கச்சேரி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் புதல்வியும் சங்குவேலியைச் சேர்ந்த கந்தையா தம்பதியரின் மருமகளும் பரந்தாமன் (சுங்கத்திணைக்களம், கொழும்பு), ஆதித்தன் (கனடா), உமாபதி (U.K.) , தண்டபாணி (சுவிஸ்), தவநாயகி, அருந்ததி (வவுனியா) ஆகியோரின் பாசமிகு தாயும் விஜயலட்சுமி, கங்கா, சுலோசனா, கீதா, சண்முகநாதன் (இந்திரா ஸ்ரோர்ஸ் -மாங்குளம்) ஆகியோரின் அன்பு மாமியும் வேணி, திவாகர், கோபிகா, கணதீபன், கஜதீபன், பிரதீஸ், சுகன்ஜா (வவுனியா வளாகம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற நிலஅளவைத் திணைக்கள உதவி அத்தியட்சகர் சுப்பிரமணியம் அவர்களின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு பொரளை ஜெயரட்ண மலர்சாலையில் நேற்று (18-03-2006)சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 6 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப் பட்டது. இன்று (19-03-2006) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இறுதிக் கிரியைகள் ஆரம்பமாகி முற்பகல் 10 மணிக்கு பொரளை கனத்தை இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

24, விவேகானந்தா வீதி,
கொழும்பு - 06
தொ.பே.060 2158022

தகவல்:
அ.பரந்தாமன் (மகன்),
(சி/48431)(26.16.19)

### திருமதி அருந்ததி நாகலிங்கம்



கல்வியங்காடு 3ஆம் கட்டையைப் பிறப்பிடமாகவும் 'அருந்ததி வாசம்', அரசடி வீதி, வண்ணார்பண்ணையை வதிவிடமாகக் கொண்ட திருமதி அருந்ததி நாகலிங்கம் அவர்கள் லண்டனில் 15-03-2006 அன்று காலமானார்.

அன்னார் மீசாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி நாகலிங்கத்தின் (நீர்பாசன திணைக்களம்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஜெயராஜசேகரம், ஜெயராணி, தெய்வேந்திரம், சிவசிவாபிள்ளை, சிவகங்கை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜானகி, சிவசுப்பிரமணியம் யசோதரா (சறோ) ஆகியோரின் பாசமிகு தாயும். பரமேஸ்வரன், தங்கமலர், சிவராஜா ஆகியோரின் மாமியும் அகிலன் - [illegible]யாநிதி, திருமதி சுமங்களா சிவகுமார், திருமதி நிரஞ்சலா சிவகரன், திருமதி சிவகங்கா மாதவன், திருமதி வானதி பாலகுமார், திருமதி [illegible]மவினி சுஜேந்திரன், சிரோமி, துஷ்யந்தி, சஞ்ஞீவன், கஜன் ஆகியோரின் பேர்த்தியும் ராகுல், மிதுன், பிரியங்கரி, ஆதிரி, ரிஷிகே[illegible] வைஷ்ணவி, அஸ்வின் ஆகியோரின் பூட்டியு மாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அருந்ததிவாசம்,
அரசடி வீதி,
வண்ணார்பண்ணை.

(சி/48431)(26.16.19)

தகவல்:
மகன்,

## முல்லை தொழில்நுட்பக்கல்லூரி - முல்லைத்தீவு

### பதவி வெற்றிடம்

**01. அதிபர் பதவி**

**தகைமைகள் -**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பினை நிறைவு செய்திருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமனான கல்வித்தகைமையைக் கொண்டிருந்தல் வேண்டும்.
- ஆங்கில அறிவுள்ளவராகவும் கணனி அறிவுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
- நிர்வாக அனுபவம் உள்ளவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**02. உடை தயாரிக்கும் உற்பத்தி நிலையமுகாமையாளர்**

**தகைமைகள் -**

- ஆகக்குறைந்தது க.பொ.த.சாதாரணதரத்தில் சித்தி
- இருபாலரிற்குமான தரமான ஆடைதயாரிப்பதில் 5 வருட அனுபவம்
- அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனச் சான்றிதழ் என்பவற்றை உடையவராக இருத்தல் வேண்டும்.

*மேற்கூறிய தகைமையுடையவர்கள் தங்களது சுயவிவரம் அடங்கிய விண்ணப்பத்துடனும் சான்றிதழ்களின் பிரதிகளுடனும் 25-03-2006 முற்பகல் 10 மணிக்கு நேர்முகத்தேர்விற்கு முல்லை தொழில்நுட்பக்கல்லூரிக்கு சமுகமளிக்கும் படி கேட்டுக் கொள்கின்றோம்.*

தலைவர்,
இயக்குநர் சபை,
முல்லைதொழில் நுட்பக்கல்லூரி,
முல்லைத்தீவு.

(சி/48430)(26.16.19)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 08 - 02 - 1947

மறைவு 19 - 02 -2006



*தனங்கிளப்பு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வவுனியா இலுப்பக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட*

அமரர்
**சண்முகம் திருநாவுக்கரசு**

*எதிர்வரும் (21-03-2006) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

5ஆம் ஒழுங்கை,
இலுப்பக்குளம்,வவுனியா.
தொ.பே0776537191

-குடும்பத்தினர்.
(48255)
(26.16.19)

## ஆள்கள் தேவை

புடைவை வியாபார நிறுவனத்திற்கு
1) காசாளர்
2) வியாபார அனுபவம் உள்ளவர்கள்
3) பழக விரும்புபவர்கள்
உடன்தேவை

விளம்பர இல.2833
மே/பா உதயன்
(48245) (26.16.19)

## காணி விற்பனைக்கு

பலாலி வீதி உரும்பிராய்ச் சந்திக்கு அருகில் தபால் அகம் அமைந்துள்ள 6 ¾ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: கொழும்பு,
தொ.பே.011 2587508
(48315) (26.16.19)

## மாடி வீடு விற்பனைக்கு

கல்வியங்காடு - ஞானபாஸ்கரோதய சங்கத்துக்கு அருகில் நவீனமுறையில் அமைக்கப் பட்ட சகல வசதிகளுடனும் கூடிய மாடி வீடு விற்பனைக்குண்டு. (26.16.19)

தொடர்பு: கொழும்பு, (48314)
தொ.பே.011 2587508

## டாரி எயர் கொம்பிரசர்

DARI AIR COMPRESSORS

டிரெக்ட் கப்பல் மற்றும் பெல்ட் டிரிவன்.

உள்ளடக்கம்
24 முதல் 240 லீற்றர்



சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிறைவேட்) லிமிட்டட்
524, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
பெக்ஸ்: 2446554

# ஹர்த்தால், ஆர்ப்பாட்டம், பஸ் எரிப்பு

# இவற்றால் மக்களின் இயல்பு நிலை பாதிப்பு!

தொடரும் சம்பவங்கள் ஏப்ரல் பேச்சுகளை கேள்விக்குறியாக்கியுள்ளன. ஏப்ரலில் நடைபெறத்திட்டமிட்டுள்ள ஜெனீவாப் பேச்சு பாரிய சவால்களையும், சந்தேகங்களையும் எதிர்நோக்கியுள்ளது.

கடந்தவாரம் இதனை உறுதிப்படுத்துமாப்போல் பல்வேறு சம்பவங்கள் வெளிப்படையாகவும், திரைமறைவிலும் இடம்பெற்று முடிந்திருக்கின்றன.

மட்டு. - அம்பாறை மக்களிடம் ஏப்ரலில் (சித்திரையில்) நல்லது நடக்கலாமென்ற எதிர்பார்ப்பு பூரணமாக மறைந்துவிட்டது எனலாம். அதற்கு வாழைச்சேனை மாணவர் இருவர் வெள்ளைவான் கடத்தல் விவகாரம், அதனைத் தொடர்ந்து ஹர்த்தால், ஆர்ப்பாட்டம், இரு பஸ்கள் எரிப்பு மறுநாளும் (வெள்ளி) ஹர்த்தால், இயல்புநிலை பாதிப்பு என்பன சான்றுபகரும் காரணியாகத் தொடருகின்றன.

சமாதானப் பேச்சின் ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் திரையிலிருந்து தனது நடிப்பை முடித்துவிட்டுச் சென்றிருப்பது ஆரோக்கியமான சமாதானச் சூழலை ஏற்படுத்துமென்று மட்டு. - அம்பாறை மக்கள் எண்ணவில்லை.

மேலும், நோர்வே அனுசரணைத் தரப்பிடம் விடுதலைப் புலிகளின் அரசியலாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சமாதானமா? ஒட்டுப் படையா? இலங்கைக்குத் தேவை என்பதை ஸ்ரீலங்காவே தீர்மானிக்கட்டும்' என்ற பாணியில் காட்டமாகக் கூறியுள்ளார்.

**அம்பாறை மடல்**

கடந்தவாரம் இதே பத்தியில் ஒட்டுப் படையிடமிருந்து ஆயுதங்களைக் களைய அரசு பாரிய விலையைக் கொடுக்க வேண்டியிருக்கும். அதாவது ஜெனீவாப் பேச்சின் தீர்மானம் நடைமுறைக்கு வராது. அதாவது சமாதானம் சந்தேகமே என்று எழுதியிருந்தமையை வாசகர்கள் அறிவார்கள்.

அதேநிலையை, சு.ப.தமிழ்ச்செல்வன் இன்று அரசிடம் பகிரங்கமாகக் கூறியுள்ளார். இனவாத ஜே.வி.பி., ஹெல உறுமய அரசின் நிழலிலுள்ளவரை சமாதானம் எட்டப்பட முடியாத ஒன்று. ஒட்டுக்குழுக்கள் இயங்குது ஒன்றும் புதியவிடயமல்ல. கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட், அமெரிக்கா தொடக்கம் இறுதியாக 'பவ்ரல்' அமைப்பின் தலைவர் கிங்ஸி ரொட்றிக்கோ வரை ஆதாரத்துடன் கூறியுள்ளனர்.

இவ்வளவு பகிரங்கமாக ஊடகங்கள் இதனை வெளிப்படுத்தியும் அரசு மௌனமாக இருக்கின்றது என்றால் அதில் சந்தேகம் உள்ளது என்பது வெள்ளிடைமலை. ஊர் வாயை மூட உலை மூடி இல்லையல்லவா?

முஸ்லிம்களிடையே ஜிஹாத் குழு, ஜம்மய்துல் இஸ்லாம் என்ற குழுக்கள் இருப்பதை ஜெனீவாவில் அன்ரன் பாலசிங்கம் முதல் இலங்கையில் கிங்ஸ்லி ரொட்ரிகோ வரை புட்டுக்காட்டியுள்ளனர்.

## 'சித்திரையில் நல்லது நடக்கும் என்ற எதிர்பார்ப்பும் பொய்த்துவிட்டது

இதனை முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் ஹசன்அலி, ஹிஸ்புல்லா போன்றோர் மறுக்கப்போய் மூக்குடைபட்டுள்ளனர். முழுப் பூசனிக்காயைச் சோற்றுக்குள் மறைக்கும் செயல் என்று மறுதரப்பினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

**காரைதீவுப் பிரஜைகள் குழுத் தலைவர் எழுப்பிய கேள்வி**

இதற்கும் மேல் ஒருபடி சென்று முன்னாள் காரைதீவு பிரஜைகள் குழுத் தலைவர் கே.மகாலிங்கம் காரைதீவிலிருந்து 1985/1990 காலப்பகுதியில் முஸ்லிம் பிரதேசங்களுக்குச் சென்று 229 தமிழர்களைக் கொன்றது யார்? எனக் கேள்வியெழுப்பியுள்ளார். சாதாரண முஸ்லிம் மக்களா? இல்லையெனக் கூறும் அவர் அங்குள்ள ஆயுதக்குழு தான் இவ் வேலையைச் செய்துள்ளது. அது 'ஜிகாத்' என்ற அமைப்புத்தான் என்று கூறியுள்ளார்.

இதற்கு மத்தியில் கடந்த வியாழனன்று அரச சேவை தொழிற் சங்கங்களின் வேலை நிறுத்தம் மட்டு. - அம்பாறை மாவட்டங்களில் எதிரொலித்தது. பாடசாலைகள் மூடப்பட்டன. அரச அலுவலகங்கள் முடங்கின. பொது நிர்வாக அமைச்சின் 2006/1 சுற்றறிக்கை 30வீத சம்பள உயர்வைமட்டும் வழங்கியதற்கு ஆட்சேபம் தெரிவித்து இப் போராட்டம் இடம்பெற்றது. மட்டு. - அம்பாறை மாவட்டங்களில் முழுமையாக இப் போராட்டம் இடம்பெறவில்லையென்பது வேறு விடயம்.

இதனிடையே உள்ளூராட்சித் தேர்தல் பற்றி கடந்தவாரமும் இதே பத்தியில் ஊசலாடும் தேர்தல் என்று குறிப்பிட்டிருந்தோம். முன்னொருபோதுமில்லாத வகையில் நீதிமன்ற வழக்குகள் இத்தேர்தல் பற்றிப் பதியப்பட்டிருப்பதால் இனிவருங்காலங்களில் தேர்தல் உரிய தினத்தில் உரிய சபைக்கு நடத்தப்படுமென்பதில் குழப்பகரநிலை எற்படுமென்று மக்கள் கருதுகின்றனர்.

பல வழக்குகள் நீதிமன்றின் தீர்ப்பை எதிர்பார்த்துக் காத்திருப்பதால் தேர்தலை ஒத்திவைப்பதற்கு சாத்தியமிருப்பதுபோல் தெரிகிறது.

ஏப்ரல் மாதத்திற்கிடையில் போர்மூளும் அபாயம் இருப்பதாகவும் ஒரு பேச்சு மக்கள் மத்தியில் அடிபடுகிறது. அதில் கூடுதல் நியாயமில்லாத போதிலும், அடுத்தகட்டப் பேச்சுகள் சறுக்கினால் இவர்களது பேச்சில் யதார்த்தமிருப்பதை ஏற்றுக்கொள்ளவேண்டி வரும்.

அமரர் ஜோசப் எம்.பியின் இடத்திற்கு இதுவரை ஒருவர் தெரிவு செய்யப்படவுமில்லை; நியமிக்கப்படவுமில்லை. மட்டு. - அம்பாறை மக்கள் சேவை செய்யும் ஒருவரை விரும்புகின்றனர் என்பது மட்டும் உண்மை. கதிரைக்கும் கட்டிலுக்கும் பாரமாயிருப்பவர்களால் சமூகத்தில் ஒருபோதும் நன்மை கிடைக்காது. அதனை மீண்டுமொரு முறை அழுத்திச் சொல்ல மக்கள் விரும்புவதெல்லாம் சமகால நிகழ்வுகளின் அனுபத்திலிருந்தே என்பதை மறுக்க முடியாது.

எது எப்படியெனினும் முக்கியஸ்தர்கள் 'கவனமாக' இருக்க வேண்டிய முக்கிய கட்டமாக இக்கால கட்டம் இருக்கிறது. எதுவும் நடக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

தரம் 8 வரலாறு பாடநூலில் இலங்கையின் இன ரீதியான வீதம் குறிப்பிடப்பட்டுள்ளது. இத் தரவில் வடக்கு - கிழக்குத் தரவுகள் உள்ளடக்கப்படாமையினால் இலங்கைத் தமிழர்களின் .வீதம் முஸ்லிம்களை விடக் குறைந்துள்ளது. இத்தரவுப் பட்டியல் மாணவர்களுக்கு அவசியம் தானா? என்று உண்மையுள்ள தமிழ் அதிபர்கள் வினா எழுப்புகின்றனர்.

தரம் 9 பாட நூல் தமிழ் மொழி மூல மாணவர்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லையென தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் ரி.மகாசிவம் தேசிய கல்வியகம், கல்வி வெளியீட்டுச் சபையையும் சாடுகிறார்.

இச் சாடலும் கண்டிப்பும் காலாகாலமாகத் தொடருகின்றனவே தவிர 'நிவர்த்தி' ஏற்படுத்தப்படுவதில்லை என்ற ஆதங்கமும் தமிழ் மொழி மூல மாணவருக்கு உண்டு.

நாளையும் நாளை மறுதினமும் நடை

**இராஜபுத்திரன்**

பெறவிருந்த அஞ்சல் மூல வாக்களிப்புகள் 22 சபைகளுக்கு நடைபெறாது என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க கூறியுள்ளார். இதில் அம்பாறை - மட்டு. மாவட்டங்களில் நிந்தவூர், நாவிதன் வெளி, பொத்துவில், கல்முனை, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று ஆகிய உள்ளூராட்சி சபைகளும் அடங்குகின்றன. இதற்கும் நீதிமன்ற வழக்குகளே காரணமென்று சொல்லப்படுகிறது.

**ஜனாதிபதித் தேர்தல் கொடுப்பனவு இதுவரை இல்லை**

இதனிடையே கடந்த ஜனாதிபதித் தேர்தல் கடமைகளுக்காக அலுவலர்க்கான அறிவு

(16ஆம் பக்கம் பார்க்க)

# உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுமா? நடைபெறாதா?

# அங்கலாய்ப்பில் திருமலை மக்களும், வேட்பாளர்களும்!

திருகோணமலை மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இந்தத் தேர்தல் நடைபெறுமா? இல்லையா? என்ற திரிசங்கு சொர்க்க நிலையில் பல்வேறு அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் உள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்தத் தோதல் நடவடிக்கைகளை ஒத்திவைக்குமாறு கோரியுள்ள நிலையில் இந்தக் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் செய்வதறியாத நிலையில் திகைப்பிற்கு உள்ளாகி இருப்பதனையும் காண முடிகின்றது. இந்த நிலையில் இந்த மாவட்டத்தில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மந்த கதியிலேயே சென்றுகொண்டிருப்பதனையும் காணக் கூடியதாக உள்ளது.

இந்த மாவட்டம் 2 ஆயிரத்து 726.80 சதுர கிலோ மீற்றர் பரப்பளவினை உள்ளடக்கியதாக உள்ளது. 2004ஆம் ஆண்டு இங்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் தொகை 2 லட்சத்து 38 ஆயிரத்து 755 ஆகும் இந்த மாவட்டத்தில் இதுகால வரை 12 உள்ளூராட்சி மன்றங்கள் செயற்பட்டு வந்துள்ளன. தற்போது கிண்ணியாவில் புதியதொரு பிரதேச சபை உருவாக்கப்பட்டதன் பிரகாரம் உள்ளூராட்சி மன்றங்களின் எண்ணிக்கை 13 ஆக அதிகரித்துள்ளது. இதன் பிரகாரம் இங்குள்ள 13 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் மொத்தமாக 118 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.

இவற்றைப் பொறுத்தவரை திருகோணமலை நகராட்சி மன்றம், கிண்ணியா நகராட்சி மன்றம் தவிர்ந்த ஏனையவை பிரதேச சபைகளாகும்.திருகோணமலை நகராட்சி மன்றத்திற்கென 12 உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் வகையில் ஒவ்வொரு குழுவிலிருந்தும் 16 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். மொத்த வாக்காளர் தொகை 36 ஆயிரத்து 961 ஆகும். இதே போன்று கிண்ணியா நகராட்சி மன்றத்திற்கென 7 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். இங்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் தொகை 20 ஆயிரத்து 794 ஆகும்.

இதேவேளை, திருகோணமலை நகரின் புறநகர் கிராமங்களை உள்ளடக்கியதான திருகோணமலை பிரதேச சபைக்கென 9 உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் வகையில் ஒவ்வொரு குழுவிலிருந்தும் 12 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இந்தப் பிரதேச சபைக்கான வாக்காளர் தொகை 29 ஆயிரத்து 321

## கிழக்கின் தற்போதைய நிலைவரம் இதுவே!

ஆகும். மேலும் குச்சவெளி, தம்பலகாமம், சேருவில, மொறவேவா மற்றும் பதவிசிறிபுர பிரதேச சபைகளுக்கு தலா 9 உறுப்பினர்களை தெரிவுசெய்யும் வகையில் ஒவ்வொரு குழுவிலிருந்தும் 12 வேட்பாளர்

**திருமலைமடல்**

வீதம் போட்டியிடுகின்றனர். கந்தளாய் மற்றும் மூதூர் பிரதேச சபைகளுக்கு தலா 11 உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் வகையில் ஒவ்வொரு குழுவிலிருந்தும் 15 பேர் வீதம் போட்டியிடுகின்றனர்.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கிண்ணியா பிரதேச சபையின் உறுப்பினர் தொகை 7 இங்கு ஒவ்வொரு குழுவிலிருந்தும் 9 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். குச்சவெளி பிரதேச சபைக்கான வாக்காளர் தொகை 22 ஆயிரத்து 10 ஆகும் . தம்பலகாமம் பிரதேச சபைக்கான வாக்காளர் தொகை 17 ஆயிரத்து 228 ஆகும்.

புதிதாக உருவாக்கப்பட்ட கிண்ணியா பிரதேச சபையின் வாக்காளர் தொகை 13 ஆயிரத்து 755. வெருகல் பிரதேச சபையின் வாக்காளர் தொகை 5 ஆயிரத்து 139 எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெருகல் பிரதேச சபையைப் பொறுத்த வரை இங்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி மட்டுமே தனது வேட்பு மனுவினை சமர்ப்பித்துள்ள நிலையில் ஏகமனதாக இந்தக் கட்சியின் சார்பில் போட்டியிட்டவர்களில் 5 உறுப்பினர்கள் போட்டியின்றி தெரிவாகி உள்ளனர்.

இந்த நிலையில் வேட்பாளர்களுக்கான அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளன. நேற்று முதல் இந்த மாவட்டத்தில் வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகளும் ஆரம்பமாகி உள்ளன.

இந்த நிலையிலேயே ஆமைக்கும் முயலுக்கும் இடையிலான போட்டியாக இந்தத் தேர்தல் நடைபெற்று விடுமா அல்லது தேர்தலே நடக்காமல் விட்டுவிடுமா என அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் இவற்றின் வேட்பாளர்களும் தலையைப் பிய்த்துக்கொள்ளும் நிலை உருவாகியுள்ளது.

கடந்த முறையும் இவ்வாறு தேர்தல் தொடர்பாக அறிவிக்கப்பட்ட நிலையில் வேட்பாளர்கள் சிலர் பெருந்தொகைப் பணத்தில் தேர்தல் சுவரொட்டிகளையும் பிரசுரங்களையும் பல்வேறு வர்ணங்களில் அச்சடித்து மிகவும் கவர்ச்சிகரமாக வெளியிட்டிருந்தனர். இதன் விளைவாகத் தங்களுக்கு பலத்த நட்டம் ஏற்பட்டதாக கூறும் இவர்கள் இந்த முறையும் பணத்தைச் செலவழித்து விட்டு, தேர்தலே நடக்காவிட்டால் என்ன செய்வது என்ற நிலையில் உட்காந்திருப்பதனையும் காண முடிகின்றது. இரண்டும் கெட்டான் நிலையாக தங்கள் நிலை மாறிவிடுமோ எனவும் இந்த வேட்பாளர்கள் சிந்திக்கின்றனர்.

இந்த நிலையில் கந்தளாய் கோமரங்கடவை, பதவிசிறிபுர, மொறவேவ போன்ற பகுதிகளில் போட்டியிடும் ஜாதிக ஹெல உறுமய, மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திர ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு போன்ற கட்சிகளும் சுயேச்சைக் குழுக்கள் பலவும் இந்தத் தேர்தல் எப்படியும் நடைபெறும் என்ற நம்பிக்கையில் தங்கள் பிரசாரப் பணிகளை தீவிரப்படுத்தி வருகின்றன.

இவ்வாறு தேர்தல் தொடர்பான நிலைகள் அரசியல் கட்சிகளையும் சுயேச்சைக் குழுக்களையும் படாதபாடுபடுத்திக் கொண்டிருக்கின்றது ஆனால் வாக்காளர்களோ இந்தத் தோதல் தொடர்பாக முழுமை

**சங்கீத்**

யான அக்கறையும் ஆர்வமும் கொண்டவர்களாகவே காணப்படவில்லை தேர்தல் நடந்தால் பார்த்துக் கொள்வோம் என்ற சிந்தனையிலேயே இருப்பதனையும் காண முடிகின்றது.

தேர்தல் நடக்குமா நடக்காதா என பல்வேறு எதிர்பார்ப்புகளை இந்தத் தேர்தல் அறிவிப்பு உருவாக்கி விட்டது. அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும இந்த சிந்தனையிலேயே நாள்களை எண்ணிக்கொண்டிருக்கின்றன.இன்னும் சில தினங்கள் தானே அதனைப் பொறுத்திருந்து பார்ப்போம். *

சுன்னாகத்தில்...
எரிக்கனேஸ் ஸ்தாபனத்தாரின் 5ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விசேட விலைக்கழிவில்...

- இலவசமாக கண்களைப் பரிசோதித்துத் தரமான மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
- இழந்த பற்களுக்கு நிகரான சங்குப் பற்களை உங்கள் முகப்பொலிவிற்கேற்ப கட்டிக் கொள்ளவும்.
- மிதப்புப் பற்களுக்கு நவீன முறையில் கிளிப் பொருத்திக் கொள்ளவும்.

**இன்றே நாடுங்கள்**
**எரிக்கனேஸ் பல், மூக்கு கண்ணாடியகம்,**
**86, K.K.S. வீதி, சுன்னாகம்.**

| தலைமை நிறுவனம் | கிளை |
|---|---|
| 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | 91, K.K.S.வீதி, கொக்குவில், |
| தொ.பே.222 2486 | 222 5233 |

(48218)(26.16.45)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
30 - 07 - 1947



மறைவு
19 - 03 - 2005

### திருமதி பிலிப் மாகிறேற் அக்னஸ்

*அன்பின் உறைவிடமாய்*
*பண்பின் சிகரமாய் எம்முடன் வாழ்ந்து*
*நீங்கள் எங்களை விட்டு - சென்று*
*இன்றுடன் ஓர் ஆண்டு*
*முடிந்ததம்மா... நாம் இம்மண்ணில்*
*வாழும் காலம்வரை உங்கள்*
*நினைவு எம்முடன் என்றும் நிலைத்திருக்கும்!*

மல்வம்,
உடுவில், சுன்னாகம்.
(48058)
(26.16.45)
-குடும்பத்தினர்.

## தேவை

**முன் அனுபவம் உள்ள**
1. கணனி இயக்குநர்
2. புத்தகம் கட்டுநர் (Book Binder)

உடனடியாகத் தொடர்புகொள்ளவும்

**அமெரிக்கன் சிலோன்**
**மிஷன் அச்சகம்,**
**இல.464, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**021 222 9102**
(48221)
(26.16.45)

## வெற்றிடம்

- Quantity Surveyor
- Site Supervisor

*01-04-2006 இற்கு முன் விண்ணப்பிக்கவும்*

**City Builders**
**தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.**
(48239)(26.16.45)

## யாழ்ப்பாணத்தில் காணி விற்பனைக்கு

*நல்லூர் கோயிலிலிருந்து 800 m தூரத்தில் பருத்தித்துறை வீதி முகப்பைக் கொண்ட வீடு கட்டுவதற்கு அல்லது வியாபார ஸ்தாபனம் அமைக்க உகந்த ஒவ்வொன்றும் 1¾ பரப்பு விஸ்தீரணமுள்ள காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு. 53' அகலமும் 90' நீளமும் -02 துண்டுகள், 45' அகலமும் 106' நீளமும் -1 துண்டு*

**தொடர்பு: 0777382928, 0777325545**
(48429)(26.16.45)

**Danish Demining Group**
**18/10, Wyman Road, Nallur**
**Jaffna, Sri Lanka**
**E-mail: ddg@ddg.lk**
**jafofficemgr@ddg.lk**

## VACANCY NOTICE

**Post Title:** Logistics Assistant/Officer
**Duty Station:** Jaffna

### Major Duties and Responsibilities:

- Follow up of stores requirements.
- Planning purchase/deliveries.
- Monitor the goods sent for repair.
- Submit periodical store reports.
- Monitor/organize vehicle maintenance including checking fuel bills and fuel consumption.
- Perform any other duties as required.

### Minimum Qualification and Experience Required:

- GCE A/L with a credit pass for English in GCE O/L.
- Very good knowledge in Spread sheets, knowledge in Word.
- Able to do correspondence independently.
- Able to work in harsh and pressure environment. Able to travel extensively.
- Able to do multitask and ensure that all administrative requirements are met.
- Good Team Player.
- Ability to perform field assignments.
- Initiative, prioritisation and organisational skills and should be able to work independently.

### Language Requirements:

Proficiency in English, both oral and written.

### Specialised Training / Other Skills:

- Proven capacity for team work
- Able to work additional hours in an emergency environment.
- Ability to work in an international environment.
- Respect for diversity.

### How to apply:

Duly filled applications should be sent to reach Danish Demining Group, 18/10 Wyman Road, Jaffna or email to jafofficemgr@ddg.lk.

Closing Date: Sunday 26th March 2006.

(48202)

## ஹர்த்தால், ஆர்ப்பாட்டம்.....

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

றுத்தல் கூட்டத்தில் கலந்தகொண்டமைக்கு அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இன்னும் அதற்கான கொடுப்பனவை வழங்கவில்லை என முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த தேர்தலும் வருகின்ற நிலையில் முந்திய கொடுப்பனவு அம்பாறை மாவட்டத்தில் வழங்கப்படாமை குறித்து விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே ஆழிப்பேரலை வீடமைப்புக் குறித்து பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. ஆனால், வடக்கு - கிழக்கு யுத்தத்தால் சேதமடைந்த வீடுகள் பற்றி 'நேர்ப்' பேசுகிறது.

அம்பாறை மாவட்டத்தில் கடந்த யுத்த வன்முறை காலத்தின் போது சேதமடைந்த வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடுகளை அமைக்க வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டம் (நேர்ப்) நடவடிக்கை எடுத்துவருகிறது.

இதற்கென 192 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு கணனிமூலம் பயனாளிகள் தெரிவு இடம்பெற்று வீடுகளமைக்க நிதியும் தொழிநுட்ப ஆலோசனையும் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வருடம் 30 கிராமங்கள் தெரிவு செய் யப்பட்டு அங்கு 500 வீடுகள் தலா இரண்டரை லட்சம் ரூபாசெலவில் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட பிரதிதிட்டப் பணிப்பாளர் ஏ.எல். அன்வர்தீன் தெரிவித்தார்.

பொத்துவில், திருக்கோவில், ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, காரைதீவு, சம்மாந்துறை, மகாஓயா, நாவிதன்வெளி ஆகிய பிரதேசங்களிலுள்ள 30 கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு தற்போது விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்பட்டுவருகின்றன.

வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டப் பணிப்பாளர் செ.பத்மநாதன், பிரதித் திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை ஆகியோர் ஒப்பமிட்ட விண்ணணப்பப் படிவங்களில் மாத்திரம் நிரப்பவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

5 நாள்களில் தொழில்நுட்ப அலுவலர் கிராம புனர்வாழ்வு உறுப்பினர், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதி ஆகியோர் கலந்துகொள்ளும் குழுவினர் தாங்கள் வீடுகளுக்கு வருகை தந்து உண்மையான விடயங்களைக் கணிப்பிடுவர்.

மாதம் 2ஆயிரத்து 500 ரூபாவிற்கு குறைந்த வருமானம் பெறும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கே இவ்வீடுகள் வழங்கப்படுமென பணிப்பாளர் அன்வர்தீன் மேலும் கூறினார். பெண்கள், அங்கவீனர், உயிரிழப்பு ஒரு குடும்பத்தில் இருப்பின் முன்னுரிமை வழங்கப்படும் என்றும் கூறினார். கடந்த வருடம் 11 கிராமங்களில் 309 வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டன. இவ்வருடம் 30 கிராமங்களில் 500 வீடுகள் அமைக்கப்படும். ஆகஸ்ட் மாதமளவில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுமென அன்வர்தீன் மேலும் கூறினார்.

இத்திட்டம் அம்பாறைக்கு மட்டுமல்ல வடக்கு - கிழக்கின் எட்டு மாவட்டங்களுக்கும் பொருந்தும். கடந்தகால யுத்தத்தில் வடக்கு - கிழக்கில் 40 லட்சம் வீடுகள் சேதமானது. அதில் 10 வீதம் அதாவது, 40 ஆயிரம் வீடுகளை 4 வருடங்களில் நிர்மாணிக்க இத்திட்டம் நடவடிக்கை எடுத்துள்ளது. உலக வங்கி இதற்கென 7 கோடி 70 லட்சம் யூ.எஸ். டொலரை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆழிப்பேரலை வீடமைப்புப் பணிகள் ஊடகங்களில் பெரிதாகக் காட்டப்படுகின்றன. ஆனால், ஆமை வேகத்தில் பணிகள் நகர்கின்றன என்பதே யதார்த்தமாகும். இடைத்தங்கல் முகாம்களில் வாழும் அகதிகளுக்கு அதுவே நிரந்தரமாகும் ஆபத்தும் நிலவுகிறது. தரவு சேகரிக்கும் பஸ்கள் மாவட்டத்திற்கு மாவட்டம் திரிகின்றன.

எத்தனை தகவல்கள், தரவுகள் திரட்டினாலும் அநீதியும், ஊழலும் ஆழிப்பேரலை நிவாரணத்தில் தொடரவே செய்கின்றன. நெல் அறுவடை தொடங்கியும் அரச, நெல் கொள்வனவு அரைகுறையாக நடக்கிறது. இதனால் விவசாயிகள் நஷ்டம் அடைய வேண்டியுள்ளது. பசளை மானியம் தொடர்ந்தால் அடுத்த போக வேளாண்மை செய்வதென மக்கள் முடிவு செய்துள்ளனர். ஆட்டிறைச்சியின் விலை ஒரு கிலோ 650 ரூபாவாக உயர்ந்துள்ளது. கோழி இறைச்சியின் மௌசு குறைந்துள்ளது. பொருள்களின் விலை நாளாந்தம் கூடிச் செல்கிறது.

## பதவி வெற்றிடம்

**யாழ்.நகரில் இயங்கும் பிரபல வர்த்தக நிலையத்திற்கு கீழ்க்காணும் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

| | |
|---|---|
| 1.பதவி : | பொருள்கள் விநியோகஸ்தர்கள் (ஆண்கள் மட்டும்) (VAN SALESMAN) |
| கல்வித் தகைமை : | தமிழ், கணிதம் சித்தியடைந்திருத்தல் வேண்டும் (O/L) |
| குறிப்பு: | ஆங்கிலம் வாசிக்க, எழுதத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |

**உங்கள் விண்ணப்பங்களை சொந்தக் கையெழுத்தில் எழுதி 23-03-2006 வியாழக்கிழமைக்கு முன் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்**

**றூபா பன்முக வர்த்தக நிலையம்**
**104 A, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(48211)(26.16.45)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லையா பாக்கியம்



மூளாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா பாக்கியம் அவர்கள் 14-03-2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் மகேஸ்வரி (சின்னமணி)யின் அன்புச் சகோதரியும் ஆனந்தகிருஸ்ணகுமார், சரஸ்வதி ஆகியோரின் அன்புத் தாயும் நாகேந்திரம், சிவகாமவல்லி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-03-2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பித்தனை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய் தெற்கு,
மூளாய்.
(சி/48427)(26.16.45)

தகவல்:
*மக்கள், மருமக்கள், பேறாமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.*

# 60 மாதங்கள் அமெரிக்கச் சிறையில் வாடிய தமிழ் இளைஞன் விடுதலை

வாஷிங்டன், மார்ச். 19

அமெரிக்காவில் அரசியல் தஞ்சம் கோரிச் சென்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவர் அந்நாட்டினுள் சட்ட விரோ தமாக உட்புக முயற்சித்தார் என்ற காரணத்திற்காக 5 வருடங்கள் சிறையில் அடைக்கப்பட்ட பின்னர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அகிலன் நடராஜன் என்ற 25 வயதுடைய இந்த இளைஞர் கடந்த 2001ஆம் ஆண்டு அமெரிக்காவிற்கு சென்றிருந்தார்.

விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் என்ற சந்தேகத்தின் பேரில் அரச படையினர் தன்னை சித்திரவதை செய்த காரணத்தால் தஞ்சம் கோரி அமெரிக்காவுக்கு வந்ததாக இந்த இளைஞன் கூறியிருந்தார். ஆனால் அவர் மீது எதுவித குற்றச்சாட்டுக்களையும் தாக்கல் செய்யாது விசாரணை என்ற அடிப்படையில் அமெரிக்க அதிகாரிகள் சிறையில் அடைத்துள்ளனர்.

இவரது வழக்கினை விசாரித்த நீதிபதி, அமெரிக்க உயர் நீதிமன்ற ஆய்வுகளுக்கமைய அவரது சிறைவாசம் அமெரிக்க சட்டத்திற்கு விரோதமானது என்று தீர்ப்பளித்து அவரை சிறையில் இருந்து விடுதலை செய்ய உத்தரவு பிறப்பித்துள்ளார்.

வழமையாக இத்தகைய வழக்குகளில் சம்பந்தப்பட்ட ஒருவரை 6 மாதகாலம் வரையே சிறையில் அடைக்க சட்டம் அனுமதித்திருந்தும் தமிழ் இளைஞர் 60 மாதங்கள் சிறையில் இருந்தது வேதனைக்குரியது. எந்தவிதமான காரணங்களாலும் இத் தண்டனையை நியாயப்படுத்த முடியாது என்று நீதிபதி தமது தீர்ப்பில் மேலும் கூறியுள்ளார்.

இணையதளம் ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கின்றது. (ஐ)

# அபிவிருத்திக்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழமையான நடைமுறைகளை மீறியே, யாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைமை என்னும் எலும்புத்துண்டினை டக்ளஸின் முன்னால் போட்டிருந்தனர். மாறி மாறி வந்த ஸ்ரீலங்கா அரசாங்கங்களிற்று வாலாட்டிக் கொண்டு போட்ட பிச்சையை நன்றியுடன் ஏற்றுக்கொண்ட ஒருவரை தமிழ் மக்களாகிய நாம் எக்காலமும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் காலூன்றவே முடியாது வேரறுந்து போய் அரசியல் வங்குரோத்து நிலையை எட்டியுள்ள இவர் என்ன செய்கிறார்? தமிழ் பேசும் மக்களைப் படுகொலை செய்வது - பெண்களை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திக் கொல்லுவது - தமிழர்களை அச்சுறுத்தி அவமானப்படுத்துவது என்ற நீண்ட கடமைப் பட்டியலைப் படையினர் கொண்டுள்ளனர். அதே படையினரது பாதுகாப்பில் இந்தப் பெருமகன் உலாவந்த போது மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் வேண்டா வெறுப்புடனே அமர்ந்திருக்கக் காணப்பட்டனர்.

ஒன்று மட்டும் தெளிவாகிவிட்டது. தமிழ் பேசும் மக்களிடம் இருந்து அந்நியப்பட்ட இவர்கள் தேசத் துரோகிகளாகவே அடையாளம் காணப்படுகின்றனர். இவர்களிற்கு இங்கு இனி இடமில்லை. இவர்களுக்கென காத்திருப்பது வரலாற்றின் குப்பைத் தொட்டியே. சிலரை சிறிதுகா... ஏமாற்றலாம், வெகு பலரை பலகாலத்திறகு ஏமாற்ற முடியாது. அதேபோது வரலாறு தனது கடமையைச் சரிவரச் செய்யுமென்று காத்திருக்க முடியாது. வரலாறு மெல்ல நகர்ந்து போவதும் உண்டு. வேகமாகப் பாய்வதும் உண்டு. வரலாற்றை நகர்த்துபவர்கள் மக்களே. எனவே, கடந்த காலத்தைப் போலவே இனிவரும் காலத்திலும் இவர்களுக்கு மிஞ்சப்போவது அவலமும் மக்களது நிராகரிப்புமே.

உடல், உள உழைப்பாளராகிய நாம் எமது தேசியத்தினின்றும் அந்நியப்படாது வலுப்பெற்று தமிழ்த்தேசியத்தின் கொடியை உயர்த்திப்பிடிப்பதற்கான ஆவலினைக் கொண்டுள்ளோம். எனவேதான் இராணுவ துணைக் குழுவினரையும், ஸ்ரீலங்காப் படைத்தரப்பினரையும், ஸ்ரீலங்கா அரசாங்க நிர்வாகத்தையும், எமது மண்ணில் இருந்து அகற்றுவது என உறுதி பூண்டுள்ளோம் அதற்காகப் போராடவும் தயங்கமாட்டோம்.

தமிழ் பேசும் மக்கள் ஒன்றிணைந்து கரம் உயர்த்தி அண்டம் அதிர முழங்குவோம் - என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## நெல்லியடியில் விளையாட்டு விழா

கரவெட்டி, மார்ச். 19

கரவெட்டிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக் கிடையேயான 2006 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும் சிறப்பு விருந்தினர்களாக சிறுவர் பாதுகாப்பு நிதிய பங்காளிகள் அபிவிருதி முகாமையாளர் கே.மகேந்திரன், யாழ். மாவட்டபதில் விளையாட்டு உத்தியோகத்தர் பி.கிருபாகரன் ஆகியோரும் கலந்து கொள்வார்.

(ஐ-203)

## கரம்பைக் குறிச்சி வீதிக்கு மின்சாரம் வழங்க ஏற்பாடு

தென்மராட்சி, மார்ச் 19

வரணி கரம்பைக்குறிச்சி ஆழ்வார் மடம் வீதி மின்சாரம் வழங்குவதற்காக வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இலங்கை மின்சார சபையின் சாவக்சேரி அலுவகத்தினர் இது தொடர்பான பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

பிரதேசத்துக்கான மின் விநியோகம் விரைவில் இடம்பெறும் என்றும் - கூறப்பட்டது. (எ-122)

# மரண அறிவித்தல்கள்

## நல்லதம்பி முத்துக்குமாரு சண்முகநாதன் (இராசா)



(ஓய்வுபெற்ற புங்குடுதீவு, நயினாதீவு ப.நோ.கூ.சங்க கிளை முகாமையாளர்)

சரவணை, தில்லைமேடை சிவன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் 4ஆம் வட்டாரம் புங்குடுதீவை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது பண்டாரிக்குளம் வவுனியாவில் வசித்து வந்தவருமான முத்துக்குமாரு சண்முகநாதன் நேற்று (18.03.2006) சனிக்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும் புங்குடுதீவு காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை -அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கனகேஸ்வரியின் அன்புக் கணவரும், மதிவதனியின் (லண்டன்) அன்பு தந்தையும் நந்தகுமாரின் (லண்டன்), அன்பு மாமனும் திவ்யன், கவிநயா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு , அருளானந்தம் காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம், சரஸ்வதி, தனலட்சுமி, நாகேஸ்வரி மற்றும் பரஞ்சோதி (இந்தியா) தவமலர் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 295, நாவலர் வீதி, பண்டாரிக்குளத்தில் நாளை (20.03.2006) திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சனாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*36, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.*

(48325) (54-15-12)

தகவல்:
அ. குகனேசபிள்ளை
(பேறாமகன்-குகன்)

## மயில்வாகனம் அன்னம்மா

வடமராட்சி, நவிண்டில் கரணவாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் அன்னம்மா அவர்கள் நேற்று முன்தினம் (17.03.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் அவர்களின் அன்பு மனைவியும் புலேந்திரன் (இளைப்பாறிய இ.போ.ச. பருத்தித்துறைச் சாலை முகாமையாளர்), தேம்பாமலர், காந்திமலர், சோதிமலர், இராமநாதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற மின்னல்கொடி, பொன்னுத்துரை வன்னியசிங்கம், நடராஜா, இந்திரா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் ராஜ்குமார் (கனடா), ஜெயக்குமார் (லண்டன்),சிவேந்தினி (கனடா), விஜயன் (இ.போ.ச.) கார்த்திகா, நந்தகுமார் (இ.போ.ச) கமல்ராஜ் (இ.போ.ச.) நிரேஷன்,நித்தியா, நிதர்சன், நிசாந்தன், நிரோஜன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ரூபிதா, துஷாரகா,வினிதா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2006) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நவிண்டில் எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'கிணற்றடிப்புலம்' நவிண்டில், கரணவாய் வடக்கு, கரவெட்டி.*

(சி-48435) (54-15-12)

தகவல்:
குடும்பத்தினர்.

# கண்ணீர்க் காணிக்கைகள்

எமது யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்கள செயலகத்தில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளராகக் கடமையாற்றும் **செல்வி சுமிதாவின்** அன்புப் பேர்த்தி

**திருமதி வேலுப்பிள்ளை செல்வநாயகி** அவர்களின்

மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன்,அவரின் ஆத்மா இறைவனுடன் ஐக்கியமாக பிரார்த்திக்கின்றோம்.

(48322) (54-15-12)

**யாழ். மாவட்ட கிராம அபிவிருத்திக் குடும்பம்.**


**நாகம்ஸ் சுன்னாகம்**

ஜெயம்ரவி, காம்னா, பிரகாஷ்ராஜ்



**இதயத் திருடன்**

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00

**ராஜா யாழ்ப்பாணம்**

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு

ஸ்ரீகாந், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த

**மெக்ஷுரிப் பூக்கள்**

காட்சி நேரம் மாற்றப்பட்டுள்ளது

10.30, 2.00, 6.00, 9.00, (பு.நே.) ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

**நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்**

இன்றுமுதல்

ரஜனிகாந்த், ரோஜா, ராதாரவி நடித்த

**உழைப்பாளி**

காட்சிநேரம்: 10.00, 1.30, 4.30 (பு.நே.)




# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை மகேஸ்வரன்

(முன்னாள் யாழ். ப.நோ.கூ. சங்க கிளை முகாமையாளர்)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை மகேஸ்வரன் அவர்கள் (17.03.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் கந்தையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பாஸ்கர் (மகேஸ்கண்ணா -நோர்வே), சுதாகர் (நோர்வே), சுமதி (பிரான்ஸ்), சுகந்தினி (ஆசிரியை - முல்லைத்தீவு) ஆகியோரின் அன்புத்தந்தையும் விஜிதா (நோர்வே), ரஜனி (நோர்வே) கருணராஜா (பிரான்ஸ்), மோகனகுமார் (North sea limited) ஆகியோரின் மாமனாரும் மயூரி, யதுஷிகா, சிந்திகா, சோபியா, தனுஷன், டிலுக்ஷன், யதுஷன், சஹானா ஆகியோரின் அன்புப் பேரனும் பாக்கியலக்சுமி, சீதாலக்சுமி, கனகலிங்கம், உருத்திரசிங்கம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் சிவசுந்தரம், தேவராணி, மனோரதி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.03.2006) திங்கட்கிழமை முற்பகல் 9 மணிளவில் அவரது இல்லத்தில் நடைபெறு, பூதவுடல் தகனக்கிரியைக்க' க அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல. 47, புங்கன்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.*

(48324) (54-12-15)

தகவல்:
கே. மோகன்
(மருமகன்)

# மலையகத்திற்கு 9 ஆயிரம் ஆசிரிய நியமனங்கள்

மலையகத்தில் 9 ஆயிரம் தமிழ் மொழி மூலஆசிரியர்களை நியமிப்பதற்கு விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நேற்று மாலை நுவரெலியாவில் புதிதாக நிர்மானிக்கப்பட்ட மாவட்டச் செயலகத்தை திறந்துவைத்து உரை நிகழ்த்திய போதே ஜனாபதி இவ்வாறு தெரிவித்தார்.

அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணும் நட வடிக்கையில் அரச அதிகாரிகாரிகள் ஈடுபடவேண்டும். ஜனாதிபதியும் அரசும் அரசு துறையின் அதிகாரிகளைப் பாதுகாப்பதற்கு கடமைப்பட்டுள்ளனர்- என்று ஜனாதிபதி அங்கு தெரிவித்தார். (ஐ-14)

# முகமாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகமாலை மற்றும் ஓமந்தைச் சோதனை நிலையங்களில் படையினரின் சோதனை நடவடிக்கைகள் கடந்த சில தினங்களாகத் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

# தமிழீழ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ தேசியக் கொடியை தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனும் தமிழீழ காவல்துறைக் கொடியினை காவல் துறை நிர்வாகப் பொறுப்பாளர் கானகனும் ஏற்றினர்.

பயிற்சியினை தமிழீழ காவல்துறை நடுவப் பணியகக் கண்காணிப்பாளர் மாதவன் ஆரம்பித்து வைத்தார்.

காவல்துறை ஆய்வாளர் இமாக்கிரேட், மன்னார் மாவட்ட தமிழீழ காவல்துறைக் கண்காணிப்பாளர் ரஞ்சித்குமார் ஆகியோர் கருத்துரை நிகழ்த்தினர்.

சிறப்புரையை தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஆற்றினார்.

நிகழ்வில் 400 இற்கும் அதிகமான உறுப்பினர்கள் கலந்துகொண்டு பயிற்சிகளைப் பெற்றனர்.

காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் உரையாற்றுவதையும் பயிற்சியில் கலந்து கொண்ட உறுப்பினர்களில் ஒரு பகுதினரையும் முதலாம் பக்கத்தில் உள்ள படங்களில் காணலாம். (ஐ-14)

# தேர்தல் தொடர்பான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் காரணமாக தேர்தலை நடத்தக்கூடிய களநிலைமை காணப்படவில்லை. தேர்தல் பிரசாரங்களையும் அது தொடர்பான ஏனைய செயற்பாடுகளையும் அச்சமின்றி மேற்கொள்ளத்தக்க பாதுகாப்பான சூழல் வடக்கு - கிழக்கில் இன்னமும் உருவாகவில்லை என்பதைக் காரணங்காட்டி தேர்தல்களை ஒத்திவைக்குமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியிடம் ஏற்கனவே கோரி இருக்கின்றது. எனினும் அது தொடர்பான திட்டவட்டமான தீர்மானம் இன்னமும் எடுக்கப்படாததால் போட்டியிடும் அரசியல் க்ட்சிகள் குழப்பத்தில் உள்ளன.

தேர்தலை ஒத்திவைக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு செவிசாய்க்காமல் கடைசி நேரத்தில் தேர்தலை நடத்துவது என்று அரசும், தேர்தல் ஆணையாளரும் தீர்மானித்தால் தமிழின விரோத சக்திகளுக்கு அது சாதகமாகிவிடக் கூடும் என்று கருதி தமிழரசுக் கட்சி தனது தேர்தல் பிரசார நடவடிக்கைகளை நேற்று முதல் ஆரம்பித்திருக்கின்றது. வேட்பாளர்களை அறிமுகம் செய்வது உட்பட தேர்தல் ஏற்பாடுகளை அக்கட்சி ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில் -

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவது தொடர்பான உயர் மட்ட மாநாடு ஒன்றை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க நேற்றுக் கூட்டினர். ராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல்கள் செயலகத்தில் நேற்றுக் காலை இந்த மாநாடு நடந்தது.

மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள், மாவட்ட செயலாளர்கள் இந்த மாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்கள்(அரச அதிபர்கள்) இந்த மாநாட்டில் பங்குபற்றி தத்தமது மாவட்டங்களில் தேர்தலை நடத்துவது தொடர்பான சூழ்நிலையை விளக்கினர்.

தமது மாவட்டங்களில் தேர்தலை சுமுகமாக நடத்தக்கூடிய கள்நிலைமை காணப்படுகின்றது என்று அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மாநாட்டில் தெரிவித்தனர். ஏனைய மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்கள் தத்தமது மாவட்டங்களில் தேர்தலை நடத்துவதில் உள்ள பிரச்சினைகள், சிக்கல்களை தேர்தல் ஆணையாளரிடம் எடுத்துக் கூறினர்.

யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் தேர்தல் ஏற்பாடுகளைச் செய்வதற்கும் வாக்களிப்பதற்கும் ஏற்ற கள நிலை காணப்பட்வில்லை. வேட்பாளர்கள் பாதுகாப்பாகப் பிரசாரம் செய்யக்கூடிய நிலைமையும் காணப்படவில்லை. மக்களது பாதுகாப்பான நடமாட்டம் இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை என்று யாழ். மாவட்ட தெரிவுத்தாட்சி அலுவலரும் அரச அதிபருமான கே.கணேஸ் குறிப்பிட்டார்.

அதி உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் இருந்து வெளியேறிய 63 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்து வசிக்கின்றனர். அவர்கள் வாக்களிப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துவதிலும் சிரமங்கள் உள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தெரிவத்தாட்சி அதிகாரிகளின் கருத்துக்களைத் திரட்டிய தேர்தல் ஆணையாளர் தமது முடிவை ஓரிரு தினங்களில் அறிவிப்பதாகத் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தல் தபால் மூல வாக்களிப்பு நாளையும் நாளைமறுதினமும் நடைபெறவிருப்பதால் பெரும்பாலும், அதற்கு முன்பாக தேர்தல் ஆணையாளரின் முடிவு வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இதேவேளை -

வடக்கு - கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வாக்களிப்பை நடத்துவது குறித்தும் ஆலோசிக்கப்படுவதாக தேர்தல் திணைக்கள வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவக் கட்டுப்பாடற்ற புலிகளின் நிர்வாகப் பிரதேசங்களில் தேர்தல் ஒத்திவைக்கப்படலாம் என்றும் அந்த வட்டாரங்கள் கூறின. (ஐ-3)

# மீன்பிடித் தடையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடக்கும் போராட்டங்களில் ஈடுபடவும் மீனவர்கள் தீர்மானித்திருக்கின்றனர்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட போதே இராணுவப் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கில் மீன்பிடிப்பது தொடர்பான கட்டுப்பாடுகள் போர் நிறுத்த ஒப்பந்த காலத்துக்கு முன்பு இருந்தே நடைமுறையில இருந்து வந்தன. அவை யுத்த நிறுத்த காலப் பகுதியில் - 2005 டிசெம்பர் மாதத்துக்குப் பின்னர் - அதிகாரபூர்வமற்ற முறையில் தளர்த்தப்பட்டிருந்தன. ஆனால், கடற்படைப் படகுகள் தாக்கப்பட்ட பின்னர் கடற்படையினர் மீண்டும் சில கட்டுப்பாடுகளை அமுலுக்குக் கொண்டுவந்தனர். ஆனால், அண்மைக்காலத்தில் கட்டுப்பாடுகள் மீண்டும் தளர்தப்பட்டன. எனினும், களத்தில் உள்ள படைத்தளபதிகள் இது பற்றி ஆராய்ந்து வருகின்றனர். எங்கே கட்டுப்பாடுகளை விதிப்பது எங்கே தளர்த்துவது என்பதபற்றி அவர்கள் ஆராய்கின்றார்கள். பெரும்பாலும் அடுத்த வாரத்தில் இந்த விவகாரம் தீர்த்து வைக்கப்படும். இந்த விடயத்தைக் கையாளுமாறு கடற்படையினருக்கு ஏற்கனவே உத்தரவுகள் விடுக்கப்பட்டுள்ளன.

- இவ்வாறு இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். (ஐ-14)

# அறுவடைத் தொழிலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோரே கடத்தப்பட்டவர்கள் என்று தெரிய வந்துள்ளது.

இக்கடத்தல் சம்பவத்தைத் தமிழீழ விடுதலைப் புலிகள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

இது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அக்குறனை வயற்பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (12.03.2006) அன்று அறுவடை செய்துகொண்டிருந்த ஆறு அறுவடையாளர்களை வெலிக்கந்தை, தீவுச்சேனைப் பகுதியிலிருந்து சிறிலங்கா இராணுவத்துடன் வந்த கருணா குழுவினர் பலவந்தமாகக் கடத்திச் சென்றுள்ளனர்.

ஜெனீவாப் பேச்சுவார்த்தை தொடங்க இருந்த மார்ச் 22ஆம் நாளுக்கு முன் இராணுவ அதியுயர் பாதுகாப்புப் பகுதிகளாகிய வெலிக்கந்தைப் பகுதியிலும், மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் பல பிரதேசங்களில் பலபேர் கடத்தப்பட்டும், சுட்டுக்கொல்லப்பட்டும் உள்ளனர்.

இத்தகைய செயற்பாடுகள் நாளுக்கு நாள் மிகத் தீவிரமாக கருணா குழுவினராலும், இராணுவம் மற்றும் புலனாய்வுத் துறையினராலும் அரங்கேற்றப்பட்டுவருகின்றன.

இந்த நடவடிக்கைகளினால் மக்கள் மத்தியில் பீதி ஏற்பட்டு இச்சூழ்நிலையில் என்ன செய்வதென்று அறியாமல் நிலைகுலைந்துள்ளனர்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைப் பாதிப்புக்குள்ளாக்கியுள்ள இவ்வகையான நடவடிக்கைகள் மீண்டும் எமது தாயகப் பகுதியில் ஒரு யுத்தச் சூழலை உருவாக்கும் நிலையை தோற்றுவிக்கும்.

அத்துடன், இது தமிழ் மக்களுக்கு எதிரான பாரிய யுத்தநிறுத்த மீறலாகும். இச்சம்பவத்தை நாம் கண்டிக்கின்றோம் - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இணைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தி தொடர்பான கூட்டுச் செயற்பாடுகளை முன்னெடுப்பதும் வழக்கம். ஆனால் இந்த நடைமுறைக்குப் புறம்பாக யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரம நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்த நியமனம் முறைகேடானது. இதனை எதிர்த்து நீதிமன்றம் செல்லவுள்ளோம். - என்றும் தெரிவித்தார் மாவை சேனாதிராஜா.

ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு - கிழக்கு ஆளுநர் மொஹான் விஜேவிக்கிரம ஆகியோர் மாவட்ட இணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களாக நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்து கடந்த வியாழனன்று யாழ்.அரச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுவின் முதலாவது கூட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பகிஷ்கரித்திருந்தனர். (ஐ-3)

# நாட்டுப்பற்றாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி வரையான காலம் நாட்டுப்பற்றாளர் நினைவு நிகழ்ச்சிகளுக்குரிய காலமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

நாட்டுப்பற்றாளர் தினமான இன்று காலை 9 மணிக்கு பொதுச்சுடர், தமிழீழ தேசியக் கொடி ஆகியன ஏற்றப்படும்.

பின்னர் அன்னை பூபதி மற்றும் நாட்டுப்பற்றாளர்களின் உருவப்படத்திற்கு சுடரேற்றி மாலையிட்டு, மலர்தூவி அக வணக்கம் செலுத்தப்படும்.

ஏப்ரல் 19 ஆம் நாள் வரை இந் நிகழ்வுகள் பிரதேச ரீதியாக நடைபெறும்.

ஏப்ரல் 17,18,19 ஆகிய நாள்களில் காலை ஒன்பது மணிமுதல் உண்ணாவிரத நிகழ்வு பிரதேச ரீதியாக நடைபெறவுள்ளது. (ஐ-14)

THAMPI தம்பி
யாழ் - கொழும்பு - யாழ்
விமானசிட்டைகள்
மலிவு விலைகளில்
யாழ். நகரில்
90, கந்தப்பசேகரம் வீதி யாழ்ப்பாணம்.
T.P: 222 2823, 222 2504, Fax: 222 2040
கொழும்பு நகரில்
296/D4, காலி வீதி, வெள்ளவத்தை.
T.P: 0112360959, 011 2360960
Hotline: 0777 382343

UNIT
P4 கணனிகள்
மற்றும் ஊபர்கள்
கொழும்பை ஒத்த
விலையில்
347, K.K.S. Road, Manohara Junction, Jaffna.

MCS 324, Palaly Road, Jaffna. (Near "Alady " Junction)
Fast Track Classes
MS Office, Auto CAD
Visual Basic, VB.Net
Accounting Packages
GIT (A/L Students), ICT (O/L Students)
Hardware Workshop, Internet & E-mail
CorelDraw, PageMaker, Photoshop, Typesetting
Video Editing, Web Designing, Maya
வெளிநாடுகளில் அதிஉயர் வேலைவாய்ப்பினைப் பெற்றுத்தரும் Microsoft, CISCO, ComTIA, Sun Micro System நிறுவனங்களின் நேரடி சான்றிதழ்கள்.
ComTIA, A+ Hardware Technician, Network Professional
Microsoft Certified Professional, System Engineer
CISCO Certified Network Admin.
Sun Certified Java Programmer
31.03.06 இற்கு முன்Microsoft கணனிப்பொறியியல் கற்கைநெறிக்கு தோற்றும் எமது நிறுவன மாணவர்களிற்கு 30% கட்டணச் சலுகையை Microsoft நிறுவனம் வழங்குகின்றது.
***Supported by UNDP/JRRP***

காணவில்லை
எனது சிவப்புநிற "யமகா மேற் 90" மோட்டார் சைக்கிள் ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையத்திற்கு அருகில் வைத்துக் காணாமற் போயுள்ளது.
இயந்திர இலக்கம்: B90T 344366,
அடிச்சட்ட இலக்கம்: B90T 344366,
வாகன தொடர் இலக்கம்: 300-8991 ஆகும்.
தகவல் தருபவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: 221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 222-7505, 222-7625
(48327)

விசேட சலுகை

9000/=
எப்பிரதேசத்திலும் எந்த சூழ்நிலையிலும் வீட்டில் இருந்தவாறு உரையாடக்கூடிய முறையில் டயலொக், மொபிரெல் மேசைத்தொலைபேசிகள் பைக்கேச் இணைப்புக்களுடன் குறைந்த செலவில் பொருத்தித்தரப்படும்.
மொபிரெல் 300/=, டயலொக் 500/= பைக்கேச்சுகளுக்கு உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்.
உத்தரவாதம் உண்டு.
அனைத்து விதமான கையடக்கத் தொலைபேசிகளையும் அதற்கான உதிரிப்பாகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: நியூ பவர் செலுலர் டிரேடிங் கம்பனி 205/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 0773-518330 077-6660289
(46007) (54-12-11)

புதிய யூனிவேசல் அக்கடமி
(யா/இந்துமகளிர் கல்லூரி அருகே)
அளவையியல்
மாபெரும் கருத்தரங்கு
ஆரம்பம்:
20.03.2006
திங்கள் - 3.30 P.M.
ஆசிரியர்
P.கமல்

# மரண அறிவித்தல்

## செபமாலை மரியஅருளானந்தம்

கச்சாய் வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செபமாலை மரியஅருளானந்தம் அவர்கள் நேற்று (18.03.2006) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லிகோரியார் தேவாலயம் அருகில்,
கச்சாய் வீதி, சாவகச்சேரி. (48326)(30)

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.03.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.